BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 75 20 Friday July 2007 விற்பனைக்கல்ல

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




**VISION TRAVEL & TOURS**
உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிராயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு.....
SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE
Part of Serendip Lanka Travels
Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

**HSMP -UK - VISA**
The Highly Skilled Migrant Programme
தொடர்புகளுக்கு 07932 925 437
நீங்கள் பிரித்தானியாவிலோ வேறு நாடு ஒன்றிலோ உயர்கல்வி *(Bachelors Degree or above)* கற்றவராயின் நாம் உங்களுக்குரிய HSMP Visaவை பெற்றுத் தருகிறோம்.
✣ 100% Succees ✣ Money Back Guarantee. வேலை செய்யாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சுவையான உணவுக்கு ஒரே இடம்...
**Ceylon Nights**
Sri Lankan, South Indian Food
Tandoori Cuisine
*Free Home Delivery* (With in 3 miles radius for orders over £15 (6pm - 11pm)
Tel: 020 8848 8893
128 Uxbridge Road, Hayes, Middlesex UB4 0JH

**ABBEY TRAINING. NET**
- OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம் அத்துடன்
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
- LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
- எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்.

38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

**RAJA& CO SOLICITORS**
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

**SIVA BUSINESS TRAINING**
எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்
Citzenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For OFF Licence and On Licence)
National Certificate for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (NDDPS)
✱ New Premises Licence ✱ Transfer of Licence
✱ Change of DPS ✱ Night Cafe Licence
✱ Award in under age sales prevention
Siva 020 8683 6544, 079 0480 6371
Challenge House 616, Mitcham Road, Croydon CR0 3AA

**Mortgagelink**
The National Mortgage Network
எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% Deposit + Stamp Duty £2000 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident - Not your fault
Driver / Passenger - within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட...
- Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
- Repair / Total Loss Value of your vehicle
- Loss of Earnings
- Hire Care for Mini Cab Drivers
- Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

**VIDEO FOR YOU**
மங்களகரமான நிகழ்வுகளை தரமான முறையில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் வீடியோ படமாக்கவும், புகைப்படம் எடுக்கவும் நாடவேண்டிய இடம்...
V4U
DIGI VIDEO PRODUCTION
Contact
Mr. V. Seelan
07733 167 554
0208 357 6021

## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்



Specialist in Residential Mortgages 100%

Commercial Mortgages
Leasehold + Freehold

# Looking to Invest in Sri Lanka

"Good Time to Buy"
New + Old Properties | Finance arranged

ANGELS

+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

**Properties and Financial Services Ltd.**

தொடர்புகளுக்கு: சரசுவதி ராமையா
74 Lee High Road, Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683 / Fax: 020 8852 1621
Email:info@angelsproperties.co.uk / Web: www.angelsproperties.co.uk





# Gowri Tours



UK & European Tours

எதிர்வரும் ஆகஸ்ட் 27 Bank Holidayஐ முன்னிட்டு
Lourdes மாதா, Disney Land & Eiffel Tower

Aug 24 - 27 (4 நாட்கள்) சுற்றுப் பயணம், உணவு தங்குமிட வசதி உட்பட £195 மட்டுமே.
விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.

Wales கோவில்
தனிநபர் £29

Birmingham Balaji கோவில்
தனிநபர் £19

முன் கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.....

August 10 - 13 Switzerland Tour £265
(Zurich, Interlaken, Titlis, Lucerne, Rhine Falls)
உணவு தங்குமிட வசதி உட்பட £265 மட்டும்

Vechicle Hire
8, 15, 24, 49, 53, 71
(Mini Bus & Coach Service also availble)

திருமணவைபவங்களுக்கான வாகன வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
(Mercedes E - Class, S - Class & limousine)

ஐரோப்பா, கனடாவிலிருந்து வருபவர்களுக்கு இலண்டன் சுற்றுலாவிற்கான வசதிகள் செய்து தரப்படும்.

இலண்டனில் கீழ்க் குறிப்பிட்ட ஆலயங்களிலிருந்து Wales கோவில் சென்றுவர தனிநபர் £29

Alperton சிவன் கோவில் | Ealing அம்மன் கோவில்
Eastham முருகன் கோவில்
Walthamstow பிள்ளையார் கோவில்
Tooting அம்மன் கோவில் | Lewisham சிவன் கோவில்



தொடர்புகளுக்கு நித்தி
Tel: 020 8438 0472
Mob: 07956 375 803
Email: info@lowfareairportcars.com
Web: www.lowfareairportcars.com



Sales | Lettings | Mortgages | Insurance | Commercial Loans



- House Mortgages upto 95%
- Commercial Loan upto 90%
- Insurance 100% cash back guarantee

வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும் அனைத்து வித வீட்டுக்கடன் வசதிகளுக்கும் உடனே நாடுங்கள்.....

மிச்சம் பகுதியில் தமிழரால் நடாத்தப்படும் நிறுவனம்.

www.matrixproperties.co.uk




# MATRIX
## PROPERTIES SERVICES LTD

159, London Road, Mitcham, Surrey, CR4 2JB.
Tel: 020 8687 1700 / 020 8687 1001| Mob: 07958 527 830
Fax: 020 8687 1441 | Email: Contact@matrixproperties.co.uk

### பால் ஊத்தவில்லையா?

லண்டனில் மெத்தப்படித்த ஒருவர் சிவாஜி படம் வெற்றி வேண்டி கடவுளைக் கும்பிட்டதாக நாகேந்திரன் எழுதியருந்தார்.

ஈழத்தமிழர்களை சிறுமைப்படுத்திய அவர் யார் என்பதை இம்மாதம் வெளி வந்த தமிழர் தகவல் சஞ்சிகை யிலிருந்து அறிந்து கொண்டேன்.

ஊடகங்கள் இவ்விதம் ஒத்திசைவாக நடந்து கொள்வது வரவேற்கத்தக்கது. அவர் வெறுமனே சாமி கும்பிட்ட தோடை நிண்டிட்டாரோ அல்லது சிவாஜி கட்அவுட்டுக்கும் பால் ஊத்தி னாரோ இல்லையோ என்பது பற்றி தெரியவில்லை.

இது தெரியாமல் எனக்கு மண்டை வெடித்து விடும் போலிருக்கிறது. தெரிஞ்சால் எழுதுங்கோ!

— சுரேந்திரன்

### நாவூறு பட்டதா?

அது சரி உங்களுக்கு நாவூறு பட்டுப் பொயிட்டுதோ?

வரவர உங்கடை அட்டைப் படங் களிலை இருந்து ஆக்கங்கள் வரை ஏன், எதுக்கு எண்டு தெரியாமல் கிடக்கு.

போன ஒரு பேப்பர் ரிலை போட்ட அட்டைப் படத்தின் மூலம் என்ன சொல்ல வாறியள். அதை ஒருக்கால் விளக்கிச் சொன்னால் உங்களுக்குப் புண்ணியங் கிடைக்கும்.

இயற்கைக் காட்சிகளையும் தாயக நினைவுகளை மீட்டும் படங்களையும் பிரசுரிப்பிர்களா?

— விவேகன்

### பண்ணாகம் மக்களின் கண்டனம்

ஒரு பேப்பர் 71ல் வெளிவந்த 'உதட் டளவில் சனநாயகம்' என்ற கட்டு ரையில் அடாவடித்தனம் புரியும் மாதர சியை பண்ணாகத்தை சேர்ந்தவர் என தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் அவரது கணவரே பண்ணாகத்தை சேர்ந்தவர். இது விடயத்தில் தீர விசாரிக்காமல் எமது ஊருக்கு இழுக்கை ஏற்படுத்திய கட்டுரையாளரையும் அதனை பிரசு ரித்த உங்களையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

- பண்ணாகம் மக்களின் சார்பில் மூர்த்தி

### சரியான விளக்கம்

பிரித்தானியாவில் இரண்டு தமிழர்கள் கைது தொடர்பாக என்ன நடக்கிறது? ஏன் நடக்கிறது? எப்படி நடக்கிறது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்த என் போன்ற வர்களுக்கு சரியான விளக்கத்தை தரும் விதமான கட்டுரையைப் பிரசுரித்ததற்கு நன்றி.

இது போன்ற கட்டுரைகள் தமிழ் தேசிய எதிர்ப்பாளர்களால் திட்ட மிட்டுப் பரப்பப்படும் வதந்திகளைத் தோற்கடிப்பதற்கும் உதவியாக இருக்கும்.

கட்டுரையாளருக்கும் பிரசுரித்த ஒரு பேப்பர் ருக்கும் தேசிய உணர்வுள்ள தமிழர்கள் சார்பில் நன்றிகள்

— ஜனார்த்தனி

### படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் கோயில் ..

ஒரு பேப்பர் ரில் வரும் விளம்பரங்கள் அதில் வரும் ஆக்கங்களுக்கு நேரெதிராக அமைந்து விடுகின்றன.

ஒருபுறம் முற்போக்கான விடயங் களை எழுதியும் சமூகத்தில் நிலவும் அவலங்களை சுட்டிக்காட்டுகீறர்கள்.

மறுபுறம் நேரெதிரான விளம்பரங் களை. அதாவது மூடக்கொள்கை களின் மொத்த உருவங்களை விளம்பரங்களாகப் போடுகிறீர்கள்.

உண்மையில் சமூக அக்கறையுடன் செயற்பட்டால் இவ்விதம் நடக்குமா?

— பரமசிவம்

### தரமான ஆக்கங்களைத் தாருங்கள்

பக்கங்களை அதிகரிப்பதில் நீங்கள் காட்டும் ஆர்வத்தை ஆக்கங்களின் தரத்தை மேம்படுத்துவதிலும் காட்டி னால் நன்றாக இருக்கும்.

ஆரம்ப நாட்களில் வெளிவந்ததைப் போன்ற சுவாரசியமான ஆக்கங்கள் இப்போது குறைந்து கொண்டே வருகிறதே.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத் திலும் சற்றுக் கவனம் எடுத்தால் பத்திரிகை இன்னும் பொலிவு பெறும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்

—சங்கவி

### வாழிய பல்லாண்டு

ஊரின் வாசத்தை வாசிச்சதுமே நாக் கிலை நீர் சொட்டத் தொடங்கிட்டுது.

அந்த நாட்களிலை கொழும்பி லையிருந்து லீவைப் போட்டுவிட்டுப் போய் பனங்கள்ளருந்தும் சுவையைத் தன் எழுத்துக்களிலே கொண்டு வந்து விட்டார்.

பல வித்தியாசமான சுவைகளைத் தரும் ஆக்கங்களைதத் தரும் ஒரு பேப்பர் மூன்றாண்டு கடந்ததில் மகிழ்ச்சி.

இன்னும் பல்வேறு சுவைகளையும் தாங்கி பல்லாண்டு காலம் புலத்தமி ழரை நாடி வர வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

— கந்தசாமி

### சிறிலங்கா இராணுவத்துக்கு உசுபேத்திறவைக்கும் இடம் ..

வர வர எந்தெந்த விளம்பரங்களை பேப்பரிலை போடோணும் எண்ட விவஸ்தையே உங்களுக்கு இல்லாமல் போயிட்டுது.

போன பேப்பரிலை, சிறிலங்கா இரா ணுவத்துக்கு உசுப்பேத்திறமாதிரி யான பாடல்களை பாடும் துவே சம் பிடிச்ச கிப்சீஸ் இசைக்குழுவின் நிகழ்ச்சி விளம்பரத்தை போட்டி ருக்கிறியள்.

இப்பிடியே போனால் மகிந்தவின் குடும்பிமலை வெற்றிவிழா விளம்பரங் களையும் போடுவியள்.

— நிசாந்தன்

### திருமண சேவை

ஒரு பேப்பர் ரில் வெளிவரும் திருமண சேவை புலத் தமிழ் இளைஞர் யுவதிகளைத் திருமண பந்தத்தில் இணைத்து வைப்பதில் ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகிறது.

அந்த வகையில் என்னுடைய மகளின் திருமணமும் ஒரு பேப்பர் மூலமாகவே நிச்சயிக்கப்பட்டு சென்ற வாரம் சிறப்பாக நடைபெற்றது.

இது விடயத்தில் எமக்கு முழு ஒத்துழைப்புத் தரும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி

— மனோன்மணி

### பேப்பர் கிடைப்பதில்லை

ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக ஜெர்மன் நாட்டில் ஒரு பேப்பர் விநியோ கிக்கப்படுவதாக உங்கள் பத்திரிகை வாயிலாக அறிகிறென்.

ஆனால் என்னால் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. (நான் பிறீமன்) பகுதியில் வாழ்கிறேன்.)

சந்தாதாரராகி பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும் என்பதை அறியத் தருவீர்களா?

— சந்திரகுமார்

### அசத்தல் அலசுவாரம்

நாவூறு படக் கூடாது. கொஞ்சம் தொய்யலாக இருந்த அலசுவாரம் தொடர் இப்ப கொஞ்ச நாளா சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கு.

போன ரெண்டு மூண்டு பேப்பரிலை அவர் நல்ல சுவாரசியமா எழுதிக் கொண்டிருக்கிறார்.

இதே ஸ்ரைலிலை தொடர்ந்து எழுதுச் சொல்லி உங்கடை பேப்பரின்ரை செலவிலை வசியம் ஒண்டு வைச்சு விடுங்கோ.

— குஞ்சன்

# லா சப்பலில் லைலா

வணக்கம் எல்லாருக்கும்

ஒரு பேப்பர் நாலாவது அண்டிலை அயேடுத்து வைக்கிறது அதற்ற கான பாராட்டு திட்டு வசைபாடல் வாழ்த்து என்று சும்மா கலகலப்பா போய்க் கொண்டிருக்கு. அதற்கு இந்த லைலாவின் வாழ்த்துக்களும் லாசப்பலில் நின்றபடி சொல்லுறன்.

ஒரு பேப்பர் பாரீஸ் மற்றும் அதை அண்டிய புற நகர் பகுதிகளிற்கு மட்டுமே கிடைப்பதாகவும் மற்றும் தமிழர்கள் அதிகமாக வாழுகின்ற மற்றை நகரங்களிற்கு கிடைப்பதிலை என்று பலர் குறை பட்டு கொள்கினம்.

இணைய வசதி உள்ளவை இணையத்தில் படிக்கலாம் மற்றவை நீங்களா ஏதாவது வழி பண்ணினால் அனுப்பி வைக்கலாம்.

அடுத்ததாக பாரிசிலை வெத்திலை பெட்டிகளின் கூட்டம் அண்மையில் நடை பெற்றது. அது என்ன வெத்திலை பெட்டிகளின் கூட்டமா என்று யேசிக்கிறீங்களா.

முந்தி ஊரிலை மேளக்கச்சேரி பாட்டு கச்சேரி சின்ன மேளம் இப்பிடி இந்த நிகழ்சி கலைஞர்களிற்கு அந்த குழுவில் வெத்திலை போடுபவர்களிற்கு வெத்திலை பெட்டி காவி செல்ல கட்டாயம் ஒருத்தர் இருப்பார். அவரையும் நாங்கள் வெத்திலைப்பெட்டி என்றுதான் அழைப்பது வழக்கம்.

அது போல இலங்கையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் அவையளுக்கு வெத்திலை பெட்டி தூக்க இங்கையும் ஒரு கூட்டம் இருக்கு அவையள் தங்களை தாங்களே கௌரவமாய் மாற்று கருத்தாளர் என்று சொல்லி கொள்ளுகினம்

அவை யெர்மன் சுக்காட் நகரிலை வாழ்வில் எப்பவுமே யாழ்தேவி கனவுகளில் ஆனந்தமாய் இருக்கும் சங்கரி தாத்தா தலைமையில் ஒரு கூட்டத்தை நடாத்தி விட்டு பிரான்சிலை கலைச்செல்வனின் நினைவு கூட்டத்திற்கும் வந்தவை.

அதிலை எங்கடை ரி.பி.சி. ராமராசன் மாமா. ஆறு வழியிலை படம் காட்டின குகநாதன் மாமா. லச்சுமி மாமி.இப்பிடி சில வெத்திலை பெட்டியள்கலந்து கொண்டவை.

ஆனால் நடந்தது என்னமோ கலைச்செல்வனின்ரை நினைவு கூட்டம். ஆனால் அந்த கூட்டம் தொடங்கி முடியும் வரை யாருமே கலைச்செலவன் பற்றி ஏன் அந்த பெயரை கூட யாருமே உச்சரிக்கவில்லை. அப்ப என்ன நடந்திருக்குமெண்டு உங்களுக்கு விழங்கும் தானே.

ஒரே புளிச்சு போன புலிக்கு நிகம் வெட்டுற கதையும் அதே நேரம் வழமை போல ஒரு பேப்பரை விட்டு வைக்கேல்லை. அதிலை பேசின ஒருதர் சொன்னார்

"ஒரு பேப்பரிலை ஒஸ்ரேலியாவிலை இருந்து ஆங்கில கட்டுரை எழுதிறவர் யாழிலை இருந்து முஸ்லிம்களை வெளியேற்றினது சரியெண்ட மாதிரி எழுதுறார் அது பிழை ஆனால் அவர் ஆங்கிலத்திலை எழுதிறதாலை பிரான்சிலை உள்ளவைக்கு விழங்கேல்லை"

அப்பிடியெண்டா பிரான்சிலை உள்ள தமிழர் ஆங்கிலம் விழங் காதவை எண்டு அவர் சொல்ல வந்தது விழங்குது. ஆனால் அவருக்கே விழங்கேல்லை அந்த கட்டுரை எழுதிறவர் அவுஸ்ரேலியவிலை இருந்து எழுதேல்லையெண்டு.

ஆனால் முதலில் இந்த யாழில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்ற பட்டதை கண்டித்து கத்துபவர்கள் ஒரு நிமிடமாவது கிழக்கில் முஸ்லிம் காடையர்களால் நூற்று கணக்கில் கொல்லப்பட்ட அப்பாவி தமிழர்களை பற்றி எங்காவது எப்போவாவது ஒரு வசனம். சே கதைக்கவே மாட்டார்கள் .ஏனெனில் தூக்கியே பழக்கப்பட்டவர்களாயிற்றே

அன்புடன் லைலா



ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JULY 20, 2007, ISSUE 75

## ஒரு முடிவின் ஆரம்பம்

குடும்பி மலை காட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன் கிழக்குப் பகுதியை முழுவதுமாக விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவித்துக் கொண்டதாக விழா எடுத்துக் கொண்டாடியுள்ளார் மகிந்த ராஜபக்ச. கிழக்கில் கிடைக்கப் பெற்ற வெற்றியானது தற்காலிகமானது என்பதனை விளங்கிக் கொள்ளாத முட்டாளாக அவர் இருப்பார் என நாம் நம்பவில்லை. இருப்பினும் சிங்கள மக்களை முட்டாளாக்கி தன்னை சரித்திர நாயகனாகக் காட்டிக் கொள்ள விரும்பும் மகிந்தவுக்கு அரசியல் ஆதாயம் தேட இதை விட்டால் இனி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

1977ல் இனப் படுகொலைக் காலத்தில் ஜே. ஆர் ஜெயவர்தன அறைகூவல் விடுத்தது போன்று போரா - சமாதானமா எதற்கும் தயார் என மகிந்த டெயிலி நியுஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இச்செவ்வியானது சிங்களத் தலைவர்கள் வரலாற்றிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்கவில்லை, கற்கப் போவதுமில்லை என்பதனை எந்த விதமான சந்தேகத்துக்கும் இடமில்லாமல் நிருபித்துள்ளது. அமைதிப்பேச்சு, அதிகாரப் பரவலாக்கம், பேச்சுவார்த்தை மூலமான தீர்வு போன்ற மயக்க நிலைக்கு முடிவு கட்டி சிங்கள தேசத்தின் போர் வெறியை மகிந்த வெளிபடுத்தியுள்ளார். இதற்காக அவருக்கு தமிழினம் தனது நன்றியைத் தெரிவிக்கும், ஈழத்தமிழரின் சரித்திரத்தில் இந்தச் சாத்தானும் இடம்பெறும் என்பதனை அவருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

நேற்றய தினம் மகிந்த நடாத்திய விழாவின் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் - போர் நிறுத்தம் என்பனவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதி ஈழப்போர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையின்போது ஆதிக்க வல்லரசுகளும், இணைத்தலைமை நாடுகளும் காட்டிய மெத்தனம் இந்த யுத்த முன்னெடுப்புக்கள் அவர்களது ஆசீர்வாதத்துடனயே நடைபெறுவதை உறுதிப்படுத்தியுள்ளது. யப்பானிய தூதுவரோ ஒரு படி மேல் சென்று இவ்விழாவில் பங்கு கொண்டுள்ளார். இந்நிலையில் அங்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்று ஒன்றை வைத்திருந்து தமிழ் மக்களை கோமாளியாக்கும் இந்நாடுகள் பற்றி என்னவென்று சொல்வது? தங்களை இவ்விதம் வெளிபடுத்தியதற்கு அவர்களுக்கும் நன்றி சொல்லுவோம்.

1977ம் ஆண்டு தேர்தலில் முன்வைக்கப்பட்டு தமிழ் மக்களின் ஆணைபெற்ற தமிழீழக் கோரிக்கை முன்னைரைக் காட்டிலும் இப்பொழுது வலுப்பெற்றுள்ளது. கடந்த வாரம் லண்டனில் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் இக்கோரிக்கையே வலியுறுத்தப்பட்டது. இவ்வாரம் வோசிங்ரனில் நடைபெறவிருக்கும் பேரணியிலும் இதனையே முன்நிறுத்தப்படவுள்ளது.

தமிழீழம் தவிர வேறொரு பாதையையும் சிங்களம் விட்டு வைக்காத நிலையில் அதற்காக உழைப்பதே ஒரே மார்க்கமாக உள்ளது.

## ஒரு பேப்பர் ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

*வணக்கம்!*

*இது **ஒரு பேப்பர்** ரின் 75வது இதழ்.*

*சும்மா எழுபத்தைஞ்சாவது இதழ், நாலாவது வருசம் எண்டு விலாசம் காட்டாமல் ஒழுங்காய் பேப்பரை அடியுங்கோடா/அடியுங்கோடி என்று நீங்கள் சொல்லிறது கேட்கிறது. இருந்தாலும் உள்ளே ஒண்டுமே இல்லாத வெங்காயங்களான எங்களைப் பொறுத்தவரை இதெல்லாம் மலையேறுற விசயம் என்பதால் எங்கட மகிழ்ச்சியை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறோம். அவ்வளவுதான்.*

*இருந்தாலும் ஆண்டு விழா வைர விழா அது இது எண்டு உங்களுக்கு அலுப்புத் தரமாட்டம். விழா வைச்சு எங்களுக்கு உதவி செய்யிற ஆக்களுக்கு எல்லாம் பட்டுச்சீலை போர்த்திறது எண்டால் காஞ்சிபுரத்திலை இருக்கிற அத்தனை தறிகளும் ஓவர் ரைம் செய்ய வேண்டிவரும் என்பதால் அந்த எண்ணத்தை கை விட்டுட்டம்.*

*ஊருக்கை **ஒரு பேப்பர்** ரைப் பற்றி கண்டமாதிரி எல்லாம் கதையடிபடுகிறது. அவை சில நேரம் எங்களை வந்து எட்டுகிறது. இவற்றை எங்களுக்கு சுருக்கமாய் எழுதி அனுப்பினால் அவற்றை நாங்கள் மறுக்காமல் பிரசுரிப்பம். திருத்த வேண்டிய விசயம் எண்டால் திருந்தப் பார்க்கிறம். அதை விட்டுட்டு உங்களுக்கை கதைக்கிறது எல்லாம் எங்களுக்கு தெரியவர நியாயமில்லை.*

***ஒரு பேப்பர்** ரிலை வருகிற விளம்பரங்கள் உள்ளே வரும் விசயங்களுக்கு நேர்எதிரானதாய் இருப்பதாக பலரும் முறைப்பட்டுள்ளார்கள். உண்மைதான் ஆசிரியர் குழு விளம்பர விடயங்களில் தலையிடுவதில்லை என்பதால் இது போன்ற தவறுகள் நடக்கின்றன. இந்த விசயத்தில் கூடிய கவனம் எடுக்கிறோம். மற்றப்படி விளம்பரக் காசுக்காய் எங்களை மாத்திக் கொள்ளிற ஆக்கள் இல்லை நாங்கள்.*

*ஐரோப்பாவிலும், கனடாவிலும் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் நகரங்களில் மாத்திரம் அங்குள்ள தமிழ் நிறுவனங்கள் மூலமாக **ஒரு பேப்பர்** ரை விநியோகிக்க முடிகிறது. ஏனைய இடங்களில் வாழ்பவர்கள் சந்தாரராக சேர்ந்தால் தபால் மூலம் உங்கட பிரதிகளை பெற்றுக் கொள்ளலாம்*

*ஜேர்மனி கேவலார் கோயில் திருநாளுக்கு வாங்கோவன் பம்பலாயிருக்கும் எண்டு எங்கட கூட்டாளிமார் கேட்டிருக்கினம். வந்து உங்களை எல்லாம் சந்திக்க விருப்பம்தான் பார்ப்பம். (அங்கையும் ஓசியிலை சாப்பாடு தருவினம்தானே?)*

*ஒரு டிரக்டரி எண்டு ஒரு புது சேவையையும் எங்கட குழு தொடங்கியிருக்கு. அதுவும் ஓசிதான். இனி இடியப்பம் ஓடர் பண்ணிறதெண்டால் இவ்வளவு நாளும் இந்த நம்பருகளை எழுதி வைச்சிருந்த கொப்பியை கடாசிப் போட்டு, டப்பிள்யு டப்பிள்யு டப்பிள்யு டொட் ஒருடிரக்டரி டொட் கொம் எண்டு தட்டுங்கோ. எல்லாம் விபரமாய் கிடக்கும்.*

*சமர் களை கட்ட தொடங்கியிருக்கு.. இன்னும் கொஞ்சக் காலத்துக்குத்தானே அதுக்கிள்ள கடற்கரை, காம்பிங், பாபிகியூ, கிறில் எண்டு வெயிலை அனுபவியுங்கோ. மறுக்காமல் உங்கட அனுபவங்களை எங்களோடை பகிர்ந்து கொள்ளுங்கோ.*

*மீண்டும் சந்திப்போம்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Erasing Tamil East

Napoleon won the battle of Waterloo. The German Wehrmacht won World War II. The United States won in Vietnam, and the Soviets in Afghanistan. The Zealots won against the Romans, and Sri Lankan President Rajapakse has won the War against Tamils.

You didn't know that?

Well, on the 19th of July 2007 a 'prestigious' national event 'Negenahira Navodaya' (eastern resurgence in Sinhalese Language) was held at the Independence Square, Colombo with President Rajapaksa presiding as Commander-in-Chief of the Armed Forces. This ceremony has marked the comprehensive victory and the liberation of the Tamil East from the Tamil Tigers and felicitated the victorious Sri Lanka Armed Forces who had contributed to this 'humanitarian' effort, according to the Sri Lankan regime. Symbolising the triumphant completion of the operations, the Armed Forces Chiefs have presented a 'sannasa' (parchment in Sinhala Language) at this victory ceremony to President Rajapaksa, who thereafter proclaimed the defeat of Tamil Nation.

A Tamil journalist described the event as 'the regime is planning a "victory" celebration in a conquisitadorial spirit. Just as Chandrika Kumaratunga had Anuruddha Ratwatte ceremonially deliver "Yapa Patuna" to her, Mahinda Rajapakse wants "Naginahira" to be handed over symbolically amid pomp and pageantry. Such types of ceremonies were reserved for extraneous conquests during medieval times.'

For us, the Tamil Expatriates, this celebration of war and these medieval victory ceremonies remind us of the Sinhalese racism and why our people are still fighting.

Racism has always been the lifeblood of the Government of Sri Lanka (GOSL). Sinhalese Buddhism rests on the fundamental belief that the Sinhalese have superior national, human, and natural rights in the land, an inherently racist foundation that excludes any possibility of true democracy or equality of peoples. GOSL's current destructive rampage in the Tamil Homeland is merely the continuation of such a founding ideology after a few year break. Precisely because that ideology posits the exclusivity and superiority of one people's rights, it can accept no legal or moral restraints on its behaviour, for it needs an ever-expanding geography to accommodate those unlimited rights.

Thus the military take over of Tamil Homeland is necessary for the GOSL.

Sinhalese Buddhism cannot abide encroachment or even the slightest challenge to its total domination over its own space -- not merely of the historical homelands of the Sinhalese, but of the surrounding space as well, extending outward to geographical limits that it has not yet seen fit to set for itself. Total domination means no physical threat and no demographic threat: Sinhalese reign, Sinhalese are totally secure, Sinhalese always outnumber, Sinhalese hold all military power, Sinhalese control all natural resources, all the others are powerless and totally subservient. This is the message GOSL is sending the Tamils with its occupation of the Tamil East: that neither Tamil Tigers nor anything in Tamil Northeast that nurtures Tamil resistance should continue to exist, for the sole reason that Tamils challenge GOSL's supreme authority in the island and GOSL cannot abide this effrontery. Sinhalese Buddhism cannot coexist with any other ideology or ethnicity except in the pre-eminent position, for everyone and every ideology that is not Sinhalese Buddhist is a potential threat.

The battle for the Tamil East has killed hundreds of civilians, injured thousands and more than a hundred thousand are displaced.

It was not part of a war against terror, as GOSL would have us believe. This is a war for Sinhalese Buddhist breathing space, for the absolute certainty that they would dominate every corner of the island. It is a war against a Tamil population that was not totally subservient, that had the audacity to harbour a force like the Tamil Tigers that does not bow to GOSL's will. It is a war on people and their way of thinking, people who are not Sinhalese Buddhist and who do not act to promote Sinhalese Buddhist hegemony.

GOSL has been doing this in the Tamil East in one form or another since the fifties. Eastern Tamils have obviously been Sinhalese Buddhism's longest suffering victims, and its most persistent opponents.

GOSL thought it had rid themselves of their most immediate problem, the problem at the very core of Sinhalese Buddhism, in the eighties and nineties when they forced the flight of nearly two-thirds of the Eastern Tamil population that stood in the way of establishing Trincomalee as a Sinhalese majority region.

You can not have a Tamil Homeland if most of your population is not Tamil, GOSL policy makers opined then. In 2006, when GOSL began its war again those Tamils who it thought had disappeared turned out to be still around after all, threatening the Sinhalese Buddhist hegemony.

During the last fifty years , GOSL's policy has been largely directed -- with periodic time-outs for attacks on Jaffna -- toward making the Eastern Tamils disappear for certain by ethnically cleansing the Tamil East.

The methods of ethnic cleansing are myriad: land theft, destruction of agricultural land and resources, economic strangulation, crippling restrictions on commerce, home demolition, residency permit revocation, arrest, assassination, family separation, movement restriction, destruction of census and land ownership records, theft of tax monies, starvation. GOSL wants all of the Eastern Tamil land, including all of Trincomalee, but it cannot have a Sinhalese majority in all of this land as long as the Tamils are there.

Hence, this military take over and ethnic cleansing is necessary for the GOSL.

And here is the crux of the situation today. Will anyone notice this horror? Has GOSL truly exposed by its wild summer campaign of ethnic cleansing and war mongering in the Tamil Homeland, the total bankruptcy of its very founding idea, the essential illegitimacy of the Sinhalese Buddhist principle of exclusivity?

Can even the most deluded see this, or will they continue to be deluded and the world continue to turn away, excusing atrocity because it is committed by GOSL in the name of keeping the territorial integrity and sovereignty of a failed state?

# தேசிய போராட்டத்தின் சமகால நிகழ்வுகளைப் புரிந்து கொள்ளல்

வாழ்வுக்கான காரணம் என்னும் (The Life of Reason) நூலில் அதன் ஆசிரியர் ஜோர்ஜ் சன்ரயானா (George Santayana) என்னும் தத்துவ ஞானி 'தங்கள் கடந்த காலத்தை ஞாபகத்தில் கொள்ளாதோர் அதனை மீண்டும் அனுபவிக்குமாறு சபிக்கப்படுவர்' - "Those who cannot remember the past are condemned to repeat it " எனக் கூறுகின்றார்.

பொதுஅறிவில், சமூகத்தில், சமயத்தில், கலையில், விஞ்ஞானத்தில் வாழ்வுக்கான காரணங்களைத் தேடும் இந்நூலில் பலராலும் எடுத்தாளப்படும் மேற்குறிப்பிட்ட வாசகம் பொது அறிவின் கீழ் இடம் பெற்றுள்ளது. தனிமனிதர்களுக்கும், சமூகத்திற்கும், நாடுகளுக்கும் இது பொருந்தும்.

எமது வசதிக்காக வரலாற்று ஞானம் எனக் கூறிக் கொள்வோம். அறிவு வேறு , ஞானம் வேறு. முன்னது புறம் சார்ந்தது பின்னது அகம் சார்ந்தது. ஞானம் பட்டுத்தெளிவதால், அழுந்தி அறிவதால் பெறப்படுவதெனின் சாதாரண மக்களிடம் அதனை நிறையக் காண்கின்றோம். இது அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பொருந்தும்.

ஆயின் கடந்த காலம் பற்றிய அறிவு ,ஞானம் என்பன எம்மைச்சுற்றி அவிழ்ந்து கொண்டிருக்கும் (unfolding) சமகால நிகழ்வுகளை உரிய முறையில் புரிந்து கொள்ள உதவாதுவிடின் அந்த அறிவு வெறும் உபதேசமாகவே முடியும். எமது கவனக் குவிப்பு எம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளின் மீது குவிக்கப்படும்போது அவற்றை நாம் வாசிக்கும் விதத்தில் தெளிவு ஏற்படுவதை அவதானிக்கின்றோம்.

இப்படியான வாசிப்பை வசப்படுத்தியவர்களில் ஒருவரான மாமனிதர் தராக்கி எனப்படும் சிவராம் "States that want to oppress a people do so by breaking their political will to resist injustice---It is easier to enslave a people who have lost their ability to understand the nature of their oppression" எனக் கூறியதை எத்தனை தரம் அழுத்திச் சொன்னாலும் தகும்.

கஞ்சி குடிப்பதற்குக் கூட வழியற்றவர்களாக எம்மக்களை ஆளாக்கிய அடுக்கு முறைகளுக்கு துணை போகும் சர்வதேச சமூகம் அதற்கான காரணங்களை அறியும் ஆற்றல் அற்றவர்களாக எம்மக்களை ஆளாக்குவதற்கும் துணைபோவது ஏன் என்பதை நாம் விழங்காதுவிடின் அவர்களது நிகழ்ச்சி நிரலின் கீழ் நாமும் ஒரு நிகழ்வாக இடம்பெறுவோம்.

அமெரிக்கா தலைமையிலான இணைத் தலைமை நாடுகள் ஒருபுறம் இந்தியா ஒருபுறம், சீனா ஒருபுறம், பாகிஸ்தான் ஒருபுறம், இவர்களுக் கிடையிலான ஒட்டுறவுகள் முரண்பாடுகள் என்னும் கலப்புக்கள் ஒருபுறம் என சமகாலம் விரிகின்றது. இவற்றின் சூட்சுமங்களை, இவர்களால் அவ்வப்போது வெளிப்படுத்தப்படும் நடவடிக்கைகள், கருத்துக்கள் என்பவற்றின் பின்னால் வெளிப்படுத்தப்படாதவற்றை, சொல்ல நினைத்ததை சொல்லாமல் விட்டதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமாயின் எமக்கு இவைபற்றிய வாசிப்புக்களும் கருத்துப்பரிமாற்றங்களும் அவசியமாகும்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம், பிரிவினைவாதம், ஆயுதக் குழு, இனக்குழுமம், தமிழ் சமூகம், சிறுபான்மையினத்தவர் என்ற பதங்களால் இவர்கள் அழைப்பதன் காரணங்கள் என்ன என்பவற்றை நாம் விளங்கிக் கொள்வதன் மூலமே மாற்றங்களைக் கொண்டு வர முடியும்.

உதாரணத்திற்கு இறைமை (sovereignty) ஆட்புல ஒருமைப்பாடு (Territorial integrity) இவற்றால் சிறிலங்கா ஒரு நாடு என வாய்ப்பாடாக சர்வதேச சமூகம் கூறுவது ஏன்? இதில் எமக்கொரு ஞாயம் கொசொவாவற்கு ஒரு ஞாயம் ஏன்? உண்மை என்ன?

1619 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலி குமாரனை போர்த்துக்கேய தளபதி பிலிப் டீ. ஒலிவேரா தரைப்படை கடல்படை கொண்டு தோற்கடிக்கின்றான். பின்னர் கோவாவில் தூக்கில் இடப்படுகின்றான். எதிர்மனசிங்கனின் மூன்று புதல்விகளும் கோவாவிலும் லிஸ்பனிலும் மதமாற்றம் செய்யப்பட்டு அவர்கள் ஆவணம் ஒன்றின் மூலம் யாழ்பாண இராச்சியத்திற்கான உரிமையை போர்த்துக்கேயருக்கு கையளிப்பு .

பின்னர் டச்சுக்காரரிடம் பிரித்தானியரிடம் சிங்களவரிடம் இழந்த இந்த இறைமையை மீட்டு எடுக்கும் மகத்தான மக்கள் பிரகடனமே 1977 வட்டுக் கோட்டைப் பிரகடனம். யாரின் இறைமை. யாரின் ஆட்புலம். எங்கே பிரிவினைவாதம். இதனை நவீன கற்கையில் Reversion of Sovereignty என்பர். இதனை இவர்கள் ஏன் மறுக்கின்றார்கள்?

இந்தச் சமயத்தில் தாந்தே (Dante) என்னும் புகழ்பெற்ற 13 ஆம் நூற்றாண்டை சார்ந்த கவிஞனின் 'தெய்வீக நகைச்சுவை இன்பியல்' (Divine comedy) என்னும் காவியத்தை ஒருமுறை நோட்டம் விடுவோம். இதில் மூன்று உலகங்கள் சித்தரிக்கப்படுகின்றன. நரகம் (Inferno) பாவம் போக்கும் இடம் Purgatory) சுவர்க்கம் Paradise என்பவையே அவை.

கவிஞனே இந்த மூன்று உலகத்திலும் பிரவேசம் செய்கின்றான். எங்கள் பாரதியின் ஞானரதம் போல. அங்கு நரகலோகத்தின் வாசலில் ஒரு பலகை தொங்குகின்றது. இங்கு நுழைவதற்கு முன்னர் எல்லா நம்பிக்கைகளையும் துறப்பீராக (Abandon all hope before enter ) என்பதே அந்த வாசகம். நரகத்துள் வீழ்வதற்கு முன்பும் மனிதனுக்கு ஒரு சந்தர்பம். அவனது சுயமுயற்சியால் (Free will) தன்னைக் கட்டிய தளைகளை அறுக்கும் வாய்ப்பு. இதற்கு சமகாலம் பற்றிய அறிவு அவசியம். நரகத்தில் வீழ்ந்தவர்களுக்கு கடந்தகாலம் பற்றிய அறிவும் எதிர்காலம் பற்றிய அறிவும் உண்டாம்.

ஆனால் சமகாலம் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. இது அவர்கள்மேல் தாந்தேயின் கேலி. ஏனெனில் இறுதித் தீர்ப்பின் பின்னர் காலம் முடிகின்றது. அதனால் நரகத்தில் உள்ளோர்க்கு ஒரு அறிவும் இல்லை என்கிறார். அவர்கள் மீளா அடிமைக்குள் ஆளாவர். சிவராமின் வார்த்தையில் " ...It is easier to enslave a people who have lost their ability to understand the nature of their oppression"

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பபிலோன் ஆற்றங்கரையில் அழுது பாடமறுத்த யூத மக்களைப் போல் நாமும் எம் இலட்சியத்தை சுமக்கும் அதேசமயம் சமகால நிகழ்வுகள் பற்றிய தெளிவிற்கான வாசிப்புக்களிலும் கருத்துப் பரிமாற்றலிலும் ஈடுபடுவோமாகாக.

*- ம. தனபாலசிங்கம்*
***(Courtesy: tamilnation.org)***

விழியில் நீருற்றி

விழித்திரு

இது விடுதலைக்

காலம்

- உணர்ந்திரு

# Rajapakse the Liberator?

**By: Ameen Izzadeen**
**KHALEEJ TIMES**

Yes, conquest is the goal of these ultranationalists whose ideology has fuelled the ethnic flames and driven the country towards destruction and the disgruntled Tamil youths towards violence.

The victory at Thoppigala last week brought the Eastern Province, one of Sri Lanka's nine administrative provinces, under the control of the government. The defeat of the LTTE in the east is, no doubt, a victory for the security forces.

But the ultimate victory is not nigh. The path to that elusive victory is strewn with many an obstacle. The journey along that path requires courage and sacrifice, both at military and political level. Whether we will see that victory during the present regime of President Mahinda Rajapaksa is a big question now.

The victory in the east has hardened the ultranationalists' resolve to continue the fight and conquer the north. Yes, conquest is the goal of these ultranationalists whose ideology has fuelled the ethnic flames and driven the country towards destruction and the disgruntled Tamil youths towards violence.

On the eve of the Thoppigala victory, I had a casual conversation with a few senior military officers at a defence academy. One senior officer told me that the real victory could come only when the Tamils in the east also join with the rest of the country to celebrate the military's feat.

He was talking like a liberator – not a conqueror. "The more we harp on our victory, the more hurt we will be heaping on the Tamils," the Sinhala said.

Yes, the Tamils are hurt because the victory is being projected as a conquest by the government and its ultranationalist allies. And no one in the government has thought it fit to look at the victory from the Tamils' point of view. There is none in the government to drive the point that one has to be humble and magnanimous in victory.

But our government is planning grand-scale celebrations throughout the country, except in the LTTE-controlled areas in the north. The functional value of these celebrations in promoting national harmony is a big zero. Of course, they will help President Rajapaksa to salvage his slumping popularity.

The LTTE, I am sure, won't be displeased with the celebrations, either. The victory celebrations with pomp and pageantry are contributing towards the further polarisation of society along ethnic lines, for they bring out Sinhala nationalism, which is like oxygen to the LTTE.

The posters of ultranationalists and the government proclaim that the LTTE's dream of setting up of a separate state in the north and the east of Sri Lanka has been dealt a deadly blow by the security forces. The posters also urge the army to conquer the north as well. The propaganda campaign by the government and the nationalists is so effective that people are unwilling to believe the allegations made by the opposition United National Party and two sacked ministers that Rajapaksa paid millions to the LTTE before the presidential elections in return for a boycott call that prevented the Tamil from voting and eventually cost UNP leader Ranil Wickremesinghe the presidency.

The allegations have become a damp squib in the Thoppigala euphoria. Rajapaksa is a hero today – a leader who has liberated/conquered the east. The Rajapaksa campaign is so effective that people in the south believe that it is he who, for the first time in the 25-year history of the ethnic conflict, has liberated the east. But the fact is that the armed forces took the entire Eastern Province, including Thoppigala, under their control in 1992 and the then government successfully held elections to the local council. The east became once again a stronghold of the LTTE during the Chandrika Kumaratunga regime, in which Mahinda Rajapaksa was a minister.

The Thoppigala euphoria has infected the people in the south with myopia. For them, it does not matter how the east was won. The armed forces moved into Tiger-controlled areas in the east — Mavil Aru, Mutur, Sampur and Manirasakualm and eventually Thoppigala — first launching aerial attacks on LTTE targets which incidentally were located in civilian areas. As a result 300,000 civilians were displaced. Hundreds were killed. The subsequent exchange of fire, artillery and multi-barrel rockets, destroyed their houses, fields and whatever facilities that sustained their livelihood. As area after area was liberated, some internally displaced were resettled. But thousands of them found to their horror that they could not enter their villages that had become part of a high security zone while they were away in refugee camps.

Since the victims were largely Tamils, the pain is less in the south. Coinciding with the celebrations, the government is launching a development programme called Neganahira Navodaya. The English translation of the Sinhala phrase means New Dawn of the East. East is a predominantly a Tamil-speaking province with Muslims and the Tamils constituting more than 70 per cent of its population. There is no attempt to name the programme in Tamil and to dismiss charges of racism.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - சுவேதிகா
மணி - ஜோசப்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - நிதி - சிந்து
அச்சு
சுகி - நிதி
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்
உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

## சற்று மாறுதலுக்காக. . .

# தமிழர் மார்தட்டி வந்தாரா இல்லையா?

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

இருண்டு கொண்டு போகின்ற பொழு தொன்றில் நான் இருக்கிறேன் என்று அடிக்கடி எண்ணுவதுண்டு. ஆயினும் ஒளிக்கீற்று அடிக்கடி கண்கள் தெறிக்கும் படியாக வருகிறது என்பதையும் சொல்ல வேண்டும்.

சென்ற சனிக்கிழமை (14-07-07) இலண்டன் ரவல்கர் சதுக்கத்தில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையில் தமிழர் மீதான சிங்கள அரசின் மனித உரிமை மீறலைக் கண்டித்து இக்கூட்டம் நடைபெற்றது. சுமார் ஐயாயிரம் மக்கள் இதில் கலந்து கொண்டிருப்பார்கள் என்பது என் கணிப்பு. இக் கூட்டத்தில் கலந்து கொள்ள சுரங்க வழி தொடருந்தில் பயணிக்கிறேன். ஒவ்வொரு நிலைய நிறுத்தத்திலும். ஏறுபவர்கள் பெரும்பாலும் தமிழ் மக்களாக இருக்கிறார்கள். அவர்களது பயணம் இக்கூட்டத்திற்குத் தான் என்பது புரிகிறது.

மூன்று பிள்ளைகள் தாய் தந்தையர் எனக் குடும்பம் ஒன்றும் அதில் பயணிக்கின்றனர். பிள்ளைகள் ஆங்கிலத்தில் உரையாடுகின்றனர். தாய் செல்லமாக அதட்டுகிறார். 'உங்களை எல்லே தமிழிலை கதைக்கச் சொன்னனான்?'

தாயை ஏறியவுடன் கண்டேன் தான். இப்போது மேலும் அழகாக அவர் மிளிர்கிறார். என் கை கூப்பவில்லை. மனசு கூப்பியது. இந்தக் கூட்டத்திற்கான என் முழுவியளம் மிக உன்னதம் என உணர்ந்தேன், இருக்கிறார்கள் எம் தமிழர் இன்னும் உணர்வாக, ஓர்மமாக.

'எங்கன்ரை சனம் திருந்தாது' என்று வசைபாடுபவர்கள் தான் இன்னும் திருந்தாத 'ஜன்மங்களாக' இருக்கிறார்கள். திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன இலாபம்?

மேலும் சில சொல்வேன். சென்ற 'ஒரு பேப்பர்' இல் 'சிவாஜி' திரைப்படத்திற்குச் செல்கிறார்கள், இப்படியான நிகழ்வுகளிற்கு வருகிறார்களில்லை என்ற ஆதங்கம் எழுதப்பட்டிருந்தது.

அதனை வாசித்தது காரணமோ உணர்வெழுச்சி தான் காரணமோ, நான் பணிபுரியும் நிறுவனத்திலிருந்தும் அக்கூட்டத்திற்குச் சிலர் வந்திருந்தனர். அது மகிழ்வைத் தந்தது.

நாங்கள் சொல்கிற அளவில் இல்லை. சனம் நன்றாகத்தான் இருக்கிறார்கள், சரியாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான வழி காட்டப்படவில்லை, அல்லது பிழையாக வழிநடத்தப்படுகிறார்கள் என்பதே உண்மை.

அடிக்கடி இந்தப் பத்தியில் அடிபடுகிற நன்பரின் மனைவி ஒரு காரியம் செய்கிறார். அதை அந்த நண்பர் சொன்னார். நண்பரின் மனைவி சுவாமிப் படங்களுக்கு விளக்கேற்றிக் கும்பிட்ட பிறகு நமது தேசியத்தலைவரின் படத்தையும் கும்பிடுகிறார்.

காரணம் கேட்டேன். தேசத்தைக் காக்க, மீட்கப் போராடுகிறார். வணங்கப்பட வேண்டியவர் அவர் என்கிறார். ஒரு கணம் நான் சிலிர்த்தேன்.

'சேர்ந்தறியாக்கையன் நான்'. அதாவது யாரையும் கும்பிடுவதில்லை. ஆனால் அப்படிச் செய்வோரின் உணர்வு எனக்குச் சிலிர்ப்பைத் தந்தது.

இவ்வாறு எனது தோழி ஒருவரின் தாயும் செய்கிறார். ஒவ்வொரு நாளும் மதியம் 12 மணிக்கு ஐபிசிதமிழ்வானொலியில் 'கொட்டுண்டு கருகி விழுந்த' பாடல் ஒலிபரப்பாகிற போது கண்ணை மூடி வித்தானவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறார்.

இப்படி மனிதம் மிளிர்ந்தோர் இருக்கின்றனர். இதனிடையே தான் வேறோர் செய்தியும் என் காதைக் குடைகிறது. சனி மாறுகிறதாம். அதற்காக அல்லோலகல்லோலப்படுகிறார் நம் தமிழர். நம் சனம் அல்லோலகல்லோலப்படுகிறதோ இல்லையோ குருக்கள்மார் நம் தமிழ்ச் சனத்தின் குடும்பியை பிடித்து ஆட்டுகிறார்கள்.

ஒரு கோயிலின் குருக்கள் இப்படிச் சொல்கிறார் 'சனியனிலும் பார்க்க முருகனுக்கு சக்தி அதிகம். எனவே சனி பகவானால் முருக பக்தர்களுக்கு எந்தக் கெடுதியும் நேராது என்றாலும், நாங்கள் வருகிற ஞாயிற்றுக்கிழமை சனி பகவானால் எந்தக் கெடுதியும் வரக் கூடாது என்பதற்காக 'ஓமம்' வளர்க்கிறம்.

நீங்கள் 10 பவுண்ட் தந்து பெயரையும் நட்சத்திரத்தையும் சொன்னால், உங்கள் பெயரிலும் ஓமம் வளர்க்கப்படும், சனி பகவானால் ஒரு தீங்கும் வராது என்று 'கவர் இன்சூரன்ஸ்' செய்கிறார்.

இன்னொரு கோயில் குருக்களோ 20 பவுண்ட். தந்தால் 'கறன்ரி கார்ட்டே' தருவேன் என்கிறார். அதாவது சனிபகவானின் ஆக்கினையிலிருந்து தப்புவதற்கான 'கறன்றி கார்ட்'. .

இப்படியானவர்கள் தான் நம் சனத்துக்கு 'சனியன்களாக' இருக்கிறார்கள். நம் தமிழ் மக்கள் இப்படியான சனியன்களை ஓடஓட விரட்டினானாலே நம் சமூகம் உய்வடையும்.

# வாய்ப்புகள்

வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கவும், வெற்றியைக் குவிக்கவும் என்ன செய்யலாம். என்னைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியும் வெற்றியும் தனித் தனியான விஷயங்கள் என்று நான் எண்ணவில்லை.

மகிழ்ச்சியுடன் இருப்பதே வெற்றி தான். வெற்றி டெறாமல் மகிழ்ச்சியுடன் இருப்பதும் சாத்தியமில்லை. மகிழ்ச்சியும் வெற்றியும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. ஒன்றிலிருந்து இன்னொன்றை பிரித்துப் பார்ப்பது சாத்தியமில்லை. அது அவசியமும் இல்லை.

இயற்கை மனிதர்களை உருவாக்கும் போதே ஆற்றல்களையும் வைத்துத் தான் உருவாக்குகிறது. ஆற்றலே இல்லாத மனிதர்களாக எவரும் பிறப்பதில்லை. ஊனமுற்ற நிலையில் பிறக்கின்ற குழந்தைகளும்கூட, விசேஷமான சில ஆற்றல்களை பெற்றிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே, மனிதராக பிறந்த ஒவ்வொருவராலும் வெற்றிகளைக் குவித்து மகிழ்ச்சியுடன் வாழமுடியும்.

ஒன்றை உனக்குச் சொல்லுகிறேன். மற்றவர்களை நாம் சுலபத்தில் விமர்சித்து விடுகிறோம். எப்போதாவது நம்மை நாமே விமர்சித்து பார்த்திருக்கிறோமா?

மற்றவர்களின் தவறுகளை சுலபத்தில் கண்டுபிடித்து விடுகிறோம். நம்முடைய தவறுகள் நம்முடைய கண்களுக்கு படுவதே இல்லை. நம்முடைய தவறுகளுக்கு ஆயிரம் காரணங்களை நாமே கற்பித்துக் கொண்டு விடுகிறோம்.

'நான் செய்த எந்தக் காரியம் அல்லது நான் சொன்ன எந்தச் சொல் இந்த நிலைமைக்கு என்னை ஆளாக்கியது?'என்று எப்போதாவது நாம் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

நீ, குழப்பங்களுக்கும், ஏமாற்றங்களுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாகி இருந்தால், அதற்கு என்ன காரணம் என்பதை சற்று அமைதியாக அமர்ந்து சிந்தித்துப்பார். அப்போது உன்னுடைய சக்தி என்ன என்று உனக்கு புரிய ஆரம்பிக்கும்.

சிந்திக்க சிந்திக்க தவறுகளுக்குக் காரணம் புரியும். அது தெளிவாகும்போது உன்னிடம் மறைந்திருக்கும் ஆற்றலும் உனக்கு புலப்பட ஆரம்பிக்கும்.

தவறுகள் புரியும்போது சரியான வழியும் புரிகிறது. அப்போது எங்கிருந்தோ ஒரு சக்தி உன்னுள் பாய்வதை நீ உணர்வாய். ஏதோ ஒரு வகையான அமைதியும், பலமும் தோன்ற ஆரம்பிக்கும். உன்னால் முடியும் என்கிற நம்பிக்கை தானே தோன்ற ஆரம்பிக்கும்.

உன்னிடம் இப்போது ஏற்பட்டுள்ள குழப்பத்துக்கும் ஏமாற்றத்துக்கும் எது காரணம்? அதை முதலில் கண்டுபிடி. ஏதாவது தடை இருந்தால் அது நீங்கிடும் அதிசயம் உடனே நிகழ வேண்டுமென்று எதிர் பார்க்காதே. உன்னை நீயே ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டி இருக்கலாம்.

நம்முடைய இருதயத்தையும் மனத்தையும் தூய்மைப் படுத்துகின்றபோது, வெறுப்பு, குரோத உணர்வு நம்மிடம் மறையத் தொடங்குகிறது. எவ்வளவு தீயகுணங்கள் நம்மிடம் குடிகொண்டிருந்தாலும், அவற்றை வேரோடு களைகின்ற சக்தியும் நம்மிடம் இருக்கின்றது. இதை முதலில் நீ நம்ப வேண்டும்.

அப்போது சிறந்த வாழ்க்கைக்கான எல்லையற்ற வாய்ப்புகள் நம் முன் இருப்பதை நம்மால் உணரமுடியும். சிறந்த முறையில் இதுவரையில் நாம் வாழவில்லை என்பதற்காக, இனிமேலும் சிறந்த முறையில் வாழ முடியாது என்று ஆகி விடாது.

நீயாக எந்தத் தடையினையும் ஏற்படுத்திக் கொள்ளாதே. தடை எதுவும் இருப்பதாகவும் ஒப்புக் கொள்ளாதே. தடை ஏதாவது இருக்கின்றது என்று தோன்றினால் அதை பரிசீலனை செய். அந்தத் தடைக்கு நீ எந்த விதத்தில் பொறுப்பு என்பதை ஆராய்ந்து பார்.

அதற்கான உன்னுடைய பொறுப்பை நீ அப்புறப்படுத்திக் கொள்கின்ற போது, எல்லையற்ற சக்தி உன்னுள் பாய்வதை உணர்வாய்! ஆமாம். நண்பா, உனக்குள்ள வாய்ப்புக்களும் எல்லையற்றவை.

ஒரு முறை கடுமையாக நோய் வாய்ப்பட்ட நண்பர் ஒருவரை சந்திக்க மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். அவரிடம் நான் ஆறுதலுக்காக, 'பாவம், இந்த நோய் உங்களுடைய பல்வேறு வேலைகளுக்கும் இடையூறாகி விட்டது' என்றேன்.

நோய்வாய்ப்பட்டிருந்த நண்பர் புன்முறுவலுடன் சொன்னார். 'எத்தனையோ புதிய பணிகளுக்கான சிந்தனையினையும் அது எனக்குக் கொடுத்திருக்கிறது.'

ஏற்பட்ட தடைகளை ஆராய்ந்தால் அவற்றை அப்புறப்படுத்துகின்ற வழியும் தானாகவே புலப்பட்டுவிடும்.

இயற்கையின் செயற்பாட்டை கவனித்தால் எல்லா இயக்கங்களுமே ஒன்றுக்கொன்று இணக்கமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. பிரபஞ்ச விதிகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதை பார்க்க முடிகிறது. இந்த இணக்கத்தில் எங்காவது குறை ஏற்பட்டால், தொல்லைகள் ஆரம்பம் ஆகின்றன.

பிரபஞ்ச அமைப்புக்கு மட்டும் அல்ல, அதன் ஒரு அங்கமான மனிதர்களாகிய நமக்கும் இது பொருந்தும்.

நம்மைச் சுற்றிலும் எவ்வளவு பெரிய புயல் வீசினாலும், நம்முடைய வாழ்க்கை என்கின்ற இனிய சங்கீதத்தில் அபஸ்வரம் கேட்க நாம் அனுமதிக்கக்கூடாது. இந்த முயற்சி சற்று கடினமானது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

கூடுமானவரை அபஸ்வரத்தைத் தவிர்த்து நம்மால் வாழமுடியும். எதையும் ஒழுங்காகவும் ஆக்கபூர்வமாகவும் நீ சிந்திக்கத் தொடங்கி விட்டால், வாழ்க்கைப் பிரச்சனைகள் எளிமையாகத் தீர்ந்துவிடும்.

கடலை நோக்கி ஓடுகின்ற ஆறு தடைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. அணைகள் தேக்கினாலும், மலை முகடுகள் தடுத்தாலும், கடலை நோக்கிப் பாய்கின்ற ஆறு நின்று விடுவதில்லை.

இலக்கைச் சென்று அடைந்தே தீர்வது என்று நீ முடிவெடுத்து விட்டால் உன்னை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

ஆமாம் நண்பா, என்னை நீ சரியாக மதிப்பீடு செய்து கொண்டு விட்டால், நீ விரும்புகின்ற எதுவும் உன் வசப்படும்.

*- பி.சி. கணேசன்*

# ஆப்பிழுத்த நிலையில் அரசாங்கம்

**வி. சபேசன்**
*(ஒரு பேப்பருக்காக)*

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் மிகுதியாக இருந்த பகுதியாகிய குடும்பிமலையையும் (தொப்பிக்கல) சிறிலங்காப் படையினர் கைப்பற்றி விட்டனர்

ஏறக்குறைய மூன்று மாதங்கள் செய்த சண்டைகளின் மூலம் குடும்பிமலையின் மையப்பகுதியை சிறிலங்காப் படையினர் கடந்த 11.07.07 அன்று அடைந்தனர்.

சிறிலங்காப் படைகள் முன்னேற்றிய போது விடுதலைப் புலிகளின் தரப்பில் இருந்து எவ்வித எதிர்ப்பும் வரவில்லை. விடுதலைப் புலிகள் தேவையற்ற இழப்புக்களை தவிர்க்கும் பொருட்டு வேறு பகுதிகளை நோக்கி நகர்ந்து விட்டனர்.

குடும்பிமலையில் நிலைகொண்டிருந்ததாக கருதப்பட்ட பல நூற்றுக் கணக்கான போராளிகளும் தளபதிகளும் சிறிலங்காப் படைகளின் முற்றுகையை உடைத்துக் கொண்டு, பெரும்பாலான ஆயுத தளபாடங்களோடு வேறு பகுதிக்கு நகர்ந்து சென்ற விட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் படையணிகள் தற்பொழுது குடும்பிமலையின் மேற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ளதாக ஒரு கருத்தும், அவர்கள் அனைவரும் வன்னிக்குச் சென்று விட்டார்கள் என்று ஒரு கருத்தும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் குடும்பிமலைப் பகுதி உட்பட ஏறக்குறைய 60 கிலோமீற்றர் வரை நீளமான பெரும் காட்டுப் பகுதி உள்ளது. தற்பொழுது சிறிலங்காப் படையினர் நிலைகொண்டுள்ள குடும்பிமலைப் பகுதியில் இருந்து சில நூறு மீற்றர்கள் தூரத்தில் விடுதலைப் புலிகள் நின்றாலும், அதை அறிய முடியாத அளவிற்கு அடர்ந்த காடுகளையும், சிறு குன்றுகளையும், நீரோடைகளையும் கொண்ட பகுதியாக அப் பகுதி திகழ்கிறது.

## புலிகள் கிழக்கில் இரத்தம் சிந்தாது கைப்பற்றிய பகுதிகளை சிறிலங்காப் படைகள் ஒரு வருடம் யுத்தம் செய்து பெரும் இழப்புக்களையும் கொடுத்து கைப்பற்றியிருக்கிறது.

வடக்கில் தொடங்கவிருக்கும் பாரிய படை நடவடிக்கையின் பொருட்டு ஜெயம், ரமேஸ் போன்ற முக்கிய தளபதிகள் வன்னி சென்று விட்டதாக சொல்லப்படுகிறது. அதே வேளை கிழக்கில் சில நூறு விடுதலைப் புலிகள் சிறு சிறு படையணிகளாக தொடர்ந்தும் இயங்கி வருகின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் படையணிகள் பாரிய இழப்புக்கள் எதையும் சந்திக்காத நிலையில் சிறிலங்காப் படைகள் குடும்பிமலையை அடைந்துள்ள நிகழ்வு கிழக்கு நிலவரத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடியது அல்ல.

விடுதலைப் புலிகள் கிழக்கின் எப்பகுதியையும் போர் செய்து கைப்பற்றவில்லை. கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அடிக்கடி சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. அதே பகுதிகள் பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை செய்யாமலேயே மீண்டும் விடுதலைப் புலிகளின் கைகளில் வந்திருக்கின்றன.

புலிகள் கிழக்கில் இரத்தம் சிந்தாது கைப்பற்றிய பகுதிகளை சிறிலங்காப் படைகள் ஒரு வருடம் யுத்தம் செய்து பெரும் இழப்புக்களையும் கொடுத்து கைப்பற்றியிருக்கிறது. ஆனால் இம்முறையும் இதே பகுதிகளை விடுதலைப் புலிகள் மீண்டும் கிழக்கில் யுத்தம் செய்யாமலேயே கைப்பற்றும் சாத்தியங்கள் நிறைய உண்டு.

சிறிலங்காப் படைகள் கிழக்கைக் கைப்பற்றியதானது சில விடுதலைப் புலிகளுக்கு சில பின்னடைவுகளையும் கொடுத்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது போன்று கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்ந்த மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் சிறிலங்காப் படைகளிடம் அகப்பட்டுவிட்டார்கள்.

இது ஆளணிகளை பெறுகின்ற விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனித அவலமும் குறிப்பிடத்தக்கது.

இவைகள் சிறிலங்கா அரசை பொறுத்தவரை ஒரு வெற்றியாகும்.

ஆனால் மக்கள் வாழாத காட்டுப்பகுதியான குடும்பிமலையை கைப்பற்றி அங்கு சிறப்புப் பயிற்சி பெற்ற படையினரை நிறுத்துவது என்பது சிறிலங்கா படைகளுக்கு சாதகங்களை விட பாதகங்களையே ஏற்படுத்தும். சிறிலங்காவின் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் 'குடும்பிமலையைப் பிடித்து மரம் வெட்டி விற்கலாமே தவிர, வேறு எந்த நலனும் இல்லை' என்று தெரிவித்துள்ளார்.

## 'குடும்பிமலையைப் பிடித்து மரம் வெட்டி விற்கலாமே தவிர, வேறு எந்த நலனும் இல்லை' இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்ல. ரணில் விக்கிரமசிங்கவே.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ குடும்பிமலையை சிறிலங்காப் படையினர் சென்றடைந்த நிகழ்வை பெரும் வெற்றியாக சித்தரித்து, அதற்கு 19.07.07 அன்று சிங்கள தேசம் முழுவதும் வெற்றி விழாக்களை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றார். இதன் மூலம் விடுதலைப் புலிகளின் மிக முக்கிய ஒரு பலமான தளத்தை கைப்பற்றி விட்டதாக ஒரு மாயை உருவாக்க முடியும் என்றும் மகிந்த நம்புகின்றார்.

ஆனால் மக்கள் எவரும் வாழாத காட்டுப் பகுதியான குடும்பிமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்தும் நிற்காது, வெற்றிவிழா முடிந்த ஓரிரு மாதங்களின் பின்னர் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி விடுவார்கள் என்றே நம்பப்படுகின்றது. அப்படி வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் வடக்கில் தென்படுகின்றன.

கிழக்கை சிறிலங்காப் படைகள் கைப்பற்றி தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்பப்பட்ட ஒட்டுக்குழுக்களும் தங்களுக்குள் மோதுகின்ற நிகழ்வும் கிழக்கில் தொடர்ந்து நடைபெறுகின்றது.

கடந்த சில வாரங்களாக கிழக்கில் கருணா அணி, பிள்ளையான் அணி, ஈபிடிபி, புளொட் போன்ற ஒட்டுக்குழுக்களுக்கு இடையில் பல முனை மோதல்கள் நடந்து வந்தன. தற்பொழுது நிலைமை சிறிது அமைதியாக காணப்பாடுவது போல் தென்பட்டாலும், மீண்டும் எந்நேரமும் மோதல்கள் வெடிக்கலாம் என்ற நிலையே காணப்படுகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் கருணா குழுவிற்குள் பிளவு ஏற்பட்டு கருணா அணியும் பிள்ளையான் அணியும் மோதிக் கொண்டன. இந்த மோதல்கள் சற்று தணிந்த நிலையில் கருணா அணியோடு மற்றைய ஒட்டுக்குழுக்களாகிய ஈபிடிபி, புளொட், பத்மநாபா குழு ஆகிய ஒட்டுக்குழுக்கள் மோதலில் ஈடுபட்டன.

கருணா அணிக்கும் பிள்ளையான் அணிக்கும் இடையிலான பிரச்சனை தீர்க்கப்பட்டுவிட்டதாக கருணா அணி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. ஆனால் பிள்ளையான் அணி தொடர்ந்தும் கருணாவுக்கு எதிராக தனித்தே இயங்கி வருகின்றது. அத்துடன் தாமே உண்மையான 'ரிஎம்விபி' என்றும் சொல்லி வருகிறது.

கிழக்கில் மக்கள் வாழும் பகுதிகள் அனைத்தையும் தன்னுடைய ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வந்துள்ளதோடு குடும்பிமலையையும் கைப்பற்றிவிட்ட சிறிலங்கா அரசு கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு முயன்று வருகின்றது.

அப்படி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமாயின் கருணா அணியின் கொலைப் பயமுறுத்தல்கள் காரணமாக விடுதலைப் புலிகளின் ஆதரவு பெற்ற 'தமிழ் தேசியக் கூட்டமைப்பு' போட்டியிட முடியாத நிலை உள்ளது.

இந்த நிலையை சாதகமாக்கிக் கொண்டு கள்ள வாக்குகள் மூலம் உள்ளூராட்சித் தேர்தலில் வென்றுவிடலாம் என்று கருணா அணி நம்புகின்றது.

அதே வேளை இந்தத் தேர்தலில் ஈபிடிபி போன்ற ஒட்டுக்குழுக்களும் போட்டியிட தயாராகி வருகின்றன. சில மாதங்களாக கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்பட்டு வந்த ஈபிடிபி தற்பொழுது வேகமாக செயற்படத் தொடங்கி உள்ளது.

தமிழ் மக்களுக்கு செய்து வரும் துரோகத்திற்கு கூலியாக சிறிலங்கா அரசிடம் பெற்றுள்ள அமைச்சுப் பதவி ஈபிடிபிக்கு சாதகமாக உள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் ஈபிடிபி வாகரைப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியது. அத்துடன் கிழக்குச் செயற்பாடுகள் குறித்து ஈபிடிபியின் தலைவர் தன்னுடைய சகாக்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இந்த நேரத்தில் புளொட் இயக்கமும் கிழக்கில் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு மேலும் சிலரை கிழக்கிற்கு அனுப்பியது. அத்துடன் பத்மநாபா குழுவும் கிழக்கிற்கு சென்றது.

இதனால் கடும் எரிச்சலடைந்து கருணா அணி தன்னுடைய 'சகோதர ஒட்டுக்குழுக்களுக்கு' எதிராக தாக்குதல்களை நடத்தியது. சில இடங்களில் ஈபிடிபிக்கும் கருணா அணியினருக்கும் இடையில் சிறு சிறு மோதல்கள் நடந்தன.

## கருணா பிள்ளையான் மோதல்கள் சற்றுத் தணிந்த நிலையில் மற்றைய ஒட்டுக்குழுக்களாகிய ஈபிடிபி, புளொட், பத்மநாபா குழு ஆகிய ஒட்டுக்குழுக்கள் மோதலில் ஈடுபட்டன.

இந்த மோதல்கள் செங்கலடியில் பெரிதாக வெடித்தது. கடந்த 04.07.07 அன்று செங்கலடியில் ஈபிடிபியின் முகாமை கருணா அணியினர் சுற்றி வளைத்து தாக்குதல் தொடுத்தனர். ஈபிடிபியினரும் திருப்பித் தாக்கினர். இந்தச் சண்டையில் கருணா அணியினர் இருவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். கடைசியில் கருணா அணியினர் தாம் வந்த வாகனத்தையும் விட்டு விட்டு ஓடினர்.

இதையடுத்து 'உதயசூரியன் படையணி' என்ற பெயரில் கருணா அணியினர் ஈபிடிபிக்கு எதிராக துண்டுப் பிரசுரம் வினியோகித்தனர். கிழக்கில் ஈபிடிபியினர் செயற்படக்கூடாது என்றும், அப்படிச் செயற்படுபவர்கள் கொல்லப்படுவார்கள் என்றும் அந்த துண்டுப்பிரசுரத்தில் மிரட்டப்பட்டிருந்தது.

இதே வேளை கொக்கட்டிச் சோலையில் வைத்து சில புளொட் உறுப்பினர்கள் கருணா அணியினரால் தாக்கப்பட்டனர். பத்மநாபா குழுவினர் மீதான தாக்குதல்களும் இடம்பெற்றன.

இப்படி கருணா அணியினர் மற்றைய ஒட்டுக்குழுக்களின் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஈபிடிபி, புளொட், பத்மநாபா குழு ஆகிய ஒட்டுக்குழுக்கள் சிறிலங்காவின் கிழக்கு மாகாண படைத்தளபதியை சந்தித்து முறையிட்டன.

அத்துடன் இந்த ஒட்டுக் குழுக்கள் வேறொரு வழியையும் கையாண்டன. ஈபிடிபி, புளொட், பத்மநாபா குழு ஆகியன கையாண்ட அந்த வழி கருணாவை அச்சத்திற்கு உள்ளாக்கியது. கருணாவிற்கு எதிராக இயங்கி வரும் பிள்ளையானுடன் ஒரு கூட்டணியை ஏற்படுத்துவதுதான் அந்த வழி. பிள்ளையானும் கருணாவிற்கு எதிரான ஒட்டுக்குழுக்களுடன் நட்புறவை பேணுவதற்கு முன்வந்தார்.

*(தொடர்ச்சி 18ம் பக்கத்தில்)*

*விழாமலே*
*வாழ்வது*
*பெருமையல்ல*
*வீழ்ந்தாலும்*
*எழுவதே*
*பெருமை*

# இழுபறிப்படும் தீர்வு

உமா மகாலிங்கம்
( ஒரு பேப்பருக்காக )

ஒஸ்லோவில் இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் கூட்டு அறிக்கையொன்றை வெளியிட முடியாத ஒரு சூழ்நிலையில் முடிவுற்றதை அனைவரும் அறிவர்.

எனினும் அங்கு விவாதிக்கப்பட்ட விடயங்கள் சிறிது சிறிதாக கசியத் தொடங்கியுள்ளது. பிரதானமாக இலங்கையில் புரையோடிப் போன இனப்பிரச்சனைக்கான ஒரு தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் இழுத்தடிப்பதை சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவே அறிய முடிகிறது.

இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் யோசனைகள் ஒருபக்கச் சார்பான தீர்வுப் பொதியாக இருக்கப்போவதாக இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளில் பெரும் பாலானோர் கருதுவதாக நம்பப்படுகிறது.

அதே சமயத்தில், யப்பானின் விசேட பிரதிநிதியான யசூசி அகாசி அவர்கள், இலங்கை அரசாங்கத்திற்கு பக்கபலமாக வக்காலத்து வாங்கிய செய்திகளும் அடிபடாமல் இல்லை.

இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன்னர், யப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசி அவர்கள், இலங்கைக்கு விஜயம் செய்த செய்திகள் யாபேரும் அறிந்ததே.

அரசாங்கப் பிரதிநிதிகளே பயணம் செய்ய அச்சப்படும் வாகரைப் பிரதேசத்துக்கு யசூசி அகாசி அவர்கள் மேற்கொண்ட துணிவான பயணம்,, அவருடைய உள்நோக்கத்தை அம்பலமாக்குகின்றது.

அகாசி அவர்கள் தலைநகர் கொழும்பில் தங்கியிருந்த போதே, அப்பாவித் தமிழ் மக்கள் 400 பேர் வரை, இரவோடு இரவாக கொழும்பிலிருக்கும் தங்கு விடுதிகளிலிருந்து பலாத்காரமாக, வடக்கில் வன்னிக்கும், கிழக்கில் திருகோணமலைக்கும் வெளியேற்றப்பட்ட நகர்வு நடந்தேறியது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை மீறும் இந்த அராஜகச் செயலை, ஒரு சொல்லால் தானும் கண்டிக்கத் திராணியற்ற யப்பானின் விசேடப் பிரதிநிதியின் சமரச அணுகுமுறையில் தமிழ் மக்கள் எங்ஙனம் நம்பிக்கை வைக்க முடியும்?

இணைத் தலைமை நாடுகளில் சில இலங்கைக்கு வழங்கும் நிதிஉதவிகளில் சில பகுதிகளை நிறுத்தியுள்ள அதேசமயம், யப்பான் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை தொடர்ந்தும் கொடுக்கத் தயாராகவுள்ளதை உச்சத் தொனியில் உரத்து விளம்பரம் செய்வதை, இலங்கை அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை தனது கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதையே எழுத்தில் அடங்காத ஒரு கொள்கைப் பிரகடனமாக கடைப்பிடித்து வருகிறது.

பாரிய அழிவை ஏற்படுத்தும் கனரக ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்ய முதலில் மறுத்த இந்தியா, பின்னர் படிப்படியாக இறங்கி, அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் ஆயுதங்களை விற்பனை செய்யமாட்டோம் என முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை விடுப்பது, அரசியல் நாணயமற்ற பச்சோந்தித்தனமான செயலாகவே கருதமுடிகிறது.

இலங்கை அரசாங்கத்தால் வாங்கப்படும் கோடிக்கணக்கான ஆயுதங்கள் இதுவரை காலமும் அழித்தொழித்த அப்பாவிகளின் உயிர்களையும், உடைமைகளையும் கணக்கிலெடுத்தால் அவை முற்றுமுழுதாக தமிழ் மக்களையும், தமிழர் வாழும் பிரதேசங்களையும் தான் பாதித்துள்ளன.

எனவே, இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வாங்கப்படும் ஆயுதங்கள் என்பதைவிட, தமிழ்மக்களை கொன்றொழிக்கத் தேவைப்படும் ஆயுதங்கள் என்பது தான் சரியான பதமாகும்.

**சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் நடந்த யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களையும் அதன் பின்னர் நடந்த சம்பவங்களையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.**

ஈழத் தமிழ் மக்களின் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து, தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை விரட்டி விட்டதாக தம்பட்டமடிக்கும் இலங்கை அரசாங்கம் குடும்பிமலை பிரதேசத்தை கைப்பற்றியதை தேசிய எழுச்சிவிழாவாக கொண்டாடப் போவதாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரத்தை தாக்குப் பிடிக்கமுடியாமல் திண்டாடும் மகிந்தாவின் கூட்டரசு, சிங்கள மக்களிடையே இழந்துவிட்ட செல்வாக்கை சுதாகரித்து சுத்தமான சிங்கள இனவாத உணர்ச்சியைத் தூண்டுவதே, இத்தகைய தேசிய நிகழ்வுகளின் பிரதான நோக்கமாகும்.

இதேபோல் முன்னர் சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சியில் எடுக்கப்பட்ட விழாக்களையும் அதன் பின்னர் நடந்த நிகழ்வுகளையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இதனிடையே இணைத் தலைமை நாடுகள் விரும்புவதைப் போன்று அனைத்துக் கட்சிகளின் ஏகோபித்த ஒரு தீர்வு யோசனை அம்பலத்துக்கு வருவதில்தான் பிரச்சனையே தங்கியுள்ளது.

இதன் காரணமாகவோ என்னவோ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அவர்கட்கும், இனப்பிரச்சனைக்கான ஓர் தீர்வு யோசனையை சமர்ப்பிக்குமாறு யசூசி அகாசி அவர்கள் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச அரசை எவ்வளவு விரைவில் கவிழ்க்கமுடியுமோ, அதைச் செய்வதற்கு காத்து நிற்கும், ஜே.வி.பி, ஐ.தே.க மற்றும் சி.ல.சு.க (மக்கள் பிரிவு) கட்சிகள், அனைத்துக் கட்சிகளின் குழுத் தீர்வுக்கு அனுசரணை வழங்குமானால், மகிந்தாவின் அரசைக் கவிழ்க்கும நோக்கம் எவ்வாறு ஈடேறும்?

எனவே, அகாசி அவர்கள் எதிர்பார்ப்பது போல் ஒருமித்த கருத்துடனும், கண்ணியத்துடனும், இதயசுத்தியுடனும் சிங்கள கட்சிகள், இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்போவது இன்று மட்டுமல்ல என்றுமே ஈடேறமுடியாத ஆசை.

ஆடிமாதம் 2ம்திகதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சி.ல.சு.கயின் 17வது தேசிய சம்மேளனம் நடைபெறவிருக்கும் சந்தர்ப்பத்தில் திருத்தப்பட்டுள்ள இனப்பிரச்சனைக்கான தீர்வு யோசனைகள் வெளியிடப்படுமென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவர்கள், ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சி.ல.சு.க வினால் ஆரம்பிக்கப்பட்ட தீர்வு யோசனைகளை பிரதான கட்சிகள் ஜே.வி.பி உட்பட நிராகரித்துள்ள ஒரு நிலையில், திருத்தப்பட்டுள்ள தீர்வு எவ்வளவு தூரம் வரவேற்கப்படும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

இணைத்தலைமை நாடுகள், இந்தியா அடங்கலாக இலங்கையின் யுத்த மோகத்தை அடக்கக்கூடிய, யுக்திகளை கைக்கொண்டால் ஒழிய இலங்கையில் இனப்பிரச்சனைத் தீர்வு எட்டாக் கனியாகவே இருக்கப் போகிறது.

FORWARD
REAL ESTATES
Sales, Lettings, Management

"அழியாத செல்வம் மனையொன்றே"...
அதைப்பெற்றுத் தரும் உங்கள் நண்பன்...

PROPERTY & FINANCE CONSULTANTS
With 25 years of combined experience of providing services to the business and community.

1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2AJ TEL: 020 8900 9052
www.forwardrealestates.co.uk and e-mail address:mail@forwardrealestates.co.uk.

HOMEOWNERS/LANDLORDS!
WE REQUIRE YOUR PROPERTIES FOR SALES/RENT TO OUR WAITING, READY AND ABLE BUYERS AND QUALITY TENANTS. WE PROVIDE COMPREHENSIVE SERVICE FROM REFERENCING TO MANAGEMENT

திறப்புவிழா சலுகை 0.6% ON SALES - 5% ON LETTINGS * Limited Time Only


HARROW £479,950
This property benefits from a TV room, store room, lounge, dinning room, office, kitchen, utility, 3 bedrooms, bathroom, front and rear garden. This property is offered in good condition.


WILLESDEN £245,000
Forward Real Estates are delighted to offer for sale this 2 bed ground floor flat. This flat offers gas central heating, part double glazing, fitted kitchen, a reception, 2 bedrooms, front and rear garden, bathroom and off street parking. This property is offered in good condition and internal inspection is highly recommended.



LAUNDERETTE AND DRY CLEANERS - EDGWARE £240,000
Forward real estates are pleased to present this successfully trading Laundrette and Dry cleaners for sale. This shop boasts of a large trading area and is situated in a prominent location. The takings from the shop is £14,000 (approx) per month. There are 1 - 4 bedroom flat, 1 - 2 bedroom flat and 1 - studio flat on the top floors. Early viewings are highly recommended to avoid disappointment.

COMMERCIAL PROPERTY FOR LEASE
GROCERY / OFF LICENCE -WILTSHIRE
£80,000
Forward real estates are pleased to present this Grocery and off-licence shop in Wiltshire.The property comprises of a ground floor trading area of about 1,500 sq ft, storage area and 3 / 4 bed flat on the first floor.

Try us, be surprised!!! 020 8900 9052

FindaProperty.com

வாசகர் கடிதம்

# அன்பார்ந்த இயக்குனரே

அன்பார்ந்த இயக்குனர் அவர்களே வணக்கம் தங்களின் மேற்பார்வையில் வெளியிடப்படும் ஒரு பேப்பர் ஜீலை 06- ஜீலை 19-2007. கிடைத்தது. அதிலுள்ள சிறு குறிப்புக்கள்.

1) முதற் பக்கத்தில் கட்டுக் கட்டுகளாகப் பேப்பரை அடுக்கி விட்டு அதன் மேல் ஒருத்தர் சப்பாத்து காலுடன் படுத்துக் கிடக்கின்றார். இது கேலியா? வெறுங்கால் ஒரு கடதாசியை மிதித்தாலே கும்பிட்டு விட்டு எடுப்பது தமிழன் பண்பாடு. நீங்கள் உங்கள் ஒரு பேப்பரையே இகழ்கிறீர்கள்.

2)கிறிஸ்தவ தேவவாலயங்களைப் பௌத்த சிங்கள வன் இடித்து அழிக்கின்றான். அப்படிபட்ட ஜனாதிப திக்கு ஒரு கிறிஸ்தவ மதப் போதகர் சாஸ்திரம். கூறி அது பொய்த்த கதையை ஒரு அன்பர் ஒரு பேப்பர் மூலம் அம்பலப்படுத்தினார். இப்போது 2வது பக்கத்தில் இயேசு அழைக்கிறார் விடுதலைப் பெருவிழா என விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது. யாரை ஏமாற்ற? நான் பகுடி விடவில்லை.

3) இளந்திரையனின் விளக்கம் ஐயம் கொண்டோருக்கு ஒரு கலங்கரை விளக்கம்.

4) இரவி அருணாசலம் எழுதிய எட்டி நட விடயம் ஜோர். புள்ளிக் கணக்குடன் நிருபிக்கின்றார். விடாதே! பிடி.

5)தங்கத் தலைவா! என்னும் விடயத்தை பாபா என்பவர் எழுதியுள்ளார். ரசனி தமிழனாம் இதற்கு மேல் என்னத்தைக் கூற அவர் கூறியபடி புலம் பெயர் நாடுகளில் ரசனி வந்து கால் பதிக்கட்டும் கலை நிகழ்ச்சிகள் நடத்தட்டும் பார்ப்போம். அதன் பின் விளைவுகளைப் பார்க்கட்டும் புனைபெயர் பாபா.

6) ரஜனிகாந் பற்றி நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற பகுதியில் வித்தகன் விளக்குகின்றார். சில நியாயங்களையும் கூறுகின்றார் இது பற்றி நான் முன்பே ஒரு பேப்பருக்கு எழுதியுள்ளேன். ரசனி தமிழீழத்துக்கு உதவி செய்யவில்லை என்பதல்ல குற்றச் சாட்டு. அவரின் நக்கல் நையாண்டி, குரோதம், கன்னடத்தமிழ், மக்களின் இரத்தம் ஆறாக் ஓடும் தமிழ்ழத்தில், சூறா வளியா, பூகம்பமா கௌந்தளிப்பா புராணக் கதை என்றதும். ஜெயலலிதாவுக்கு விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல, இந்தியாவிலும் சில புலிகள் உளர் என்றதும் தான் கோபம். இப்போது வித்தகனுக்குப் புரிந்திருக்கும்.

தமிழீழம் பற்றிக் கதைக்க ரசனி யார்? ஜெயலலிதா யார்? தமிழ் நாட்டுக்கு வயிறு வளர்க்க வந்தவர்கள். அப்படிப் பட்டவர்கள் தமிழ்நாட்டை ஆளுகின்றனர். இதற்கு யார் காரணம் தமிழன். 5ல் காட்டிய படி தமிழன் புகழ்கிறான் நாமேன் அடிபடுவான்? நான் சாதி பற்றி விளக்கம் கொடுத்ததற்கு ஒரு புல்லுருவி 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுதமாதிரி' நீலிக் கண்ணீர் வடித்துள்ளான். என்னளவில்லை அவன் நரக உலகத்தில் இருக்கின்றான். அது தான் துர்நாற்றம் எடுக்கின்ற கூற்றுக்களைக் கூறுகின்றான், நான் எதற்கும் பயப்படமாட்டேன் என்பதையும் கூறிவைக்கின்றேன்

ரசனி: கன்னட நடிகர் ராஜ்கபூரை வீரப்பன் விட்டிரா விடின் கன்னடத்தில் உள்ள தமிழரின் இரத்தம் ஆற ாக ஓடும் எனக் கூறியதாக ஒரு அன்டர் ஒரு பேப்பரில் பீத்தினார்.

நான் நேரடியாகவே ரசனிக்குச சவால் விட்டுக் கடிதம் அனுப்பினேன். அத்துடன் கருணாநிதி, சத்தியராசுக்கும் புறம்பாகக் கடிதங்கள் அனுப்பினேன். பதில் தந்தால் பிரதியை உங்களுக்கும் அனுப்புவேன். வீரப்பனை அரசு கவனிக்க வேண்டும். நடிகனுக்கு அங்கு என்ன வேலை.

1) சிரேயா, ரசனி படத்துடன் சிவாஜி படம் பற்றி ஆங்கிலத்திலும் வெளுத்துத் தள்ளியள்ளார் அநுராதா சென்குப்தா, பிறகென்ன ரசனிக்குக் குறை. தூற்றவா? போற்றவா தமிழா?

2)அந்தக் கருமத்தை நானும் பார்த்தேன் எனச் சுகுணா திவாகரும் (மிதக்கும் வெளியில்) சிவாஜி படம் பற்றி கூறியுள்ளார். உண்மையில் சிவாஜி படத்துக்கு 25 புள்ளிகள் போட முடியாது. எதிலும் சிறப்பு இல்லை. தூற்றல் தான் உண்டு. திவாகரையும் போற்றுவோம்.

3) அரோகரா சேளத்துடன் சிதறியது தேங்காய் பற்றி திவ்வியா வசன நடைப் பாடல் மூலம் விளக்கியுள்ளார். அவருக்கும் ஒரு அரோகராப் போடுவோம்

4) ஒரு ஷங்கர் ரசிகையின் ஆதங்கம் சுவேதிகா எழுதியது. அவரே சிவாஜி படம் சரியில்லை என்று உண் மையைக கூறியுள்ளார். மற்றவர்கள் என்னத்தையோ கண்டு பீத்துகிறார்கள். சுவேதிகாவுக்கு "ஓ" போடுவோமா இயக்குனரே.!

5) சிவாஜி விமர்சனம் ஜோர். ஆசிப் மீரான் சிவாஜி படம் சாம்பலாம். உண்மைதான். இவருக்கும் ஒரு "ஓ" போடுவோமா மனேஜரே!.

*- சிவராசா*

## விடுதலை

இந்தப் புவிதனில் வாழு மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூச்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில்செய்து வாழ்வனவோ?

வேறு

மானுட ருழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்புகட் டாவிடினு மன்றிநீர்பாய்ச் சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையாக நெற்கள் புற்கள்மலிந்
திருக்குமன்றே?
யானெதற்கு மஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்
என் மதத்தைக் கைக்கொண்மின்?
பாடுபடல் வேண்டா
ஊனுடலை வருத்தாதீர்? உணவியற்கை
கொடுக்கும்?
உங்களுக்குத் தொழிலிங்கே
அன்புசெய்தல் கண்டீர்.

# யேர்மனியில் தமிழ் செய்தியாளர் சந்திப்பு...

பிரித்தானியாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தமிழ்ச்செய்தியாளர் ஒன்றியத்தின கருத்தரங்கும் பயிற்சி பட்டறையும் கடந்த ஜூலை 14ம்திகதி ஜெர்மனி டோட்மண்ட் நகரில் நடைபெற்றது. காலையில் கருத்தரங்கும் மதிய இடைவேளைக்கு பின்னர் பட்டறையுமாக முழுநாள் நிகழ்வாக தமிழ கலாசலை மண்டபத்தில் நடந்தேறிய இந்நிகழ்வுக்கு ஊடகவியலாளர் திரு. வரதராஜா தலைமைதாங்கினார்.

தமிழாலய பாடசாலைகளின் பொறுப்பாளர் திரு. இரா நாகலிங்கம், தமிழர் கலாசாலையின் நிர்வாகி திரு.கு.ஜெயக்குமாரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். காலை அமர்வில் வரவேற்புரையாற்றிய திரு. வரதராஜா தனது நீண்டகால பத்திரிகைத்துறை அனுபவங்களை விபரித்ததுடன் தொடர்ந்து இடம்பெற்ற கருத்துரைகளை தொகுத்து வழங்கினார். தமிழர் மனிதவுரிமை மையத்தைச் சேர்ந்த திரு கிருபாகரன் ஊடகத்துறையினர் மீது நடாத்தப்படும் மனிதவுரிமை மீறல்களைப் பற்றி விளக்கியதுடன், இலங்கைத்தீவில் தமிழ் பத்திரிகையாளர்கள் குறி வைத்துத் தாக்கப்டுவதனையும் விபரித்தார்.

ஊடகத்துறையினரை பாதுகாப்பதற்காக பிரத்தியேகமான சட்டதிட்டங்கள் இல்லாமையையும் மனிதவுரிமை சாசனத்தில் கருத்துச்சுதந்திரம் சம் பந்தமான சரத்துக்கள் பற்றியும் விளக்கினார். விவரணப்படங்கள் தயாரிப்பது பற்றி விபரமாக எடுத்துரைத்த திருமதி. ருபினி செல்வநாதன், அவற்றை தயாரிப்பதிலும், திரையிடுவதிலும் தான் பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். பிபிசி தமிழ்ச்சேவையின் முன்னாள் பணிப்பாளரும் தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் தலைவியமான திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் இன்றைய உலகில் பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் அழுத்தங்கள் என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து ஒருபேப்பரின் பொறுப்பாசிரியர் திரு.கோபி ஊடகத்துறையின் புதியபரிமாணமும் தொழில்நுட்பமும் என்ற தலைப்பில் புதிய ஊடகத்துறை பற்றி விளக்கினார்.

ஒன்றியத்தின் செயலாளர் திரு. குகன் தம்பிப்பிளளை ஒன்றியத்தின் நோக்கம் செயற்பாடுகள் பற்றி விபரித்ததுடன் காலை அமர்வு நிறைவுக்கு வந்துது. ஊடகத்துறை சார்ந்தவர்களே பெருமளவில் கலந்து கொண்டதுடன் அவ்வப்போது காரசாரமான கருத்துப்பரிமாற்றமும் நடைபெற்றது. பிற்பகல் அமர்வு ஊடகவியலாளருக்கான பயிற்சி பட்டறையாக அமைந்தது.

செய்திகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை நேர்காணல் செய்யும் முறை பற்றிய இப்பட்டறையை திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம் நெறிப்படுத்தினார். இளையவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் .என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியை செய்தியாளர் ஒன்றியத்துடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த சர்வதேச புலம்பெயரந்த எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு.ஏலையா முருகதாசன் அவர்கள் தமது அமைப்புபற்றி அறிமுகம் செய்து வைத்தார். இவ்வமைப்பைச்சேர்ந்த திரு. பாக்கியநாதன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## நான்கு நாட்களுக்கு ஒருமுறை என்றால் போதுமானது.

பெரும் பணக்காரியான ஒருத்தி நாகரிகமாக இருந்தாள். ஆனால் அவளிடம் வேலை பார்த்த காரோட்டியோ நன்றாக உடை அணிவதிலோ ஒழுங்காக முக சவரம் செய்து கொள்வதிலோ அக்கறை காட்டாமல் இருந்தான். ஆனால் காரோட்டுவதில் திறமைசாலியாக இருந்தான்.

காரோட்டியின் குறைகளைச் சுட்டிக் காட்டி அவனைத் திருத்த வேண்டுமென்று நினைத்தாள் அவள். கார் ஓடிக் கொண்டிருந்தது.

காரோட்டியைப் பார்த்து, நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதே. எத்தனை நாளைக்கு ஒரு முறை ஷேவ் செய்வது நல்லது என்று நினைக்கிறாய்? என்று கேட்டாள் அவள்.

திரும்பி அவளைப் பார்த்த காரோட்டி, 'உங்களைப் போன்று மெதுவாக முடி வளர்ப்பவர்களுக்கு நான்கு நாட்களுக்கு ஒரு முறை ஷேவ் செய்தால் போதும்' என்றான்.

business finders

Wishing to buy a business? Or Selling your business?

Also we can arrange business finance for freehold & leasehold purchases or Re - Mortgages upto 85% loan to values.

We specialise in Commercial Sales

Business urgently required selling in confindence, strictly no sale no fee & no upfront charges.

32 High Street, Ewell Village, Surrey KT17 1RW
Tel: 020 8942 1235 / Mob: 07957 594 881 / Fax: 020 8942 1234

# தலைமுறை மறக்கும் தமிழ் விளையாட்டுக்கள்



மலைநாடான்
*( குறிஞ்சிமலரில் )*

உங்களுக்கு, கிட்டிப்புள்ளு (கிட்டிப்பொல்லு, கில்லி) விளையாட்டு, விளையாடும் முறை ஞாபகமிருக்கிறதா? என சென்ற வாரம் இணையத்தூதில் உரையாடிய போது நண்பரொருவர் கேட்டார். என்ன திடீரென கிட்டிப்புள் விளையாட்டைப் பற்றி அக்கறையாக் கேட்கிறியள் என்ற கேள்வியோடு, உரையாடல் தொடர்ந்த போது, விளையாட்டு முறைகள் சற்று ஞாபகமற்றுப் போயிருந்தது எனக்கும் உறைத்தது.

ஒருகாலத்தில், நாளும் பொழுதும் இந்த விளையாட்டுக்களோடு திரிந்த நமக்கே, வாழ்நிலைச் சூழலின் சறுக்கலில் அவை நினைவற்றுப்போயுள்ளன. அப்படியாயின், போரும் வாழ்வுமாகிப்போன, எங்கள் புலத்திலோ, அந்நியச்சூழலே நம் வாழ்தளம் என்றாகிப்போன புலம்பெயர்சூழலிலோ, வாழுகின்ற நம் இளைய தலைமுறைக்கு, இந்த விளையாட்டுக்கள் பற்றி ஏதேனும் தெரிய முடியுமா?

இப்படியொரு கேள்வி இப்புலம்பெயர் சூழலில் எழுந்த போதுதான், தொடக்கக் கேள்வி என்னையும் நோக்கி வந்தது. எதுவுமற்ற ஏதிலிகளாக, வேதனைகளைச் சுமந்த வண்ணம், இருப்பினை எண்ணிக் கொண்டு, புலம்பெயர்ந்த வேளையிலோ, பின் வந்த வெறுமை மிகு வாழ்க்கைக் காலங்களிலோ விளையாட்டுக்கள் எங்கள் மனதை நிறைத்திருக்கவில்லை. அதனால் அவை மறக்கப்படுமாறு ஆயிற்று. வறண்டுபோன எங்கள் வாழ்வியலில், புது வசந்தங்களென எங்கள் பிள்ளைகள் வளர்ந்தபோது, அவர்கள் ஓடியாடி விளையாடும் தருணங்கள் வந்தபோது, எங்கள் மனங்களிலும், இளமைக் கால ஞாபகங்கள் எழுந்து உட்கார்ந்தன. வீதிகளிலும், விளையாட்டுத் திடல்களிலும், நாங்கள் ஆடிய விளையாட்டுக்கள் ஞாபகத்திற்கு வந்தன. கூடவே, இவைபற்றியும் எங்கள் செல்வங்களுக்கு சொல்லிக் கொடுக்கவோ அல்லது சொல்லி வைக்கவோ வேண்டுமல்லோ என்ற எண்ணங்கள் இப்போ எல்லாத் திக்குகளிலும், எழும்பத் தொடங்கியுள்ளன.

## கிளித்தட்டு, கிட்டிப் புள் அடித்தல், பட்டம் விடுதல், போர்த்தேங்காய் அடித்தல், பேய்பந்து அடித்தல்

இப்படியான இன்றைய காலச் சூழலில், சுவிற்சர்லாந்து தமிழ் மன்றத்தின் விளையாட்டுத் துறை, தனது பத்தாம் ஆண்டு நிறைவை மலர் வெளியிட்டு நினைவுப்படுத்த விரும்பியபோது, மேற்சொன்ன எண்ணங்கள் வீச்சாக எழ,வாழ்த்துச் செய்திகளோடல்லாது, வளமான தமிழர் நம் விளையாட்டுக்கள் குறித்த சங்கதிகள் பலவற்றுடன், வீச்சு என்ற விளையாட்டுச் சிறப்பிதழ் மலர்ந்துள்ளது. அருமையான வடிவமைப்பில், அழகான படங்களுடன், அருமையான கட்டுரைகளும் அடங்கிய வீச்சு, உண்மையில் நம் விளையாட்டுத் துறைசார் வெளியீடுகளில் பெருவீச்சாகவே உள்ளது.

விளையாட்டிலிருந்து வினைதீர்க்கும் மருத்துவம் வரை ஒரு அஞ்சலோட்டம் எனும், ஏ.ஜி. யோகராஜாவின் நீளமான கட்டுரை, வெறுமனே ஒரு கட்டுரை எனச் சொல்லிவிட முடியாது. எங்கள் சமூகத்தின் வாழ்வியல் கூறொன்றினை விரிவாகப் பார்க்கக் கூடிய புத்தகமொன்றின் முதல்வாசிப்பு எனச் சொல்லத்தக்கது. புலம்பெயர் சூழலில் தொடங்கி, ஆன்மீகம் வரை அஞ்சலோட்டமென ச் செல்லும் கட்டுரையில், எத்தனை எத்தனை எண்ணங்கள், சான்றுகள், நோக்குகள்.

யாழ்ப்பாணத்திலிருந்து, பொன். சுந்தரராஜன் எழுதியுள்ள, தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஒரு ஆய்வுக்கான அறிமுகம் எனும் கட்டுரை, எங்கள் பாரம்பரிய விளையாட்டுக்கள் பலவற்றையும், சுருக்கக் குறிப்பில் அறிமுகம் செய்து வைக்கிறது. கிளித்தட்டு, கிட்டிப் புள் அடித்தல், பட்டம் விடுதல், படகோட்டல், மாட்டுவண்டில் சவாரி, போர்த்தேங்காய் அடித்தல், காளை அடக்குதல், பேய்பந்து அடித்தல், காயா, பழமா, சடுகுடு விளையாட்டு, புலியும் ஆடும், நொண்டி அடித்தல் அல்லது கெந்துதல், பகலாட்ட தாகம், என் உலக்கை குத்து, பச்சைக்குதிரை, அம்மானை, கீச்சுமாச்சுத் தம்பலம், தட்டாங்கல் என கட்டுரையில் பல விளையாட்டுகள் வந்து போகின்றன. இவை மட்டுமல்லாது, சுவிற்சர்லாந்தில் விளையாடப்படும் கோடைகால, குளிர்கால விளையாட்டுக்கள் என்பன பற்றிய மதுரா குணசிங்கத்தின், சுவிஸ் சாரல்களில் எனும் கட்டுரையும், வேறு சில கட்டுரைகளும், கவிதைகளும், உள்ளடக்கி வீச்சு வந்திருக்கிறது.

புலம்பெயர் சூழலில் இத்தகைய முயற்சிகள், அவசியமானது ஆரோக்கியமானது. ஆனால் இத்தகைய முயற்சிகள் வெற்றியும், உந்துதலும் பெற வேண்டுமாயின், நாமும், நமது இளைய தலை முறையும், இவற்றை வாசிக்கவும், சுவாசிக்கவும் வேண்டும். அதுவே இத்தகைய பணிகளில் ஈடுபடுவோரை உற்சாகப்படுத்தும், உயர்வுக்கும் கொண்டு செல்லும்.

போடா போடா
புண்ணாக்கு
நீ போகாங்காட்டியும்
ஆமணக்கு!

காத்து கருப்பு, காலையிலே
நீ வந்து நின்னா
கட்டி வச்ச செருப்பு !

மன்னார் குடி மச்சான்,
மத்தியானத்துக்கு வாயேன்,
மாமவேட பொணம் கிடக்குது
மாரடிச்சிக்க போயேன் !

பொண்ணுங்களை பார்க்காதே
புண்ணாகித்தான் போகாதே,
பொடலங்கா கூட்டுவச்சால்
அவரைக்காயை கேட்காதே !

- கட்டி வச்சி அடிச்சவர் நம்ம
கோவி. கண்ணன்

## ஆச்சரியங்கள்! ( !? )

சுற்றும் பூமி
சுடும் சூரியன்
சில்லென்ற காற்று
சிக்காத மேகம்
புரிந்த அறிவியல்
புரியாத இறையியல்
தெரிந்த விஞ்ஞானம்
தெரியாத வியாக்கியானம்
மறந்த மனிதர்கள்
மறைக்கின்ற விசயங்கள்
தொலைத்த தருணங்கள்
தொல்லை தரும் தருணங்கள்
அழைக்கின்ற வாழ்க்கை
அழைக்காத காதல்
சுடும் காமம்
சுடாத காதல்
தெளிந்த நீரோடை
தெளியாத மனம்

- சுந்தர்

Meera Social Service ( Non Profit Making) Centre
Priase the God through the Poor
Reg No: England and Wales 4696368

"Hands that help are holier than lips that pray"



சனிபெயர்ச்சியை முன்னிட்டு வரும் ஆடி அமாவாசை (12.08.2007) அன்று திருச்செந்தூர் முருகன் சன்னிதானத்தில் பிராமண மண்டபத்தில் (கந்த சஸ்டி நடக்கும் மண்டபம்) நடாத்தும்

"மகா அன்னதானம்"

சண்முக அர்ச்சனையுடன் இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்படும்.

திருச்செந்தூரில் வசிக்கும் 500 பிராமணர்கள் (மனைவி, மக்கள் கிட்டதட்ட 7000) இந்த நிகழ்ச்சியில் கலந்து நடாத்தும் மிகப் பெரிய நிகழ்ச்சி. ஆடி அமாவாசை அன்று திருச்செந்தூர் கடலில் பக்தர்கள் கூட்டம் அதிகம். அவர்களுக்கு சக்தி இல்லம் என்னும் ஏழை அனாதை குழந்தை வசிக்கும் இல்லத்தில் பிராமண மண்டபத்திலிருந்து வடை பாயசத்துடன் அன்னதானம் வழங்கப்படும் கிட்டதட்ட 10,000க்கும் மேற்பட்டவர்கள் எதிர்பார்க்கப்படும் இவ்வைபவத்தில் கலந்து கொண்ட பக்தர்கள் அவ்விடம் இருந்து தங்களின் குடும்ப மேன்மைக்கு ஆசிர்வதிக்கப்படுவார்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு தங்களின் நன்கொடையை அனுப்பிவைக்கலாம் பற்றுச்சீட்டும் திருச்செந்தூர் பிராசாதமும் அனுப்பிவைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Bank: **HSBC**
Sort Code: 40-07-30
Account Number: 81565680

Name: ..........
நட்சத்திரம்: ..........
Address: ..........
..........
..........
Post Code: ..........
Email: ..........
செலுத்திய தொகை: ..........

Address: **S. Senthilingam**
19 Graham Road, London SW19 3SW
Tel: **020 8842 1282 (Evening) | 020 7937 8932 (Day: Mon-Friday)**
Email: **s_senthilingam@hotmail.com**

# லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணி நிகழ்வு























## ஜோதிடர் விஜய் வர்மா

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நக்ஷத்திரம் திரு விஜய் வர்மா அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்ஷணம், ஜாதகம், பிறப்பியல், நாமநஷ்த்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற் காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாகக் கணித்து வழங்குவார்.

திருமணப் பொருத்தங்கள் பார்க்கப்படும். திருமணத்தடைகள் நீங்க, குடும்பத்தில் நிலவுகின்ற கணவன், மனைவி பிரச்சினைகள் தீர, காதல், வேலை மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் ஏற்படும் தடைகள் மற்றும் எதிர்பாராத சரிவுகளுக்குப் பரிகாரம் வழங்கப்படும். வாகனப் பொருத்தங்கள் பார்க்கப்படும். பில்லிசூனியம், ஏவல், செய்வினை ஆகியவற்றால் பாதிப்படைந்தவர்களுக்குப் பரிகார பூஜைகள் மற்றும் குழந்தை பாக்கியம், தேவி உபாசனைகள் மூலம் தீர்வுகள் வழங்கப்படும். அனைத்துவிதமான தோஷங்களுக்கும் கண்திருஷ்டிகளுக்கும் பரிகாரம் வழங்கப்படும்.

**Specialist in all kinds of Astrology**

You will come to know about your past, present & future by hand predicition, horoscope, face reading, intending persons mat contact. for job family matters, husband & wife relationship, love, education, business, choice of stones, marriage, sickness, promotion, family problems, children problems, Immigration, abroad, money, sexual problems, etc. Witch craft will be cleared by performing Poojas and Devi Upasanas. Lakshmy Pooja, prayers and protection from enemy.

*Contact Mob:* **07957 547 255**

1st Floor, 14A Ealing Road, Wembley, Middx, HA0 4TL
(Upstairs of Oviya Entertainment)
(Opposite Saghana Jewellers)

***Opening Hours:*** 9.00 a.m – 9.00 p.m Seven days a week.

# Remembering the 'BLACK JULY'



**Charles Somasundrum**
**FOR ORUPAPER**

The 25th of July 2007 sees the approach of the 24th anniversary of what Eelam Tamils the world over will always remember as **Black July**. This is the anniversary of the most vicious and sadistic Pogrom of July 1983 that was carried out by the Sinhalas on peaceful Tamils who were minding their own business in various parts of the island. The Government and the forces of law and order stood by and just watched! Tamils were butchered in their thousands purely because they were Tamils. This date is for ever etched in the minds of all Tamils and in the history of the Eelam Nation. It will never, ever to be erased.

This particular Pogrom was carried out 24 years ago. There have been many Pogroms before and since, but this particular Pogrom will always remain within the hearts of every Tamil. There are young Tamil men and women around the world, who were born after this infamous day or were little children at the time. This article is intended primarily for such persons.

Many accounts have been written by various persons both from first hand experience and after analysing reports of the events. The best, in my view, was written by a person who was my contemporary both at college (St Johns, Jaffna) and at university (Peradeniya). At the time of the Pogrom, he held the position of chief editor of the Express Newspapers of Ceylon, Ltd based in Colombo, which published the Tamil language Virakesari daily and the Virakesari weekly. He is K Sivapragasam who is now an American citizen and goes by the name of Siva Pragas. He was among the many Tamils who left the island and sought a peaceful life abroad, after the horrifying ordeal that he and his wife (who has sadly, since died) underwent. Siva Pragas has published a book about his experiences titled **'A Country In Chaos' – 'My Life as a political refugee'**. It was published by Altar Publications of Watertown, Massachusetts, USA.

I advise all young Tamils to obtain this book and other similar books by other authors, there have been many such books, and learn for themselves about this most horrific of Pogroms. One comment in the book by Siva that I would like to share is the following - *'Everyone accepts the fact that the racists and extremists are in a minority. Up to the present, they were able to accomplish what they purported to do by sheer demagogy and cunning maneuver. The right thinking, reasonable-minded Sinhalese should not permit such a dangerous minority to dictate and determine every citizen's future'.*

Tamils were butchered in their thousands purely because they were Tamils. This date is for ever etched in the minds of all Tamils and in the history of the Eelam Nation. It will never, ever to be erased.

Meanwhile, there was a man called S A David who, though from humble origins was an architect and town planner by profession. He had been obliged to give up his post with the government on account of the Sinhala Only Act, as he was unable to work in Sinhala. He moved abroad and worked in Australia, Nigeria, Kenya and the United Kingdom, where his obvious talents were appreciated. Mr David however, decided to return to the island and devote his time and expertise to helping the talented but deprived Tamil people in the land of his birth. He set up the Gandhiyam Society in an area near Trincomalee called Pankulam in 1976. He was able to persuade a fellow Tamil who was a doctor by profession, to join him. This was a man called Dr S Rajasundaram. Over the next five years the Gandhyam Society had been able to provide refuge and rehabilitation to over 85,000 persons who had fled the tea plantations in the hill country during the Pogrom of 1977. Though the government extended no help, NGOs like OXFAM, the World Council of Churches, NOVIB of Holland and a German organisation called Bread for the World helped the society. On March 14th 1983 at 9 a.m. officials, acting on the instructions of the local Assistant Government Agent, moved into the Pankulam settlement. They burnt down farm buildings, destroyed crops and set on fire trucks and tractors donated by NOVIB. Dr Rajasunderam and three German students were taken away. Mr David and Dr Rajasunderam were later taken to the Gurunagar army camp in Jaffna which was then in the charge of a sadistic alcoholic called Commander Udugampola. David and Rajasunderam ended up in the ill fated Welikade jail where Rajasunderam died in the horrible July massacre of Tamil political prisoners by fellow criminal inmates while the prison staff and police looked on! David survived, and was moved to Batticaloa, but that is another story.

My nephew, my sister's son, had been working in 1983 in a tourist frequented hotel in Sigriya. He told me that when he heard that thugs were approaching the hotel in search of Tamils he fled, along with a number of other Tamils, to a slaughter house in the jungle where they survived without food for three days, till he found his way back to Jaffna by hitching rides but mostly on foot.. It was near this hotel that Sinhala thugs attacked an isolated Tamil village. As the thugs approached the village most of the villagers rushed into the adjoining sugar cane plantation to hide. The thugs merely set fire to the plantation and slaughtered the Tamils as they tried to escape the fire.

This matter of burning live Tamils was practiced by the thugs in Colombo who stopped cars and, when they found that the occupants were Tamil, set the car alight with the occupants inside. One such incident was reported in the western press, where the thugs had intercepted a car with a young family of a father, mother and two little children. They had set the car alight when one of the thugs realised that there were two children inside. He opened the car door and took out the two children when the father, already covered in flames, stepped out and took his two children into the car and the whole family died together. I believe the Sinhala sadists went home to a hearty meal and a night's rest!

The 1983 Pogrom showed the Sinhalas at their sadistic worst. The July pogrom should never be forgotten by any Tamil. Houses built by Tamils who spent all their hard earned money in the process were destroyed. Tamil houses were looted before they were burnt. A retired senior Tamil legal officer had his house gutted and looted and his valuable collection of books burnt. Women and children carrying away household goods that sometimes included fridges complete with their contents, from deserted Tamil properties were a common sight. Good neighbours of the past became 'temporary' looters!

My sister, who lived in Hendala with her son and his family, had to flee their house leaving it at the mercy of the looters. Many months later, after some sort of semblance of peace was restored, my sister had occasion to attend the funeral of the Sinhala gentleman who lived opposite her house. Seating was provided in the garden in front of the house for those attending the funeral. The chair that my sister was offered was one of her own dining room chairs that had been looted from her house.

Who stopped cars and, when they found that the occupants were Tamil, set the car alight with the occupants inside

It is hard to understand politicians of the west who have decided to brand the Tamil freedom fighters as 'terrorists'. The terrorists are there for them, or their diplomatic representatives in Colombo to see. If only they can spare a moment from their evening cocktails!

Today's Sinhala thugs are more refined. They travel in white vans and black motor bikes and have the protection of the forces of law and order and of senior politicians with their hand in the till.

Just as the 4th of February is a day of mourning observed by Tamils, as the day they lost their freedom, the 25th of July is a day that all Tamils should always remember. It is a day, when innocent fellow Tamils were butchered or burnt alive in their house or vehicles by Sinhala thugs. Those of us who were living during these horrendous events should always ensure that the young Tamils who follow us will know of these events and remember the Tamils who died in them.

In a free Eelam, the Eelam flag will hang at half mast on the **23 of July**.






ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

60 வருட அனுபவம்



**07951 631 883 / 020 8470 5209**

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

# Now, The World Lies in Lies!

Nakulan
FOR ORUPAPER

Separation for the Tamils now is no more a question of racial persecution. It is now a moral issue. Armed with the knowledge and the vast human resources spread around the world, the Tamils can effectively counter the propaganda machinery of the failed Sinhala state. Sri Lanka was placed in the same league as Darfur, Iraq, Afghanistan and Somalia at the last month UN session, with members calling on the International Criminal Court of justice to play a more prominent role.

In this context, making an effort to freely distribute, disseminate and discuss the information presented in the modern media at every opportunity and at every social and official gathering by the Tamil Diaspora would be an effective counter measure to the failed state's propaganda machinery.

### Kosovans and Tamils

Tamils all over the world are sceptical regarding the rationale for enhanced involvement of the British government in the peace process. In a timely reply to the High Commissioner of the UK in Sri Lanka, His Excellency Dominic Chillcot, Karen Parker, JD, Chief UN delegate, IED/HLP (International Educational Development/ ,Humanitarian Low Project) said, "You envision the future of the island, you seem adamant that there should be one single nation, albeit with sufficient devolution of power to accommodate the Tamil people. This position is in marked contrast to the UK's position regarding Kosovo, where the Kosovan self-determination claim is far weaker than that of the Tamils and the Kosovan people have not suffered nearly as much by the Serbs as have the Tamils by the Sinhalese. Frankly, I could not see how anyone could assume that after successive Sinhala regimes have carried out the most atrocities of atrocities against the Tamil people and so for so long, that the Tamils would ever trust a Sinhala government again, especially in the face of acts of genocides and when some of the major Sinhala political parties spew anti-Tamil diatribes almost daily and openly aver that their vision of the Island is a Sinhala- Buddhist State. To stress a unitary State in these circumstances is tantamount to requiring a woman to continue to live with a husband who has raped and killed her children and repeatedly beaten her senseless".

### British Experience in Northern Island

She further said, "Regarding the 'added value' of the British experience in Northern Ireland, you comment that one has to communicate with 'terrorists', which again blurs the distinction between armed conflict and war. A situation of armed violence may be either armed conflict or terrorism but legally cannot be both. Armed conflict automatically invokes the Geneva Conventions. Terrorism invokes criminal law. The Liberation Tigers of Tamil Eelam are an actual combat group, fully uniformed, occupying territory, engaging in sustained and concerted military operations with an identifiable chain of command and using the methods and material of armed conflict. Whether the war is viewed as one in the defence of the right to self-determination (I think it is) or a civil war, the minimum test for a war is clearly met. The LTTE have an army, a navy and an air force- which they are entitled to have – and can engage in any military operation not specially prohibited by the laws and customs of the war. In my view, the situation in Northern Ireland was not the same, and may, perhaps, be linked to terrorism and counter-terrorism. I recall the Irish groups never occupied much (If any) territory, clearly did not engage in 'normal' military operations, did not openly wear uniforms, and were essentially clandestine".

Using the "terrorism" label against the LTTE, of course, creates a huge problem if one wishes to negotiate and has, of course resulted in world-wide demonizing of the Tamil people, interference with both post-tsunami and war related humanitarian aid to the Tamils, "criminalizing" humanitarian aid and a whole array of other problems that severely jeopardizing any hope for a solution to this protracted conflict or help to its victims.

Readers should remember that the same Karan Parker, addressed the same meeting on the 25th day of July 2006 at Hyde Park London where enthusiastic Tamils in thousands waving flags of their dear national leader's picture, knowing very well that she was supporting a proscribed organisation, the LTTE contrary to Section 12(3) and (6) of the Terrorism acts 2000. But our popular and devoted leader A. C. Shanthan who lead the Tamils in the U.K, numbering 200 thousand in the best possible manner causing any inconvenience and full cooperation with the local authorities and the Police for such a long period of time, and our young leader Golden Lambert were not that lucky. Tamils are patiently waiting that after all justice will prevail in their adopted country.

### Two Different Identities.

Despite many interpretations of our history, theoretically and empirically it is evident that Sinhalese and Tamils display two different identities. We have few similarities and many differences. Historically, culturally and politically we are two divided ethnic groups and further history has produced more evidence to prove division between Sinhalese and Tamils than to prove harmony between them

The Tamil secessionist movement was born with the gradual enlightenment of many Tamils who now believe and advocate the idea that the Tamils can neither justice nor a future from a Sinhalese government. Therefore, there will be no harmony between Tamils and Sinhalese and this reality has emerged as a result of historical, cultural and political polarisation. This situation was never cultured or encouraged, but became inevitable naturally. The argument that in Colombo Tamils and Sinhalese are living in harmony is totally fallacious. In actual sense they are simply acting.

The Tamil secessionism has no geographical boundaries and therefore, the truth is that the vast majority of the Tamil Diaspora supports and promotes this ideology regardless of where they are based. Furthermore, since secessionism is an ideology and not an organisation, the secessionists need an organisation in order to achieve an aim. There is no argument that the LTTE is currently the sole representative of Tamil secessionism.

Note: Some parts of this article have been reproduced verbatim from the below mentioned reports. (a) Karen Parker, and (b) Views expressed by a Sinhala writer, Dinesh D. Dodomgoda in Sri Lanka morning Leader of 30 My 2007.

Editorial, Eelam Nation

# How to tell a Tamil terrorist

When the three hundred or so Tamils, the intended first batch, were being forcibly dispatched to their traditional home lands in the north and the east of Sri Lanka what would have been upper most in their minds was not that they had forgotten their tooth brush and change but how they should demonstrate that they were neither terrorists in disguise nor potential terrorists. This is a question that vexes not only those Tamils living Sri Lanka but also those living outside.

Should Tamils being Tamils, act in a special manner, speak in a special manner and even think in a special manner. Should they be forever haunted by the lurking fear that they could any moment be deemed a terrorist for being a Tamil. Should they read and believe only the Daily News and other state controlled newspapers where nothing is true but the date and the obituary notices. Should they get on to one of the numerous mounds of rubbish heaps in Colombo and crow as to how wonderfully well the terrorist state of Sri Lanka is treating the Tamil people. Should they hide the scars of torture, rape and abduction and the memories of those wantonly killed and pretend that nothing like that ever happened. Should they forget what happened to them and their relatives in 1956, 1958, 1977, 1979, 1981 and 1983 and pass on as if they were all a bad dream.

Is it illegal to nurture aspirations for their self determination, for their traditional homelands to be recognized. Should they take the culture of impunity for granted and live within it. Should they sing praises of the democracy in Sri Lanka and say that they are all equal except that some are more equal. Should they accept the justice system, which resembles a dog's breakfast, as being excellent for them and also defend the actions of the Attorney General in his bid to desperately cover up the atrocities of a terrorist state while being its advocate. Should they believe that Rajapake is serious about the outcome of the inquiries and investigations into human rights abuses and is more serious than Justice Bhagvati.

In cases of calamities, displacement and privations should not Tamils abroad make sure that their contributions reach those affected not to be siphoned off into personal bank accounts of those claiming to protect and liberate them. If they happen to "disappear' or be abducted should they make sure that they emerge in England, Germany or Switzerland alive, with their heads and other parts of their anatomy in tact, and not in the outskirts of Colombo just to prove Rajapakse right and turn a blind eye to the fact that disappearances and abductions have temporarily ceased, with a few token arrests from the cadres of the security forces revealing complicity, only after the international community voiced concerns.

Should they believe such ludicrous stories, as a Tamil staff journalist in Colombo who tried to perform the gargantuan act of "jumping at the air force van" with armed officers in it, to justify his being taken into a Buddhist temple in a high security zone being the safest place to be beaten beyond recognition. Should they accept the continuing assault on journalists and journalism.

Should the Tamils believe that with the holding of local council elections democracy will soon return to the east for them to live in a pluralist society hopefully to have their garbage collected with a lot of luck and stray dogs eliminated.

Should the Tamils trust Rajapakse who owes his position to the LTTE and who sought to betray his own Sinhala people with the promise of vanquishing the Tamil leadership to come to power with the help of the LTTE, the very same organisation that he vouched to destroy. If he betrayed his own people what chance do the Tamil people have. If the LTTE does not have the overwhelming support of the Tamils then why did he hanker after their support for his election.

If contributing monies to the Tamil Rehabilitation Organisation, which won a Sri Lankan award for the rehabilitation of the Tamil people, is an act of terrorism then paying money or attempting to pay money to the LTTE is even a greater act of terrorism. Whether the money was accepted or not is another question. Who then is the greatest Tamil terrorist of all. Rajapakse indeed.

Should the Tamils still demonstrate that they are not terrorists.




INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07940 406 007**

உ
ஓம் சக்தி



அருள்மிகு ஸ்ரீ மேருபுரம் மஹாபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

# ஆடிப்பூர இலட்சார்ச்சனை பாற்குட விஞ்ஞாபனம்.

**துதி**

"ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை ஐங்கரனை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்(கு) ஒரு தீங்கில்லையே".

அம்பிகை அடியார்களே!

காசியிலே விசாலாட்சி தாயாயும், மதுரையிலே மீனாட்சி தேவியாயும், காஞ்சியிலே காமாட்சி அன்னையாவும், ஈழத்திலே சமுத்திரநாயகியாம் அன்னை நாகபூசணி அம்பாளாகவும்,அருளாட்சிபுரியும், அன்னை ஆதிபராசக்தி ஆன்ம ஈடேற்றத்திற்காய் அருட்பெரும் ஜோதியாய் சகலவளங்களும் சிறந்து விளங்கும் இலண்டன் மாநகரில், வோல்த்தம்ஸ்ரோவில் அகிலாண்டேஸ்வரியாய் வீற்றிருக்கும், அழகு செளந்தரி ஸ்ரீ மேருபுரம் மஹாபத்திரக்காளி அம்பாளுக்கு நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான ஸர்வஜித் வருட ஆடிப்பூர விழாவும், இலட்சநாம அர்ச்சனையும் நடைபெறத் திருக்கருணை கிடைத்துள்ளது.

## நிகழ்ச்சிகள்

**மஹாகணபதி வழிபாடு**

03-08-2007 வெள்ளி காலை 10.00 மணி முதல்
விக்னேஸ்வர பூஜை கணபதி ஹோமம், திரவிய அபிஷேகம்,
ஸ்ரீ மஹாகணபதிக்கு 108 கலச சங்காபிஷேகமும்,
விஷேட பூஜையும் நடைபெறும்.

மாலை 6.30 மணி முதல் மஹா கணபதி பெருமானுக்கு
விஷேட தீபாரதனை பஞ்சமுக அர்ச்சனை தேவார பாராயணம்.
திராவிடகானம், ஆசிர்வாதம், பிரசாதம் வழங்குதல்.

**இலட்சநாம அர்ச்சனை**

4-08-2007 சனி முதல் 13-08-2007 திங்கள் வரை தினமும்
காலை 9.30 மணி முதல் விநாயகர் வழிபாடு, ஸ்ரீமஹாபத்திரகாளி
அம்பாளுக்கு ஹோமம்.
திரவிய அபிஷேகம் 108 சங்காபிஷேகம்
தீபாராதனை பஞ்சமுக அர்ச்சனை, பிரசாதம் வழங்குதல்.

மாலை 7.00 மணிமுதல் விஷேட அலங்கார தீபாரதனை,
பஞ்சமுக அர்ச்சனை வேத ஸ்தோத்திர திராவிட பாராயண சமர்பணம்.

## ஆடிப்பூர பாற்குட அபிஷேகம்

### 14-08-2007 செவ்வாய்

காலை 9 மணி முதல் விநாயகர் வழிபாடு பக்தர்களின் திருக்குட பாலாபிஷேகம் ஸ்நான அபிஷேகம் தீபாராதனை
மாலை 4.30 மணி முதல் அம்பாளுக்கு ருதுசோபன சாந்திபூஜை பக்தர்களின் உபசார சமர்பணம் விஷேட தீபாராதனை
ஸ்ரீ நவசக்தி அர்ச்சனை, வேதஸ்தோத்திர திராவிடபாராயண சமர்பணம்.

## விழா உபயகாரர்

| | | | |
|---|---|---|---|
| 3.8.2007 வெள்ளி | திரு திருமதி ராஜமோகன் குடும்பம் | 8.8.2007 புதன் | திரு திருமதி ஜெயசந்திரன் குடும்பம் |
| 4.8.2007 சனி | திரு திருமதி கண்ணன் குடும்பம் | 9.8.2007 வியாழன் | திரு திருமதி ரவீந்திரன் குடும்பம் |
| 5.8.2007 ஞாயிறு | திரு திருமதி உதயகுமார் குடும்பம் | 10.8.2007 வெள்ளி | திரு திருமதி சத்தியதாசன் குடும்பம் |
| 6.8.2007 திங்கள் | திரு திருமதி கமலநாதன் குடும்பம் | | திரு திருமதி யசோதரன் குடும்பம். |
| | திரு திருமதி ஜெயசங்கர் குடும்பம். | 11.8.2007 சனி | திரு திருமதி வினோத் குடும்பம் |
| 7.8.2007 செவ்வாய் | திரு திருமதி சந்திரேசன் குமார்சிங் குடும்பம் | 12.8.2007 ஞாயிறு | Dr சிவநேசன் குடும்பம் |
| | திரு திருமதி சூரியபிரகாசம் குடும்பம் | 13.8.2007 திங்கள் | திரு திருமதி கிருஷ்ணராஜா குடும்பம் |

விழாக்காலங்கில் மதியம் அன்னதான பூஜை இடம்பெறும்
12.08.2007 பாற்குட ஊர்வலத்தில் கலந்து கொள்ள
விரும்புவர்கள் முன்கூட்டியே குருக்கள் ஐயாவிடம்
தொடர்பு கொள்ளவும்.

14.08.2007 செவ்வாய்
ஆடிப்புரம் உபயம் -
அம்பிகை அடியார்கள்

24.08.2007 வெள்ளி
வரலக்ஷ்மி தீபபூஜை
நடைபெறும்

குறிப்பு: அபிஷேக பூஜைக்குரிய பொருட்கள் வழங்க விரும்புவோர் முன்னதாக வழங்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

அருள்மிகு ஸ்ரீ மேருபுரம் மஹாபத்திர காளி அம்மன் தேவஸ்தானம்
271 ஹோறன்ட் றோட், வோல்த்தம்ஸ்ரோ E17 6HD தொலைபேசி 020 8531 0872

இங்ஙனம்:
கயிலை காளிதாசன், பிரம்மஸ்ரீ லிங்கலோகநாதக் குருக்கள்,
விழா உபயகாரர்கள், அம்பிகை அடியார்கள்.

இரவி அருணாசலம் **எழுதிக் கொள்வது என்னவெனில்...**

## ஒப்புதல் வாக்கு மூலம்...

முகப்பு – நாலுவார்த்தை

ஊண்மைகள் உறங்குவதில்லை என்று ஒரு வசனம் தமிழில் உண்டு. எனக்கு அதில் ஒன்றும் நம்பிக்கை இல்லை. பெரும்பாலும் உண்மைகள் உறங்குகின்றன நீண்ட தூக்கத்திற்கும் போய்விடுகின்றன. அனேகமான தருணங்களில் இனி முழிக்கச் சந்தர்ப்பம் இல்லை என்று உண்மைகளை சவப்பெட்டிக்குள் வைத்து ஆணி அடித்து புதைகுழிக்குள் போட்டு இரும்பால் மூடி விடப்படுவதும் உண்டு.

உண்மைகள் உறங்குவதில்லை என்று உண்மையில் எதுவும் இல்லை. உண்மைகள் உறங்கக் கூடாது அப்படி உறங்கவிடக்கூடாது என்பதுதான் என் எண்ணம். இயலுமான அளவு அதற்காக நான் போரிட வேண்டும் என்றும் நான் அவாப்படுகின்றேன். முன்னர் எனக்குப் பேய்த்தனமான பல நம்பிக்கைகள் இருந்தன. நியாயம், உண்மை, நீதி, நேர்மை, தர்மம் உழைப்பு யாவும் வெல்லும். இடையில் தோற்பது போல் பாசாங்கு செய்தாலும் இறுதியில் அவை வெல்லும் இதை நான் உறுதியாக நம்பினேன் என்றல்ல மிக மிக உறுதியாக நம்பினேன். அதனால் எனக்கு வாழ்வின் மீதும் அசாத்திய நம்பிக்கை இருந்தது பிறகுதான் புரிந்தேன்.

அல்ல, அவை வெல்லும் அல்ல. தற்செயலாக வெல்லும். ஒரு விபத்துப் போல சிலசமயம் வெல்லலாம். பெரும்பாலும் அவை தோற்கும் அதற்கான சந்தர்ப்பமே அதிகம். ஆனால் நியாயம், உண்மை, நீதி, நேர்மை, தர்மம் உழைப்பு இவையாவும் தானாக வெல்வதல்ல, வெல்லப் பண்ண ணெ வேண்டும். மனிதரால் அது இயலும் என்ற் நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மனிதர் அதற்காக இயங்க வேண்டும். அப்படி இயங்கின் என் பங்கும் அதில் கட்டாயம் இருக்கும்.

மற்றும் படி தனித்து அதனை இயக்கக் கூடிய வல்லமை எனக்கு இல்லை. அந்தநேரத்தை செலவழிக்க வேறு வேலைகள் நிறைய உள்ளன. அதாவது என்னால் இயங்கக் கூடிய வேலைகள் தனித்து நான் செய்யலாம் என்ற வேலைகள். தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும்! என்று பாஞ்சாலி சபத்தில் பாரதி சொல்வார். கேட்க நன்றாக இருக்கிறது எம்.ஜி.ஆர் ரஜினிகாந் என்ற தமிழ்த்திரைப்படங்களும் அதைத்தான் சொல்கின்றன சொல்ல நன்றாக இருக்கும். கேட்க இன்னும் நன்றாக இருக்கும். வாழ்வில் தோற்றுப் போனவர்களும் இந்த காற்றைத் தின்று, செமிக்க ஒன்றுமில்லாமல் மகிழ்ந்து வாழ்கிறார்கள். ஆனால் யதார்த்தம் பொய்யான இந்த வார்த்தைகளை ஓட ஓடத் துரத்துகின்றது.

நீதிக்காக நேர்மைக்காக, நியாத்திற்காக உண்மைக்காக நமது தேசியத்தலைவரும், தன் தளபதிகளோடு, போராளிப் பிள்ளைகளோடு, ஓர்மமாய், வல்லமையாய், ஆற்றலுடன், திறனுடன், போர்த்தந்திரத்துடன் கடுமையாக உழைக்கிறார். அதனால் வெல்வார் நீதி நேர்மை, நியாயம், உண்மை, தர்மம் வெல்லும் வெல்ல வைப்பார். அவரும் ஓய்ந்து போய், ஒன்றும் செய்யாது இருந்தார் என்றால், மேற்குறித்தவை வெல்லும் என்று நம்புகிறீர்களா? இன்னமும் நாம் அடிமைகளாக, சிங்கள அரசின் காலின் கீழ் மிதிபட்டு நசிபட்டோராக ஆகியிருப்போம், இலங்கையில் தமிழினம் என ஒன்று இருந்ததா எனும் கேள்விக்கு ஆட்பட்டிருப்போம்.

உண்மைகள் உறங்கக்கூடாது என்று இதனை ஏன் எழுத வேண்டும் என்ற கேள்விகள் எழுமாயின் நான் பதில் சொல்கிறேன். 2000 ஆம் ஆண்டு யூலை 5ஆம் நாள் என்ற கரும்புலிகள் நாள் அன்று, அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாவனம் தமிழ்- ஐபிசி தமிழ் என்ற வானொலி நிலையத்திலிருந்து நான் வெளியேறுகிறேன். அப்போதைய என் நெருங்கிய தோழி யசோதா மித்திரதாஸ் அவர்களும் என்னுடன் வெளியேறுகிறார்.

அன்றிலிருந்து இன்று வரை அதாவது 2007 யூலை 5 ஆம் நாளான கரும்புலிகள் நாள் நிறைவுற்ற நாள் வரை அதாவது ஏழு வருடங்களாக, நடந்த எல்லா சம்பவங்களும், என்னுள் புகுந்து பொங்கி, அமுக்கி, நெருப்புத்தலையாகி, கனன்று, நீறாகிக் கிடந்தன. அதனால் அடிக்கடி நான் துடித்தேன். கொதித்தேன். கனன்றேன். வெடித்தேன் சிதைந்தேன் வெந்தேன் வெப்பியாரப்பட்டேன். அடிக்கடி நான் அழுதேன். அதைச் சொல்ல எனக்கு என்ன வெட்கம்?

சாம்பர் அறியீரோ மேலே வெறும் தூள் புழுதி
உள்ளே கிளறக் கிளற தணல் பிறக்கும்?

என்று எண் நண்பனும் மைத்துனனுமான விஜி (இளவாலை விஜயேந்திரன்) கவிதை எழுதினான். அப்படித்தான் எனக்குள்ளே தணல் கிடந்தது அதை ஊதி நெருப்பாக்கிய சம்பவம் சமீபத்தில் நடந்தது. அதை 2007 யூலை 6 ஆம் நாள் இரவுதான் நண்பவர் சொன்னார் (நண்பர் பெயர் எதற்கு? ) 2007 யூன் 9ம் திகதி ஐபிசி தமிழ் வானொலி 10 ஆம் ஆண்டு நிறைவுநாள். அதற்காக ஒரு ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. அந்த மலரில் எழுதப்பட்ட சில விடயங்களும் எழுதப்படாமல் இருட்படிப்பு செய்யப்பட்ட சில விடயங்களும் தொடர்பாக நண்பர் என்னிடம் பறைந்தார்.

### அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாவனம் தமிழ்- ஐபிசி தமிழ் என்ற வானொலி நிலையத்திலிருந்து நான் வெளியேறுகிறேன்.

யூலை 6ஆம் நாள் இரவிலிருந்து யூலை 7ஆம் நாள் விடியும் வரை என்னுள் எல்லா சம்பவங்களும் கனன்றன. விடிய ஒரு முடிவுடன் நித்திரை மெத்தையிலிருந்து எழுந்தேன். எழுத வேண்டும். உன்மைகள் உறங்கக்கூடாது. எதற்காக எழுத வேண்டும். அதுவரை காலமான திறனிற்கும் உழைப்பிற்கும் ஏதும் அர்த்தம் இருக்க வேண்டம் என்றால் அதற்காக எழுத வேண்டும். இதில் அஞ்ச ஏதும் உண்டா? அஞ்சுவதும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை. எழுதுவதில் உறுதியானேன்

மனசாட்சிக்கு விரோதமில்லாமல் உண்மையில் நின்று உறுதியாய் இதனை எழுதவேண்டும். யாரையும் பகைக்கக்கூடாது. அவர்களின் பலங்களையும், பலவீனங்களையும் புரிந்த் அனுகுமுறை இதற்கு வேண்டும். இதற்கு மிஞ்சி யாரும் என்னை பகை முரண்பாட்டில் அனுகுவார்களாயின் அது கூடப்பரவாயில்லை. நான் தயார்.

எனக்கு நிகழ்ந்த நிறையச்சம்பவங்கள். அதை வைத்து ஒரு நூறு சிறுகதைகளாவது என்னால் எழுதியிருக்க இயலும் ஆனால் அது என் எழுத்தை வளப்படுத்தியிருக்குமேயொழிய வாழ்விற்கு ஒரு செய்தியை சொல்லியிருக்காது. அதனால் இப்படி எழுதுவது தான் சரி என நம்புகிறேன். பொறாமை நிறைந்த, உழைப்பை மதிக்காத, உண்மையை, நேர்மையை உணராத ஒரு சமூகத்திற்கு, இவ்வாறு எழுதுவது ஒரு பாடமாக அமைந்தால் அதுவே வெற்றி!

*- வரும்*

# பாவம் இல்லாதவன் முதல் கல்லினை எறி!



ஆலய வாசலில் ஒருமுறை
அலையாய் அலையும்
ஆட்களின் கூட்டம்.

விபச்சாரத் தவறுக்காய்
தீர்ப்பிடலின் திடுக்கிடலில்
பெண்ணொருத்தி
சபைநடுவில்.

பரிசேயரும்,
மறைநூல் வல்லுனரும்
இயேசுவை சோதிக்க
இக்கட்டாய் கேட்டனர்.

நீர் மதிக்கும் மோயீசன்
விபச்சாரக் குற்றம்
கல்லடி மரணத்துக்கானதென்று
கட்டளையிட்டார்.
நீர்
என்ன சொல்கிறீர்.

மோயிசனையே மறுதலிப்பீரா
இல்லை
இவளை
கல்லெறிந்து கொல்வதை
வழிமொழிவீரா ?

பெண்ணோ
காற்றில் அலையும்
முகிலாய்
திகில் அலையும் கண்களோடு
நடுங்கி நின்றாள்.

இயேசு
தலை தாழ்த்தி
தரையில் விரலால்
வரையத் துவங்கினார்

கேள்விகள்
மீண்டும் மீண்டும்
கர்த்தரின் காதுக்குள்
கொட்டப்பட்டது.

இமை நிமிர்த்திய
இயேசு,
வெறியரின் வேகம் பார்த்தார்.

எல்லோருடைய கைகளிலும்
கற்கள்.
கல்லெறிந்தால் அவளுக்குக்
கல்லறைதான்.

உங்களுள்
பாவமில்லாத கரம்
முதல் கல்லை
இப்பெண்மீது எறியட்டும்.

சொல்லியவர் மீண்டும்
தரையில் எழுதத் துவங்கினார்

ஆணிவேர் வெட்டுண்ட
அவஸ்தையில்,
கோடரி வீச்சில்
நிலை குலைந்த நாணல்
மண் மோதும் வேகத்தில்,

அவர்கள்
ஒருவர் பின் ஒருவராய்
கற்களை போட்டு விட்டு
கடந்து சென்றனர்.

தனிமையில் இருந்த பெண்ணிடம்
பரமன் கேட்டார்,
மாதே
யாருமே தீர்ப்பிடவில்லையா ?

இல்லை என்றாள்
மரண வாசல் வரை சென்று
மறுபடியும்
உயிர் கொண்டவள்.

நானும் தீர்ப்பிடேன்.

பிறப்பின் சிறப்பு
இறப்பிலும் இருக்கட்டும்.
தவறுதல் தவிர்த்து
திருந்துதலே தெய்வீகம்.

மன்னிப்பு
தவறுகளுக்கான
அனுமதிச் சீட்டல்ல.
இனிமேல் நீ பாவம் செய்யாதே.

பாடம் கற்றுக் கொண்ட
பெண்
பாதம் பணிந்தாள்.

– இயேசுவின் கதை
ஒரு புதுக்கவிதைக் காவியம்

**TRICO** - *The name you can trust*

**Door to Door Service**
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
***Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta***

*Two more collection points:*
***Glasgow and South West London***
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக **Tooting** இல்
***Collecting point!***

*Contact* **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

**A - Lanka**
*171 Tooting High Street,*
*London SW17*

**HOT NEWS**
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

***Trico International Shipping Ltd.***
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

# புராணங்களும் வேதங்களும் "கள்" குடித்த பைத்தியக்காரனின் உளறல்லகள்!



புராணங்களும் வேதங்களும் கள் குடித்த பைத்தியக்காரனின் உளறல்களே!... இன்று தமிழர் சமுதாயம்தான் உலகிலேயே காட்டு மிராண்டி வாழ்வு வாழ்ந்து வருகிற சமுதாய மாக இருக்கிறது.

உலகிலுள்ள 280 - கோடி மக்களில் யாரும் இவ்வளவு பிறவி இழிவான நிலையில் முட்டாள் தனமாக வாழ்பவர்களில்லை. நமது நாட்டைப் பிடித்துள்ள "நோய்கள்" மூன்று. அவை :

1. கடவுள், மதம், சாஸ்திரங்கள் 2. சாதி 3. ஜனநாயகம் என்பன. நம்மை அரித்துவரும் நோய்கள்: 1. பார்ப்பான் 2. பத்திரிகைகள் 3. அரசியல் கட்சிகள் 4. தேர்தல்கள் 5. சினிமா ஆகிய இவைகள் ஒழிக்கப்பட்டாலொழிய நமது வாழ்வு சீர்படாது என்று, நான் இங்கு மட்டுமல்ல வடநாட்டிலும், கன்னட, கேரள மாநிலங்களிலும் லட்சக்கணக்கான பொது மக்கள் கூடிய கூட்டங்களில் ஆண்டுக் கணக் காக எடுத்துரைத்து வந்திருக்கிறேன்.

அதுபோலவே, நமது வளர்ச்சிக்கும் வாழ்வுக் கும் தடையாக மேலும் முட்டுக் கட்டைகளாக மூன்று சாதனங்கள் இருக்கின்றன என்பதை யும் எடுத்துக்காட்டி வருகிறேன்.

அவை, (அம்முட்டுக்கட்டைகள்) 1.முன்னோர்கள் சொன்னபடி நடக்க வேண்டும். 2. முன்னோர்கள் (பெரியவர்கள்) எழுதியபடி நடக்க வேண்டும் 3. பெரியவர்கள் நடந்தபடியே நாமும் செல்ல வேண்டும் என்பவைகளாகும். இவை, முட்டுக்கட்டைகள்' என்று சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் சொன்னார் என்றாலும், அதற்குப் பிறகு, இன்று இந்த இருபதாம் நூற்றாண்டின் புத்தர்களாக விளங்கும் கருஞ்சட்டைக்காரர்கள்தாம் சொல் கிறார்கள்.

ஆனால், இந்த நாட்டிலுள்ள பெரும் பிரபல பார்ப்பனத் தலைவர்கள் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், திரு. ராசகோபாலாச் சாரியார், கே.எம். முன்ஷி, சங்கராச்சாரியார் போன்றவர்கள் எங்கு எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும், இம்முட்டுக்கட்டைகளை ஆதரித்து, வலியுறுத்தி அதாவது நாம் எக் காரியத்திற்கும் நமது முன்னோர் சொன்ன, காட்டிய, எழுதிய வழிப்படியே நடக்க வேண்டும்' என்று பேசி வருகிறார்கள்.

இப்படி இவர்கள் பேசுவது ஏதோ, நமது முன்னோர்கள் எக்காலத்திற்கும் எந்த நிலை மைக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வரோக நிவாரணி' தயாரித்து வைத் துள்ளதைப் போன்று சொல்லி வருகிறார்கள். மக்களுக்குச் சிந்தனா சக்தியும், அறிவும், விஞ்ஞான உணர்வும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான், இவர்கள் இப்படிப் பேசி வரு வதன் உள்நோக்கமாகும்.

முன்னோர்கள், பெரியவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள் என்று கேட்டால் ரிஷிகள், மகான்கள், தெய்வீக புருஷர்கள், ஆதர்சன ஆச்சாரியர்கள் இவர்கள் தாம் என்பார்கள் மற்றும் அவதாரங்களையும் குறிப் பிடுவார்கள்.

இவர்களெல்லாம் யார்? எப்போதிருந் தார்கள்? எங்கிருந்தார்கள்? அதற்கென்ன ஆதாரம்? சரித்திரத்திற்கும் இவர்களுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? என்றெல்லாம் ஆராய்ந்தால் இது மாபெரும் புரட்டு - அதுவும் இமாலயப் புரட்டு என்பது தெளிவாக விளங்கும்.

இந்த ரிஷிகள், தெய்வீகர்கள், மகான்கள் ஆகியவர்களுக்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்றால் - புராணங்கள், வேதங்கள், ஸ்மிருதிகள், சுருதிகள் என்று ஏதோ கறை யான் பிடித்த சிலவற்றைக் காட்டக் கூடும். அதை அணுகி ஆராய்ந்தவர்களுக்குத்தான் தெரியும். அதிலுள்ளவைகள் எல்லாம், பைத்தியக்காரனுக்குக்கள் ஊற்றினால் அவன் எப்படியெப்படி உளறுவானோ அப்படியே இருக்கின்றனவென்று.

இப்படி, முன்னோர்கள் சொன்னது, எழுதியது, நடந்தது என்பதை வெறும் வாயினால் மாத்திரம் பார்ப்பனர்கள் கூறிக் கொண்டிருக்கவில்லை. இந்நாட்டில் 100-க்கு 84- பேராக உள்ள இந்துக்களுக்கு உரிய சட்டமாகிய இந்து பிலா'விலும் நுழைத் துப் பலப்படுத்திப் பாதுகாத்து வருகிறார்கள். இந்து பிலாவின் அடிப்படைகளில் ஒன்று, சுமார் 20 ரிஷிகள் (ஸ்மிருதிக்காரர்கள்) சொன்னதாகும்.

நாரதர், பராசரர், யாக்ஞவல்கியர், விஸ்வா மித்திரர், வசிஷ்டர், மனு போன்றவர்கள் என்ன கருத்துக் கொண்டார்களோ அதைக் காட்டித்தான் இன்று அய்க்கோர்ட், சுப்ரீம் கோர்ட் போன்ற நீதிமன்றங்களில் தீர்ப்புகள் எழுதப்படுகின்றன. இந்த ரிஷிகள் சுத்த அனாமதேயங்களாகவே இருக்கிறார்களே இவர்களைப் பற்றி ஆதாரங்கள் உண்டா என்று தேடினால், அவை அறிவிற்கொவ்வாத ஆபாசக் களஞ்சியங்களாகவே இருக்கின்றன.

இத்தனை ரிஷிகள், முனிவர்கள், தெய்வீகப் புருஷர்கள், ஆண்டவனின் அவதாரங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், மகாத்மாக்கள் தோன்றி மகிமைகள் புரிந்திருந்துங்கூட, நாம் இன்றைக்கும் வளையாத குண்டுசி செய்யக்கூடக் கற்றுக் கொள்ளவில்லையே, ஏன் என்றால் என்ன பதில் கூறமுடியும்?

**இது மாபெரும் புரட்டு - அதுவும் இமாலயப் புரட்டு. இந்த ரிஷிகள், தெய்வீகர்கள், மகான்கள் ஆகியவர்களுக்கு ஏதாவது ஆதாரம் உண்டா**

எனவே, பெரியோர்கள் சொன்னது, பெரி யோர்கள் எழுதியது, பெரியோர்கள் நடந்தது என்பதாகிய பிரச்சாரம் செய்வது, நம்மை முழு மூடர்களாக நிரந்தரமாக இருக்கச் செய் வதற்குத்தானேயொழிய வேறில்லை.

ஆகவே, இம்மூன்று முட்டுக் கட்டைகளை ஒழித்தாலொழிய, நாம் முன்னேற முடியாது என்பது உறுதி. இல்லாவிடில், தேங்கிய சாக்கடையாக நமது சமுதாயமும் அதில் புரண்டு இன்பங் காணும் பன்றிகளாக நம் மக்களும் இருக்க வேண்டியிருக்குமென்பது உண்மை.

எனவே, முட்டுக் கட்டைகளை ஒழிக்க வேண்டியது, தமிழ் மக்களின் முக்கிய முதற் பணியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

*( விடுதலை தலையங்கம் - 22.05.1959 )*

*- தமிழிச்சி*




ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் - இலண்டன்

SRI SELVAVINAYAGAR TEMPLE - LONDON

299-303 Ley Street, Ilford IG1 4BN Tel : 020 8911 8934

www.sriselvavinayagar.org.uk Email : info@sriselvavinayagar.org.uk

Founded on 04-02-2004

"வேழமுகத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுத்து வரும்"

ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானின் மஹோற்சவ விழாவும்

4வது தேர்த்திருவிழாவும் 05.08.2007

பகல் 10.00 மணிமுதல் 1.00 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| 13.07.07 | வெள்ளி | காலை 7.45 - 10.45 | கொடியேற்றம் |
| 05.08.07 | ஞாயிறு | காலை 10.00 - 1.00 | தேர்த்திருவிழா |
| 06.08.07 | திங்கள் | காலை 8.00 முதல் | தீர்த்தத் திருவிழா |
| 07.08.07 | செவ்வாய் | காலை 8.30 மணி | பூங்காவனம் |
| 08.08.07 | புதன் | காலை | மகாபிசேகம் மாலை : வைரவர் மடை |

மாலை வைரவர் படையல் (தனித்தனி பானையில் வைரவருக்குப் பொங்கல்)

ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அடியார்களே!

நிகழும் சர்வ சித்த ஆண்டு ஆனி மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை சதுர்த்தி திதியுடன் கூடிய சுபயோக சுபதின சுபநேரத்தல் காலை 7.45 மணிக்கு துவஜாரோகண நிகழ்வுகள் ஆரம்பித்து 10.45 மணிக்கு கொடியேற்றப்பட்டு தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் மஹோற்சவ பெருவிழாவானது மிகச் சிறப்பாக நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் விரதம் அனுட்டித்து தினந்தோறும் ஆலய தரிசனம் செய்த விநாயகப் பெருமானை வணங்கி நேர்த்திகளை நிறைவேற்றி நல்லருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மற்றைய திருவிழாக்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரங்களில் கிரியைகள் நடைபெறும்.

9.00 மணி அபிசேகம் காலை
10.30 மணி பூஜை
11.00 மணி ஸ்தம்ப பூஜை
11.30 மணி வசந்த மண்டப பூஜை
12.00 மணி சுவாமி உள்வீதி உலா
12.30 மணி அன்னதானம்

5.30 மணி பூஜை மாலை
6.00 மணி ஸ்தம்ப பூஜை
6.15 மணி வசந்த மண்டப பூஜை
7.30 மணி நற்சிந்தனை
8.15 மணி சுவாமி வெளிவீதி உலா
8.30 மணி வடக்கு வீதி மேளச்சமா



விநாயகப் பெருமான் ஆரோகணித்து பவனி வரும் வீதிகள்
Ley Street
Cristchurch Road
Thorold Road
Perth Road
Ley Street



பாற்காவடி, தீர்த்தக் காவடி, புஷ்பக் காவடி, கற்பூரச் சட்டி எடுக்க விரும்புவோர் முன்கூட்டியே அறியத் தரவும்.
திருவிழாக் காலங்களில் மதியம் அன்னதானம் வழங்கப்படும்.
அன்னதான உபயங்களில் பங்கு பற்றும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.
பூஜை அபிசேகம், அன்னதானத்திற்கு வேண்டிய பூ பால், பழம், தயிர், இளநீர், காய்கறி, அரிசி கொடுக்க விரும்பும் அடியவர்கள் ஆலயத்தில் ஒப்படைக்கவும்

குறிப்பு: தேர்த்திருவிழாவுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் பக்தர்கள் முன்கூட்டியயே அறியத் தந்தால் அவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். விநாயகப்பெருமான் தேரில் பவனி வரும் வீதிகளில் தயவு செய்து வாகனங்கள் நிறுத்தாமல் ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்

# த.ஈ.வே.வெ.வெ...



## சிறி

*( ஒரு பேப்பருக்காக )*

என்னது ஏதோ குழந்தை பிள்ளைகள் கதைக்க தொடங்கிற காலத்திலை கதைச்ச மாதிரி இருக்கே எண்டு யோசிக்கிறீங்களா. கடந்த வார ஒரு பேப்பரில் பாலச்சந்திரன் அண்ணாவும் பா.வை.ஜெயபாலனும் ஆடி மாதத்து நினைவுகளை கிழப்பிவிட்டு போய் விட்டார்கள். அதனால்தான் எனது இந்த ஆடி மாதத்து நினைவும். ஆனால் இது அம்மி பறந்த நினைவு அல்ல ஆனால் இது இலங்கையில் 83ம் ஆண்டு தமிழர் அடிவாங்கி பறந்தோடிய ஆண்டு நினைவு.

எங்கள் ஊர் பிள்ளையார் கோவிலில் வழமையாக பூசை முடிந்ததும் பஞ்சாட்சரம் என்று ஒருவர்தான் சுண்டல் புக்கை மற்றும் பஞ்சாமிர்தம் ஆகிய பிரசாதங்களை கொடுப்பார்.

கோயில் பூசை முடிந்து அய்யர் விபூதி சந்தணம் கொடுத்து விட்டு போகும் வரை கோயில் தேர் முட்டியில் காத்திருந்து விட்டு பஞ்சாட்சரம் அவர்கள் சுண்டல் சட்டியுடன் வரும்போதுதான் நாங்கள் எழுந்து போய் வரிசையில் நிற்போம்.

அவரும் அவல் சுண்டல் எல்லாம் கொஞ்சம் கைகளில் வைத்துகொண்டே போவார். ஆனால் இந்த பஞ்சாமிர்தம் தரும்போது மட்டும் பஞ்சாமிர்த சட்டியில் ஒரு முறை கையை வைத்தார் எண்டால் அதை ஒரு பத்து பேரின் கையிலாவது தடவிகொண்டு போவார். கையில் கொஞ்ச தேன்மட்டும் தான் ஒட்டும் அதை உடனே நக்கி விட்டு திருப்ப கையை நீட்டினாலும் அவர் தரமாட்டார் தன்பாட்டிற்கு போய் கொண்டேயிருப்பார். இறுதியில் மிஞ்சுகின்ற பஞ்சாமிர்தத்தை அவர் வீட்டிற்கு கொண்டு போய் விடுவார்.

இதனால் எங்களிற்கும் அவரிற்கும் ஒரு நிழல் யுத்தமே நடந்து கொண்டிருந்தது. சில நேரங்களில் இரவு வேளைகளில் அவரது வீட்டை சைக்கிளில் கடந்து போகும் போது பஞ்சாமிர்தம் தராத பஞ்சாட்சரம் ஒழிக என்று கத்தி விட்டு ஒடுவதும் உண்டு. அவரிற்கும் தெரியும் நாங்கள் தான் கத்துவது என்று ஆனாலும் எப்பொழுதுமே நேரடியாக நாங்கள் சண்டை பிடித்தது கிடையாது.

இப்படி இது தொடர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் தான் 83ம் ஆண்டு ஆடி மாதம் 23ந் திகதி தொடங்கிய கலவரத்தில் வடக்கு கிழக்கு தவிர்ந்த இடங்களிலை இருந்த எல்லாத் தமிழரும் சிங்களவரிட்டை அடி வாங்கிக் கொண்டு உறவுகள் உடைமைகள் என்று யாழ் காங்கேசன் துறையில் கப்பல்களில் வந்து இறங்கத் தொடங்கினர்.

அந்த நேரம் நாங்களும் வந்தவர்களிற்கு முடிந்தளவு உதவிகளை செய்தோம் எங்கள் ஊரிலும் பலர் வந்திறங்கினார்கள் அதில் ஊரின் வாசமே மறந்து போன வர்களும் அடக்கம். அப்படி வந்தவர்களில் ஒரு அம்மணி கொழும்பில் பெரிய அரசியல் பலம் பண பலம் என்று வாழ்ந்தவா அவவும் போட்ட உடுப்போடைதான் ஓடிவந்து ஊரிலை அவையின்ரை பாட்டன் வீட்டிலை இருந்தவை ஆனால் அப்பிடி அடிவாங்கி கொண்டு ஓடிவந்தும் அந்த அம்மணியோ ஊரிலை சேசரியான டேட்டி விலேச் என்று குதிக்காலாலை நடந்து திரிஞ்சவா.

இந்த கால கட்டம் வடக்கு கிழக்கு தமிழர்களிடம் ஒரு கொந்தளித்த மன நிலையே காணப்பட்டது.

யாழிலும் மூலை முடுக்கெல்லாம் முப்பதிற்கும் மேற்பட்ட இயக்கங்களும் முளைக்க ஆரம்பித்திருந்தது. இவைகள் ஒரு பக்கத்தாலை நடந்து கொண்டிருக்க இந்த பஞ்சாட்சரம் அவர்களின் மகளிற்கு திருமணம் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. ஆனால் ஆடி மாதம் யாரும் ஊரில் திருமணம் வைப்பதில்லை என்பதால் ஆவணி மாதம் நாள் வைத்து அதற்கான ஏற்பாடுகள் தடல் புடலாக நடைபெற்றது.

> அவர் பஞ்சாமிர்தம் தரும்போது பஞ்சாமிர்த சட்டியில் ஒரு முறை கையை வைத்தார் எண்டால் அதை ஒரு பத்து பேரின் கையிலாவது தடவிக் கொண்டு போவார். கையில் கொஞ்ச தேன்மட்டும் தான் ஒட்டும்

வீடு பெயின்ற் அடிக்கப்பட்டு அவர் வீட்டு மதிலும் சுண்ணாம்பு அடித்து பளிச்சென்று இருந்தது. ஊரிலை உங்கள் எல்லாரிற்கும் தெரிந்த விடயம் றோட்டு போடுறதெண்டால் முதலில் கல்லைக் கொண்டு வந்து கொட்டி ஒரு பாத்தி மாதிரி கட்டிவிட்டு போவார்கள்.

பிறகு ஒரு ஆறு மாதத்திற்கு பிறகு தார் தகரத்தை கொண்டு வந்து போட்டு விட்டு போவார்கள் றோட்டு போட ஒரு வருசமும் ஆகலாம் சில வருசமும் ஆகலாம். அது எப்ப போடப்படும் எண்டு எங்கள் ஊர் பிள்ளையாருக்கே தெரியாது.

ஆனால் றோட்டு போட தொடங்கும் போது பறிச்ச கல்லிலை பாதியும். ஊரிலை உள்ள ஓட்டை வாளியள் சருவகுடம் கிடாரம் அடைக்க எண்டு கொஞ்ச தாரும் காணாமல் போயிருக்கும்.

அப்பிடித்தான் ஊரிலை றோட்டு போட எண்டு கல்லும் தாரும் பறிக்கப்பட்டு இருந்த்து. ஒரு நாள் இரவு கோயிலடியிலை இருந்து அரட்டை அடிச்சிட்டு இரவு நானும் இருள் அளகனும் வீட்டிற்கு போய்க்கொண்டிருந்த போது பளிச்சென்று சுண்ணாம்படித்த பஞ்சாட்சரத்தின் வீட்டு மதிலும் அதுக்கு பக்கத்திலை தார் தகரத்தையும் பார்த்ததும் என்னுடைய மூளையும் அதே நேரம் படபடப்பில் இதயமும் ஒன்றாக இயங்க ஆரம்பித்தது.

ஆனாலும் தைரியத்தை வரவழைத்து கொண்டு இருள் அளகனிடம் டேய் இந்த பஞ்சாட்சரம் எத்தினை வருசமா எங்களிற்கு பஞ்சாமிர்தம் தராமல் பம்மாத்து விடுறார் அவருக்கு ஒரு வேலை செய்யப்போறன் பார் என்று விட்டு ஒரு தடியை எடுத்து தார் தகரத்துக்குள்ளை விட்டு பார்த்தன். ஆடி வெய்யிலில் தார் நல்லா உருகி இருந்தது. அப்பதான் நான் ஏதோ செய்யபோறன் எண்டு இருள் அளகனிற்கு விளங்கியது. அவன் என்னைப்பார்த்து டேய் வேண்டாம் பிடிபட்டா பஞ்சாட்சரமும் வீட்டு காரரும் சேர்ந்தே தோலை உரிச்சு போடுவினம் வேண்டமடா என்று கெஞ்சினான்.

டேய் அது ஒண்டும் நடக்காத மாதிரி என்னட்டை அய்டியா இருக்கு என்று விட்டு தடியில் தாரை நன்றாக தோய்த்து பஞ்சாட்சரம் வீட்டு பளிச்சென்ற மதிலில்

'ஜே.ஆர் அரசே தமிழர்கள் மீதான வன்முறையை உடனடியாக நிறுத்து இல்லாவிடில் நீயும் உனது அரச படையும் பயங்கர விளைவை சந்திக்க நேரிடும்'

என்று எழுதி விட்டு ஏதாவது ஒரு இயக்கத்தின் பெயரை கட்டாயம் கீழே எழுத வேண்டுமே என்று யோசித்த போதுதான் எதுக்கு வேறை ஏதாவது இயக்கத்தின்ரை பெயரை எழுதி வீண் வம்பிலை மாட்டுவான் என்று நினைத்து எல்லா இயக்கங்களின் பெயரிலுமே த.ஈ என்கிற அதாவது தமிழ் ஈழம் என்று தொடங்கி ஏதாவது ஒரு பெயர் வரும் எனவே நானும் ஏதாவது ஒரு பெயரை புதிதாய் போட நினைத்து த.ஈ.வே.வெ.வெ. என்று கீழே எழுதி விட்டு ஓடிவிட்டோம்.

மறுநாள் வழமை போல கோயிலில் மாலை பூசை முடியும் வரை கோயில் தேர் முட்டியில் இருந்து முதல் நாள் இரவு நான் செய்த வீரபிரதாபத்தை மற்றைய நண்பர்களிடம் சொல்லி சிரித்து கொண்டிருந்து விட்டு பஞ்சாட்சரத்தை கண்டதும் எழுத்து போய் வரிசையில் நின்றோம்.

பஞ்சாட்சரமும் சுண்டல் அவல் புக்கை எல்லாவற்றையும் தந்து விட்டு போய் விட்டார் பஞ்சாமிர்தத்தை காணவேயில்லை. நாங்களும் பஞ்சாட்சரம் பழிவாங்கிட்டாரடா என்றபடி போய் மீண்டும் தேரடியில் இருந்தபோதுதான் திடீரென பஞ்சாட்சரம் பஞ்சாமிர்த சட்டியுடன் சிரித்தபடி எங்கள் முன்னே வந்து நின்றபடி

"தம்பியவை இது உங்களுக்காக ஸ்பெசலா செய்த பஞ்சாமிர்தம் அதாலைதான் மற்ற வைக்கும் குடுக்காமல் உங்களுக்காக கொண்டந்தனான்"

என்றபடி கை நிறைய எல்லாருக்கும் அள்ளி எங்கள் கைகளில் வைத்தபடி தம்பியவை உங்களிட்டை ஒரு விசயம் சொல்ல வேணும் என்றவும் நானும் இருள் அளகனும் ஒருதரையொருத்தர் பாத்து கொண்டோம்.

அவர் தொடர்ந்தார்

"தம்பியவை என்ரை மகளின்ரை கலியாணத் துக்கு ஏதோ கடனை வாங்கி ஒழுங்கு பண்ணி வீட்டுக்கும் பெயின்ற் அடிச்சு மதிலுக்கும் சுண்ணாம்பு அடிச்சிருந்தனான் ஆனால் யாரெண்டு தெரியாது நேற்றிரவு என்ரை மதிலிலை ஏதோ நான்தான் கலவரத்தை தொடக்கி விட்டமாதிரி ஜே.ஆர் அரசே பயங்கர வாதத்தை நிறுத்து எண்டு தாராலை எழுதி போட்டு போட்டாங்கள்."

> "நேற்றிரவு என்ரை மதிலிலை ஏதோ நான்தான் கலவரத்தை தொடக்கி விட்டமாதிரி ஜே.ஆர் அரசே பயங்கரவாதத்தை நிறுத்து எண்டு தாராலை எழுதி போட்டு போட்டாங்கள்"

"தம்பியவை எனக்குத் தெரியும் நீங்கள் எழுதியிருக்க மாட்டியள் ஆனால் உங்களிற்கு தெரிஞ்சவை யாரும் எழுதியிருந்தால் அவையிட்டை சொல்லுங்கோ முடிஞ்சால் கொழும்புக்கு போய்ஜே.ஆரின்ரை வீட்டுமதிலிலையோ ஆமிகாம்ப் சுவரிலையோ இல்லாட்டி பொலிஸ் ஸ்ரேசன் வாசல்லையோ எழுத சொல்லுங்கோ"

"மகளின்ரை கலியாணம் முடிஞ்சு நாலாம் சடங்கு முடியும் மட்டுமாவது மதில்லை கொஞ்சம் வெள்ளையா இருக்க விட்டாக் காணும் என்று விட்டு தம்பியவை வடிவா சாப்பிடுங்கோ காணாட்டிலும் கேட்டு வாங்கி சாப்பிடுங்கோ "

என்று விட்டு போய் விட்டார்.

நான் பஞ்சாமிர்தத்தை சாப்பிடாமல் அப்படியே கைகளில் வைத்திருக்க விரல் இடுக்குகளினால் தேன் ஒழுகிக் கொண்டிருந்தது.

அப்போது தான் இருள் அழகன் என்னிடம்

"டேய் மனிசன் எங்களை கண்டு பிடிச்சிட்டுதாக்கும் எண்டு நான் சரியா பயந்தே போனன் நல்லவேளை தப்பிவிட்டம் "

என்றவன்

"எல்லாம் சரி உன்ரை இயக்கத்துக்கு பெயர் என்ன" என்று கேட்டான்.

"த.ஈ.என்றால் தமிழ் ஈழம். அதென்ன வெ...வெவ்...வே... எண்டு குழந்தையள் நெக்காட்டினமாதிரி (நக்கல் பண்ணுவது) எழுதியிருக்கிறாய் அதுகின்ரை அர்த்தம் என்ன"

என்றான். அப்பதான் நான் பஞ்சாமிர்தத்தை சாப்பிட்ட படி

"ஓ அதுவா தமிழீழ வேலை வெட்டியற்ற வெறும் பயலுகள் நான் மட்டுமில்லை நீங்களும்தான் அதன் உறுப்பினர்கள் "

என்றவும் எல்லோரும் தாங்கள் சாப்பிட்டு முடிந்த பஞ்சாமிர்த கையை என்மீது துடைத்தார்கள்.

நீங்களும் பல்லை நெருமுவது கேட்கிறது எனவே எஸ்கேப் அடுத்த பேப்பரில் சந்திக்கிறேன்.

**Tamsons**
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

# ஆப்பிழுத்த நிலையில் அரசாங்கம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சுவிஸில் நடைபெற்ற புளொட் இயக்கத்தின் ஒரு கூட்டத்தில் இந்தக் கூட்டணி தன்னை வெளிப்படுத்தியது. அக்கூட்டத்தில் புளொட் இயக்கத்தின் சித்தார்த்தன், பத்மநாபா குழுவின் சிறிதரன், கடிதப் புகழ் ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் பிள்ளையான் அனுப்பிய செய்தியும் வாசிக்கப்பட்டது.

பிள்ளையான் தன்னுடைய செய்தியில் கருணா அணி சகோதர ஒட்டுக்குழுக்கள் மீது கொலைத் தாக்குதல்களை நடத்துவதை கண்டித்திருந்தார். புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரனும் சகோதரப் படுகொலையில் கொல்லப்பட்டவர் என்பதையும் பிள்ளையான் சுட்டிக்காட்டினார். புளொட் இயக்கத்தினர் தங்களுக்குள் மாறி மாறி நடத்திவந்த சகோதரப் படுகொலையில் உமாமகேஸ்வரன் கொல்லப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படி 'சகோதர ஒட்டுக்குழுக்களை' கொலை செய்துவரும் கருணாவிற்கு எதிராக மற்றைய ஒட்டுக் குழுக்கள் ஒரு கூட்டணி அமைத்ததைக் கண்டு கருணா அச்சமுற்றார். இந்த நேரத்தில் ஈபிடிபியையும் கருணா அணியையும் மோதலை நிறுத்திக் கொள்ளும்படி அவர்களது எசமானர்களாகிய சிறிலங்கா படைத் தரப்பும் உத்தரவு போட்டது.

கடைசியில் வேண்டா வெறுப்பாக கருணா தரப்பும் ஈபிடிபி தரப்பும் ஒரு பகமைத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டன. ஆனால் இரு தரப்புமே மறு தரப்பை தீர்த்துக்கட்ட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. உள்ளூராட்சி சபை தேர்தல்கள் நடக்கும் பொழுது அனைத்து ஒட்டுக் குழுக்களும் மாறி மாறி தங்களுக்குள்ளும் அத்துடன் மக்களையும் கடித்துக் குதறப் போகின்றன என்று கிழக்கில் உள்ள மக்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

தமிழீழம் கேட்டவர்கள் இன்றைக்கு உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதற்காக நடந்து கொள்ளுகின்ற முறை இப்படி இருக்கின்றது. இவர்கள் தங்களையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் சொல்லித் திரிவதைப் போன்று நகைப்பிற்கிடமான விடயம் வேறு இல்லை.

கிழக்கு நிலவரம் இவ்வாறு இருக்க வடக்கில் முக்கிய போர் முனைகளில் தொடர்ந்து சண்டைகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. முகமாலைப் பகுதியில் சிறிலங்காப் படைகளும் விடுதலைப் புலிகளும் மாறி மாறி எறிகணைத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

## தனக்கெதிராக மற்றைய ஒட்டுக் குழுக்கள் ஒரு கூட்டணி அமைத்ததைக் கண்டு கருணா அச்சமுற்றார்.

வவுனியா மன்னார் எல்லைப் பகுதி தொடர்ச்சியான சண்டைகள் நடைபெறும் பகுதியாகவே சில மாதங்களாக காட்சி அளிக்கின்றது. சில வாரங்களிற்கு முன்னர் விளாத்திக் குளத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் சிறிலங்காப் படையினருக்கு கடும் இழப்பு ஏற்பட்டது. இத் தாக்குதலின் பின்னர் சற்று அமைதியாகக் காணப்பட்ட அப் பகுதி மீண்டும் 14.07.07 அன்று சண்டைக் களமாக மாறியது.

மன்னாரில் வவுனியா - மன்னார் சாலையில் பிரமணாளங்குளத்திலிருந்து தம்பனை நோக்கியும், இரணை இலுப்பைக்குளத்திலிருந்து முள்ளிக்குளம் நோக்கியும் இரு முனைகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பெருமெடுப்பில் முன்னகர்வுகளை மேற்கொண்டனர்.

ஆட்டிலெறிப் பீரங்கிகள், பல்குழல் எறிகணை செலுத்திகள், மோட்டார்களால் கடும் தாக்குதல் நடத்தியபடி சிறிலங்காப் படையினர் முன்னேறினர். முன்னேறுகின்ற படையினருக்கு ஆதராவாக சிறிலங்கா வான் படையினரும் வான் தாக்குதல் நடத்தினர்.

இம் முன்நகர்வுகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் இரு முனைகளிலும் தீவிர தாக்குதல் நடத்தினர்.. மாலை 5 மணிவரை சிறிலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சமர் நடந்தது. கடைசியில் சிறிலங்காப் படையினர் அவர்களது பழைய் நிலைகளுக்கு விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் முறியடிப்புத் தாக்குதலில் 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 45 பேர் படுகாயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் தரப்பில் 3 போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர். கொல்லப்பட்ட 4 படையினரின் சடலங்கள் கையளிக்கப்படக்கூடிய அளவில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்?தன. படையினரின் பல சடலங்கள் களமுனையில் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன.

இம் முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத்தினரின் பவள் கவச வாகனம் ஒன்று விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதலில் தகர்ந்து போனது.

இந்தச் சண்டை நடந்த அடுத்தடுத்த நாட்களிலும் சிறிலங்காப் படைகள் பாலமோட்டைப் பகுதியில் சிறிய நகர்வுகளை மேற்கொண்டனர். அவைகளும் முறியடிக்கப்பட்டன. இச் சண்டைகளில் சிறிலங்கா படையினரின் இரண்டு உடல்கள் கைப்பற்றப்பட்டன.

கிழக்கை முழுவதுமாக கைப்பற்றி விட்டதாக சொல்லுகின்ற சிறிலங்கா அரசு, வடக்கிலும் சில கிலோமீற்றர் தூரத்தை குறிப்பாக மடுப் பகுதியை கைப்பற்ற முனைகின்றது. ஆனால் கிழக்கின் களநிலவரத்தைப் போல் வடக்கில் இல்லை என்பது நடக்கின்ற சம்பவங்களில் தெளிவாகின்றது.

ஏறக்குறைய நான்கு மாதங்களாக சிறிலங்காப் படைகள் வவுனியா மன்னார் எல்லைப் பகுதியில் முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கிழக்கில் நான்கு மாத சண்டைகளில் மாவிலாறு, மூதூர் கிழக்கு, சம்பூர் போன்ற பகுதிகளை சிறிலங்காப் படைகளால் கைப்பற்று முடிந்தது. வடக்கில் இன்று வரை ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை.

அதுவும் பல மேற்குலக இராணுவ வல்லுனர்களால் ஆய்வு செய்யப்பட்டு, வன்னியில் விடுதலைப் புலிகளின் பலவீனமான பகுதி எது என்று கண்டறியப்பட்டு, தேர்வு செய்யப்பட்டதுதான் இந்த வவுனியா மன்னார் எல்லைப் பகுதி.

அப் பகுதியில் சிறிலங்காப் படைகள் தொடர்ச்சியாக அடி வாங்கி வருவதானது சிறிலங்காவிற்கும் அதனுடைய சார்புச் சக்திகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை வன்னியில் நடக்கின்ற பெரும் எடுப்பிலான ஏற்பாடுகள் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளதாக சில தகவல்கள் கூறுகின்றன. விடுதலைப் புலிகள் எவ்வித தாக்குதல்களையும் நடத்திவிடக் கூடாது என்பதற்காகவே இழப்புக்களுக்கு மத்தியிலும் சிறிலங்காப் படைகள் வவுனியா மன்னார் எல்லைப் பகுதியில் தொடர்ச்சியான முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஆனால் இவைகளையும் மீறி வெகு விரைவில் மிகப் பெரிய அதிர்ச்சிகள் சிறிலங்கா அரசுக்கு காத்திருக்கிறது.

**Are you looking for a better mortgage deal?**

We can find you a best mortgage solution from our whole of market mortgage panel!

- Home Movers
- First Time Buyers
- Remortgages(including raising funds)
- Buy to let or Let to buy
- Self Employed with or without accounts
- Mortgages for Foreign Nationals
- Right to Buy
- Shared Ownership
- Commercial loans
- Secured loans

**Poor credit history? Refused for a mortgage? We can help you!**

The overall cost for comparison is 8.8% APR. The actual rate available will depend on your circumstances. Ask for a personalised illustration.

Think carefully before securing other debts against your home. Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage or any other debt secured on it.

There will be a fee for mortgage advice. The precise amount will depend on your circumstances but we estimate that it will be £500.

**No Mortgage No Fee**

**Insurance**

We also offer products from a range of insurers for Life Insurance, Critical Illness cover and Income Protection. We offer products from a selected panel of insurers for Building & Contents insurance and Accident Sickness and Umemployment Insurance.



**Call now!**

For a Fast and Friendly Service!

Tel: 020 82414376 or 07947746654

Email: fastlinkml@googlemail.com

**FAST LINK MORTGAGES & LOANS**

3 Moresby Avenue, Surbiton, Surrey KT5 9DT

# வெள்ளம் வந்த நாள்

மலையாள மொழியில் தண்ணீருக்கு 'வெள்ளம்' என்று சொல்வார்கள் என்று கேள்விப்பட்டபின் எனக்கு ஒரு கேள்வி தோன்றி அதற்கு விடை தெரியாமல் மலையாளம் 'பறையக்' கூடியவர்களைத் தேடிக் கொண்டு திரிகிறேன்.

வெள்ளமாகத் தண்ணீர் வந்தால் அதை மலையாளத்தில் எப்பிடிச் சொல்வது?

எங்கள் ஊரில் வெள்ளம் வந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். நூறே நூறு பேர் வந்த விழாக்களையே ஜனவெள்ளம் வந்தது, எள்ளுப் போட்டால் எள்ளு விழாத கூட்டம் (எள்ளுப் போட்டால் வேறென்ன கொள்ளா விழும்) என்றெல்லாம் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். இது எங்கள் ஊரில் உண்மையாகவே வெள்ளம் வந்தது.

ஆறு பெருக்கெடுத்து ஊருக்குள் வெள்ளம் வந்து மாடு, கன்றுகள், அறுவடை செய்து வைத்த நெல்முட்டைகள் எல்லாவற்றையும் கொண்டுபோய் விட்டது என்று அந்தக் கதையெல்லாம் இல்லை. ஆறு என்பது எங்கள் பக்கத்தில் இல்லவே இல்லை. அப்படி இருந்தாலும் ஆறுமுகம் அண்ணையின் பெயரில்தான் இருந்தது. அவர் மேற்சொன்னவற்றை 'அபேஸ்' பண்ணிக் கொண்டு போவதுண்டு. அதைத்தான் 'ஆறு' கொண்டு போய் விட்டது என்று எங்கள் பக்கத்தில் சொல்லிக் கொள்வார்கள்.

ஒரு நாள் அதிகாலையிலேயே மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அம்மா சுடும் தோசையின் மணம் மழைக்காற்றில் பட்டு சுற்றிச் சுழன்று வந்து எனக்கும் தம்பிமாருக்கும் வயிற்றுக் கனலை எரிய வைத்தது. குசினிக்கும் நாங்கள் குந்தியிருக்கும் மாலுக்கும் (மாலுக்கும் இங்கெல்லாம் இருக்கின்ற மோலுக்கும் சம்பந்தமேயில்லை) இடையில் நீண்டதொரு முத்தம். ஓடிக் கடந்து, குனிந்து குசினிக்குள் நுழைவதற்குள் உள்ள ஒரேயொரு காற்சட்டையும் நனைந்து விடும். நானும், தம்பிமாரும் பசி கொண்ட வேட்டை நாய்களைப் போல ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

அம்மம்மா செத்தையில் செருகி வைத்த உமிக்கரியை பாவித்து பல்விளக்கி, பனையோலை வேய்ந்த கூரையில் பட்டு வழுகிவரும் மழைத் தண்ணீரில் எட்டி முகத்தைக் கழுவியபின் மழை ஒயுமென்று காத்திருந்தோம். மழைக்கு அந்த எண்ணமே இருக்கவில்லை என்று தெரிந்தபின், கூரையில் சுருட்டி செருகி வைத்திருந்த தாத்தாவின் மான் தோலை பிடித்துக் கொண்டு குசினிக்குள் பாய்ந்தோம். 'மச்ச, மாமிசம்' சமைக்கிற குசினிக்குள்ள பூசைக்குப் பாவிக்கிற மான் தோலைக் கொண்டு போறாங்கள்' என்று அம்மம்மா கத்தினா. 'மான்தோல் மரத்திலேயே எடுத்தது.. அம்மம்மா' என்று நானும் பதிலுக்கு கத்தினேன்.

தோசைகளை 'துவம்சம்' செய்து கொண்டிருக்கும் போதுதான் அம்மா சொன்னா? 'இண்டைக்கு பள்ளிக்கு போகவேண்டாம்.. சரியா.. மழை பெய்யுது'

எங்கள் பள்ளிக்குப் போகும் வழியில் உள்ள குளம் நிரம்பி வழியும் காட்சி மனதில் வந்து போனது. இந்த சந்தர்ப்பத்தை விட்டால் பிறகு எப்போதோ..

'இண்டைக்கு சோதனை இருக்கம்மா.. கட்டாயம் போகவேணும்.'

வழியில் நண்பர்கள் மூவர் சேர்ந்து விட்டார்கள். எல்லோரும் என்னைப் போலத்தான் சொல்லி வந்திருக்கிறார்கள். ஒழுங்கைகளில் முழங்கால் வரை வெள்ளம் ஓடியது. பள்ளிக்கூடத்திற்கு கிட்ட உள்ள குளம் நுங்கும் நுரையுமாக நிரம்பி வழிந்தது. வரும்போது பார்த்துக் கொள்வோம் என்ற முடிவுடன் பள்ளிக்கூடம் சென்றோம்.

அங்கே நின்ற சில ஆசிரியர்கள் எங்களை வினோதமாகப் பார்த்தார்கள். சாதாரண நாட்களிலேயே அடிக்கடி பள்ளிக்கு வராமல் விடும் கூட்டம் இன்று அக்கறையாக வந்திருக்கிறார்களே என்ற ஆச்சர்யம் தான் அது.

எங்களை விரட்டாத குறையாக வீட்டுக்கு போகச் சொல்லி விட்டார்கள். மீண்டும் அதே வெள்ள ஒழுங்கைகள். இடுப்பு வரை இப்போது வெள்ளம் ஓடியது. காற்றின் உக்கிரத்தில் பனைகள் வளைந்து வளைந்து நிமிர்ந்தன. எல்லோரும் தான் தெப்பமாக நனைந்து விட்டோம்.

குளத்தடிக்கு வந்தால் குளம் எது, கரை எது என்று தெரியவில்லை. கரைக்கான அடையாளங்களாக நின்ற பூவரசு மரங்களை பார்த்து கொண்டே சென்று குளப் பக்கமாக சாய்ந்து நின்ற • அம்மரங்களின் கிளைகளில் ஏறி உட்கார்ந்து கொண்டோம். ஆளுக்கொரு மரம். அங்கிருந்து தண்ணீரில் குதித்து பார்ப்பதாகத் தீர்மானம்.

குதிப்பதற்கு சற்றுமுதல் தான் ஒரு ஞாபகம் வந்தது. என்னுடைய சொத்து பூராவும் என் காற்சட்டை பொக்கெற்றுக்குள்தான் இருந்தது. சொத்தென்றால் வேறொன்றுமில்லை. பள்ளிக்கூடத்தில் நான் அடித்து வென்ற மார்பிள் உருண்டைகள். கோயில் திருவிழா முடிந்து அடுத்த நாள் ஐஸ்கிறீம் விற்கும் வாகனம் நின்ற இடத்தில் மணலுக்குள் கிடந்த ஐந்து சதக்குத்தி, உடையார் வீட்டுக் காணிக்குள் கம்பி வேலிக்கு கீழாக தவழ்ந்து போய் எடுத்து ஒரே ஒரு கடி கடித்த பிஞ்சு மாங்காய், என் சொத்துக்களை நான் வீட்டில் வைத்துவிட்டு வரவில்லை. காரணம் என் தம்பிமார் அவற்றை எனக்குத் தெரியாமலே பாகப்பிரினை செய்த கொள்வார்கள்.

முந்தியும் ஒரு தடவை இப்படித்தான் நீட்டுப்பின்னல் ஈஸ்வரி எனக்கு இரவலாகத் தந்த றோஸ்கலர் அழிறப்பரை திருடியதோடு, அதை சொக்கலேற் என்று நினைத்து சத்தகக் கத்தியால் இரண்டாக வெட்டி சமமாக விழுங்கி விட்டார்கள். கேட்டதிற்கு எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள பனங்காணியில் கொண்டல் மரத்தின் கீழ் திடீரென்று எழுந்தருளிய சூலத்தைக் காட்டி, 'வைரவராணை' என்று சத்தியம் செய்தும் விட்டார்கள். யாருடையதோ வீட்டு கேற்றில் கிடந்த சூலம் மாதிரி கம்பியை அவர்கள் தான் கழற்றிக் கொண்டு வந்து நட்டிருக்கிறார்கள் என்று பிறகுதான் தெரிய வந்தது. அதுதான் அவர்கள் செய்த சத்தியம் பலிக்காமல் போயிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

## கடந்தது நடந்தது

எழுதுவது: கே.எஸ்.பாலச்சந்திரன்

(இப்போதும் ஈஸ்வரி என் சேர்ட் பொக்கெற்றில் எனக்கு தெரியாமல் காசு எடுத்து விட்டு, கண்டு பிடித்துக் கேட்டால், 'அந்த அழிறப்பர் காசுக்கு கழியுங்கோ' என்ற சொல்கிறாள். யார் என்று தெரிகிறதல்லவா?)

எங்கே விட்டேன். பூவரசு மரத்தில், காற்சட்டையில் இருக்கும் சொத்துக்களை நினைத்துக் கொண்டு இருந்தேன். அவை தண்ணீரில் குதிக்கும் போது விழுந்து விட்டால்?

ஒரே ஒரு வழி. சேர்ட், காற்சட்டையைக் கழற்றி பக்குவமாக மரப்பொந்துக்குள் செருகிவிட்டு குதிப்பது தான். நான் அப்படியே செய்தேன். இடுப்பில் கட்டியிருந்த கறுப்பு அரைஞாண் கயிறைத் தவிர வேறொன்றுமில்லை. நாங்கள் படித்த பாடத்தில் ஒரு கதை உண்டு. தொப்பி விற்பவனின் தொப்பிகளை குரங்குகள் அபகரித்துப்போக, தொப்பிவியாபாரி தன் தொப்பியைக் கழற்றி எறிய குரங்குகளும் அவ்வாறே செய்தனவாம். அந்த மாதிரியே நான் காற்சட்டையை கழற்றி அம்மணமாக நிற்க, என் நண்பர்களும் அவ்வாறே செய்தார்கள். குரங்குப் புத்தி.

'தொப், தொப்' என்று வெள்ளத் தண்ணீருக்குள் குதித்தோம். விழுந்த வீச்சுக்கு பூவரச மரங்களின் கிளைகள் தாழ்ந்து நிமிர்ந்தன. கூடவே 'தொப், தொப்' என்று வேறு சத்தங்களும் கேட்டன. எங்கள் சேட், காற்சட்டைகள் புத்தகக் கட்டுக்கள் சுற்றிய பாரத்துடன் வெள்ளத்தில் வீழ்ந்து, எங்கள் கண்களுக்கு முன்னாலேயே தாழ்ந்தும், மிதந்தும் வேகமாக கடந்து சென்றன.

நினைக்க, முடிக்க எல்லாம் நடந்து முடிந்தன. எங்களின் சந்தோசம் எல்லாம் அந்த வெள்ளத்தில் வற்றிப் போய் விட்டது. வீட்டுக்குப் போய் புத்தகங்களுக்கும், காற்சட்டை, சேர்ட்டுக்களுக்கும் என்ன நடந்தது என்று சொல்லுவோம் என்ற கவலை.

இதற்கு மேலாக எப்படி இந்தக் கோலத்தில் வீடுகளுக்குப் போகப் போகிறோம் என்ற யோசனை வரவும் திகைத்துப் போய்விட்டோம். எங்களில் ஒரு புத்திசாலி சொன்ன யோசனைதான் சரியாகப்பட்டது.

'நாங்கள் வரும்போதுதான் பார்த்தோமே.. எல்லா ஒழுங்கைகளிலும் எங்கள் இடுப்புகளுக்கு மேல் வெள்ளம் பாய்ந்தது. நாங்கள் அப்படியே வெள்ள ஒழுங்கைகளுக்கால் நடந்து போனால், ஒருவருக்கும் தெரியப் போவதில்லை. வீடுகளுக்கு கிட்டப் போனவுடன் பாய்ந்து உள்ளே ஓடி விடுவோம்..'

'ஆகா.. அருமையான யோசனை' என்று சொல்லிக் கொண்டே, வெள்ளத்துக்குள் எங்கள் பிறந்த மேனிக் கோலங்களை மறைத்துக் கொண்டே நடந்து போனோம். ஆரம்பத்தில் எல்லாம் சுமூகமாகவே நடந்தது.

ஆனால் போகப் போக வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக இடுப்புக்கு கீழே வந்தது. இன்னும் போக முழங்காலளவு. எங்கள் வீடுகளுக்கு அருகில் போக வெள்ளம் கணுக்காலை தொட்டுத் தடவியது.

யாரோ அலவாங்குகள், கடப்பாரைகளுடன் நின்று றோட்டை வெட்டி வெள்ளத்தை வழிந்தோடச் செய்து கொண்டு நின்றார்கள்.

தூரத்தில் சில இரட்டைப் பின்னல்கள் வருவது தெரிந்தன. அதற்கு பிறகு யார் நின்று பார்த்தது. ஓடினோம். அதல்லவோ ஓட்டம்.

**Chicken Shop for Sale**
Incity £74,000 under management sales £2500 - £3000 per week. Rent £5000
Contact: ***Ranjan 07758 491 228***

**English Teacher Wanted**
English வீட்டிற்கு வந்து வகுப்பு எடுக்ககூடிய ஆசிரியர் தேவை. தொடர்புகளுக்கு: **07926 000 000**

***Need a Builder?***
Need Construction Work in your house?
Need a Plumber?
Need a Carpenter?
A tiler?
Painter decorator? Or all of them? We can find you the best workers from Eastern Europe at the best price, giving a fast efficient service & quality of work is of high standards.
Call us at **Sennall** on **07852 987 959** or send an email at **mail@sennall.co.uk**

**Digital Photo Albums**
**Ready in less than 10 days!**
**call us to view a sample albums!**
**Are you tred of waiting months for your wedding or birthday album delivered?**
**call M: 07760208999**
**Details on http://www.dreamdigital.co.uk/**
**Special prices for Photographers.**

தரமான சேவை! நியாமான கட்டணம்!
**THURAI & CO**
ACCOUNTING
Comprehensive Accounting & Tax
- **Personal Tax**
- **Corporation Tax**
- **Value Added Tax**
- **Capital Tax**
- **Business Advice**

Tel: **01865 247 109**
9A, Arnold Road, Oxford, OX4 4BH



## அம்மா என்றொரு அநாதை



*அனுப்புனர்:*
அம்மா என்றொரு அநாதை,
முதியோர் இல்லம்.

*பெறுநர்:*
நன்றி மறந்த மகன்,
நான் வாழ்ந்த இல்லம்

*பொருள்:*
பொருள் மட்டுமே பொருள்

ஞாபகமிருக்கிறதா மகனே?
இன்று
அன்னையர் தினமாம்!

உனக்கு
அன்னையை விட்ட தினம்தான் ...
ஞாபகத்திலிருக்கும்!

நீ என்
விரல்பிடித்து நடந்தநாட்களை
கொஞ்சூண்டாவது
உணர்கிறாயா?
என்னை விட்டுச்சென்ற
இந்த நாளில்...

நான் உணர்கின்றேனடா...

என்னைப் பிடித்து நடைபயின்ற
அதே விரல்கள்தான் ...
என்னை
இங்கேயும் அழைத்து வந்ததை
நான் உணர்கின்றேனடா...

பள்ளி வாகனம்
கண்விட்டு மறையும் வரையிலும்,
உன்னை
வழியனுப்பும் ...
விழிகளுக்குச் சொந்தக்காரி நான்!

இப்பொழுதோ உனது
புதிய வாகனத்தில்
நான் கண்விட்டு
மறையவேண்டுமென...
இங்கே
விட்டுச் சென்றது நியாயமா?

நீ கல்லூரி செல்லும்பொழுதும்
வாசல் வரை வந்து
ஊட்டிவிட்ட ...
விரல்களுக்குச் சொந்தக்காரி
நான்!

இங்கே
வயிறார கிடைத்தாலும்...
வரிசைச் சாப்பாடுதான்!

சௌக்கியமா மகனே..?
வருகிறவர்களெல்லாம் ...
பரிதாபப்படுகிறார்கள்!
பரிதாபப்படவேண்டிய நீயோ
வர மறுக்கிறாய்!

உயிலோடு இருக்கும்போது
வந்தாய்
உயிரோடு இருக்கும்போது
வருவாயா?

உனக்காய் எழுதி வைத்த
சொத்துக்களை ...
திருப்பிக் கேட்கமாட்டேன்!
நான் செத்தால் ..
என் சாம்பல் கேட்கவேனும் வா!

என் சாம்பல்
ஈரப்பதமாய் இருந்தால் ...
பயந்து விடாதே!
அது நான் விட்ட
கண்ணீர்களின் கலவை
அவ்வளவுதான்..!

ஒரு வேண்டுகோள் மகனே!
தயவுசெய்து
உன் மகனை ...
துணைக்கு அழைத்து வராதே!

என் மகனுக்காவது
கடைசிவரை ...
தனிமையே கிடைக்க கூடாது !
மரணம் தவிர,

இப்படிக்கு,
அம்மா என்றொரு அநாதை

- ரசிகவ் ஞானியார்

## ராமசாமியும், அவன் பொண்டாட்டியும், கந்தசாமியும்..

ஒரு குட்டி கதை சொல்லட்டா?

நம்ம ராமசாமி பொண்டாட்டிய புதுசா வேஷம் கட்டிக்கினு வந்த கந்தசாமி வூட்டுக்குள்ளாற பூந்து தூக்கினு பூட்டானாம்.. ராமசாமி ரிடர்ன் வந்து விஷயத்தை கண்டுக்கினு படா டென்ஷன் ஆகிக்கினானாம்..அப்பால கந்தசாமியோட பேக்கிரவுண்டு இன்னா, ஏதுன்னு விசாரிக்கசொல்லோ மெய்யாலுமே மெர்சலாகி போச்சு தாம் ராமசாமிக்கு.. சரி இன்னா பண்றதுன்னு வூட்டாண்ட இருந்த ஆளுங்கள எல்லாம் வலிச்சுகினு போனாலும் பத்தாதுன்னு நெனைச்சுகினு போற வழியில நம்ம வீராசாமியயும் அவம் ஆளுங்களயும் கூட்டம் சேர்த்துகினு கிளம்புனானாம்.

அப்படியே கெளம்பி போயி கந்தசாமியோட பேட்டைக்குள்ளாறயே ஜபர்தஸ்தா பூந்து சும்மா அடி பின்னி எடுத்துப்புட்டு, வீராசமிய வுட்டு பேட்டையில அல்லாத்தயும் கொளுத்தி போட்டுட்டு அவம்பொண்டாட்டிய மட்டும் வூட்டுக்கு இட்டாந்தானாம்.. அதுக்கு பொறவுதான் ஒரு டவுட்டானானாம்.. இன்னாடாது.. நம்ம பொண்டாட்டிய திரும்ப இட்டாந்த பொறவு அவ போக்கே செரியில்லயே..இத்தினி நா கந்தசாமி வூட்டுல இருக்கசொல்லோ எதுவும் மேட்டர், கீட்டர் ஆயிடுச்சான்னு..அத கேட்ட ராமசாமி பொண்டாட்டிக்கு மெய்யாலுமே மனசுக்கு கஸ்டமா பூடுச்சாம். இன்னாடாது நமக்கு கட்டுனவனும் சரியில்ல, இவனுக்கு தூக்கிட்டு போனவனே தேவலாம் போலன்னு சொல்லிகினு தாம் மேலயே நெருப்ப பத்த வச்சுகினாளாம். அவ்ளோதான்! கத முடிஞ்சு போச்சு...

இன்னாம்மே முயிக்கிறே..

இந்த கத உனுக்கு தெரியாதா..? இன்னாமே சொல்ற?

இத தானம்மே ஆயிரம், ரெண்டாயிரம் வருசமா நம்ம நாட்டுல சொல்லிகினுகீராங்க..

பொண்டாட்டிய திரும்ப இட்டாந்த ராமசாமியத்தான் அங்கங்க செல வச்சு கும்பிட்டுகினுகீறாங்களாமே..

இந்த கத தாம்மே நம்ம நாட்டுக்கே பேர் பெத்த ஏதோ 'ராமாயணம்'னுவாங்களாமே?

உங்கள் புரிதலுக்காக இங்குள்ள சென்னைத் தமிழ் வார்த்தைகள்..

வூடு – வீடு
பூந்து – புகுந்து
பேக்கிரவுண்டு – பின்னணி
மெர்சல் – பயம்
வலிச்சுகினு – சேர்த்துக் கொண்டு
பேட்டை – இடம்
ஜபர்தஸ்தாக – தைரியமாக, வலுக்கட்டாயமாக
டவுட்டு – சந்தேகம்
செல – சிலை

- *பால்வெளி*



# யார் இந்த ரஜினிகாந்த்?

பரதேசி
( ஒரு பேப்பருக்காக )



"வைரவி வீடு இது தானா? பரட்டைத்தலை, தாடிமுகம் காச்சிச்சட்டை, பீடிவாய் இவற்றுடன் அந்த உருவம் பெரிய இரும்புக் கேட்டைத் திறந்து கேட்கிறது. தமிழ்த் திரைக்கு இது புதிய முகம் (புது முகம் என்கின்ற அர்த்தத்தில் அல்ல இந்த முகம் அதன் பிறகு வந்த சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு, தமிழ்த்திரையை தமிழ் நாட்டு மக்களை ஒரு பெரும் அதிர்வுக் குள்ளாக்கப் போகின்றது என்று அப்போது யார் தான் நினைத் திருந்தனர்? ஆனால் அது நடந்தது.

இப்படி ஒரு முகத்தினை இது வரை தமிழ்த்திரை உலகு கண்டதில்லை தமிழ்த் திரையில் நாயகர் களாக ஆனோர் யாரும் "சிவலை"யாக, அழகிய முக வெட்டுடன், மேலும் பல விசயங்களில் வல்லமை பெற்ற வர்களாகத் திகழ்ந்தார்கள்.

தமிழ்த்திரையின் ஆரம்பகால நாயகர்கள் என்று கொல்லப்பட்ட, எம் கே.தியாகராஜ பாகவதர் சின்னப்பா பாகவதர் என.ஜி.கிட்டப்பா என்போரெல்லாம் அழகிய முகப்பொலிவு கொண்டோர் மாத்திரமல்ல திறமையாகப் படும் வல்லமையும் வாய்க்கப் பெற்றோர் அதன் பிறகு நாயகர் ஆனார் என அறியப்படுகின்ற கே.ஆர், ராமசாமி, ரி.ஆர் மகாலிங்கம் ஆகியோர் திறமையாகப் பாடும் குரல் கொண்டிருப்பவர்.

அப்போதே, எம்.கே.ராதா, ரஞ்சன் என்று வந்திருந்த தமிழ்த்திரை நாயகர்கள் பாடுவதற்கு வல்லமை பெற்றிராவிடினும், வாட்போர், குதிரை, ஏற்றம் முதலான வற்றில் தகுதி பெற்றிருந்தனர். ஆயினும் யாருக்கும் பொதுத் தகுதி உண்டென்றால், அது அழகிய முகவெட்டு, மற்றும் தோலின் வெண்மை நிறம்.

பிறகு வந்த முப்பது வருடங்களுக்கு மேலாக, தமிழ்க் திரை உலகை இரு பெரும் சூறாவளிகள் சுற்றி அடித்தது என்றால், அவ்விருவரின் பெயர்களையும் நான் சொல்லித் தான் தெரிய வேண்டும் மன்றல்ல, என்றாலும், சொல்கிறேன்,எம்.ஜி.இராமச்சந்திரன்,சிவாஜிகணேன்.

எம்.ஜி.ஆர் நாயகன் ஆவதற்குப்பட்ட சிரமங்கள் சொல்லி மாளாது. ஆயினும், அவர் சுலபமாக முதல்வர் ஆகி விட்டார். ஆனால் சிவாஜிகணேசன் எடுத்த எடுத்த எடுப்பிலேயே நாயகன் தான்.

1952 இல் பராசக்தி தந்த நாயகன். ஆயினும் பராசக்தியில் பஞ்சப்பட்ட பரதேசிக் கோலம். தமிழ்த் திரையின் நாயக வரையறைக்குள் அகப்பட்ட முகமா அது? பராசக்தியைத் தயாரித்த ஏ.வி மெய்யப்பர் செட்டியார் இது வரை எடுக்கப்பட்டிருந்த பராசக்தியின் படச் சுருளைத் திரையில் போட்டுப்பார்த்து விட்டு "இந்தப் பஞ்சப்பரதேசிக் கோலம் நமது படத்திற்கு ஆகாது என்று சிவாஜிகணேசனை நீக்கச் சொல்லி விட்டார் கே.ஆர்.ராமசாமியை வைத்து மீண்டும் படத்தைத் தயாரிக்கச் சொன்னார். ஆனால் கலைஞர் கருணாநிதி, இன்னொரு தயாரிப்பாளரான பெருமாள் ஆகியோர் சிவாஜி கணேசனை தொடர்ந்து நாயகன் ஆக்குவதற்கு நிர்ப்பந்தம் கொடுக்கவே சிவாஜி கணேசன் நாயகன் ஆனார். நிலைத்தார். பிறகு ஏ.வி.எம் நிறுவனத்தின் பல திரைப்படங்களில் சிவாஜி கணேசன் நடித்திருந்தாலும் கூட, தன்னை நிராகரிகரித்ததிலிருந்து ஏ.வி. மெய்யப்பச் செட்டியாரை சிவாஜி கணேசனும் நிராகரித்தார். அல்லது மன்னிக்கவில்லை.

இவ்வாறான நாயக குணாம்சங்கள் மேலாங்கியிருந்த நிலைமையில் தான் பரட்டைத் தலையுடன், தாடி முகத்துடன், பீடி வாயுடன் அந்த உருவம் 1975 ஆம் ஆண்டு கே.பாலச்சந்தரின் அபூர்வ ராகங்கள் திரைப் படத்தில் தோன்றுகின்றது. அவ்வாறு தோன்றிய காலம், கூட எம்.ஜி.ஆர் சிவாஜி கணேசனின் ஆதிக்கம் குறைந்த காலம் அல்ல. அடுத்த நிலையில் இருந்த ஜெமினிகணேசன், ஜெய்சங்கர், முத்துராமன், ஏ.வி.எம். ராஜன், ரவிச்சந்திரன், சிவகுமார் போன்றோரும் அங்கங்கு ஊடாடிக் கொண்டிருந்த காலம். இன்னும் சொன்னால் இளைய தலை முறையென்று சிறீகாந், விஜயகுமார், ஜெய்கணேஷ் ஆகியோரும் நாயகர்களாக ஆனகாலம். தமிழ்த்திரையின் நடிப்புபாணியை அப்படியே புரட்டிப் போட்ட கமல்காசன் முகிழ்த்து முளைத்த காலம்.

அத்துடன் இதில் (வைமானிகா சாஸ்திரம்) விமான ஓட்டத்தைப் பதிவு செய்யும் கருவி. விமானத்திலிருந்து எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகள். விஷவாயுக்கள். இறக்கைகளை நீட்டுவதும் மடக்குவதும். பருவ நிலைகளை உணர்த்தும் அமைப்பு சூரியசக்தியைப் பயன்படுத்துதல். விமான ஓட்டி அணிய வேண்டிய உடை. உணவுப்பழக்க வழக்கம். விமானம் செய்யப் பயன்படுத்தப்படும் உலோகம். என்பன பற்றியெல்லாம் விரிவாகக் கூறுகின்றது. குறிப்பாக விமானம் செய்யப் பயன்படும் உலோகம் பற்றிக் கூறும் போது வெப்பத்தைக் கிரகித்துக் கொள்ளும் உலோகமே உகந்தது எனக் கூறுகிறது.

மேலும் விமானத்தில் ஏழுவகையான கண்ணாடிகளும் லென்சுகளும் பொருத்தப்பட வேண்டும் இந்த லென்சுகள் ஆயுதங்களைப் பிரயோகிக்க உதவியதாகவும் இந்த வைமானிகா சாஸ்திரம் கூறுகின்றது. அத்துடன் எதிரிவிமானியின் கண்களை இருட்டாக்க லென்சுகளைப் பயன்படுத்த வேண்டும். என்றும் சூரிய ஒளியில் மின்சத்தியைப்பெற்று அதன் மூலம் எதிரி விமானிகளை அழிக்கும் முறைகளையும் கூறிப்பிட்டுள்ளது.

ஏழு மோட்டார்கள் மூலம் இவ் விமானங்களை இயக்க சக்தி கிடைப்பதாகவும். சூரியசக்தி. இரசாயண சக்தி. மின்சக்தி. என்பவற்றின் மூலம் விமானம் முன்னோக்கி செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பறப்புக்களை மேற்கொண்டதாகவும் இதில் பெரும்பாலும் சூரியஒளியே பயன்படுத்தப் பட்டது. எனும் தகவலும் (வைமானிகா சாஸ்திரத்தில்) உள்ளது. இந்தத்தகவல் நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. அல்லவா !.

அத்துடன் இதில் ருக்ம சுந்த திரிபுர சகுண என நான்கு வகையான விமானவகைகள் இருந்ததாகக் கூறுகின்றது. அதில் ருக்மவிமானம் சுந்தவிமானம் ஆகியன சந்திர மண்டலத்திற்குச் சென்ற அப்போலோ விண்கலத்தை போன்ற அமைப்புடன் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

திரிபுர விமானம் தரையிலும் நீரிலும் செல்லக் கூடியது. இதன் வேகம் குறைவானது. என்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் சகுன விமானமானது நம்முடைய நவீன விமானத்திற்கும் ராக்கெட்டுக்கும் இடைப்பட்ட அமைப்பைக்கொண்டது. இந்த விமானம் மூலம் எந்தக் கிரகத்திற்கும் சென்றுவர முடியும். என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இது வெறும் கற்பனையில் உருவான நூல் (வைமானிகா சாஸ்திரம்) என்று கூறமுடியாதுள்ளது. எனினும் அவற்றை கற்பனை எனக் கூறினாலும் அதில் உள்ள வியத்தகு நவீன தொழில் நுணுக்கங்கள் பற்றி பழங்கால மனிதன் ஒருவருக்கு ஏற்பட்ட சிந்தனை விந்தையிலும் விந்தையே!

இது ஒரு வேளை பூமியில் உள்ள மனிதனுக்கு இந்த அபூர்வதொழில்நுட்பம் தெரியாது இருந்தாலும் வெளிக்கிரக மனிதர்களின் படைப்பிடிப்பாகவும் இவை இருக்கலாம் என அறிஞர்கள் கருதுவர். அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

அடங்காப்பற்று அ.மயூரன்

# கேள்வி பதில்

அஞ்சலா ஜெகநாதன்
(மூலிகை மருத்துவர்)



*கேள்வி: எனக்கு 29 வயதாகிறது (பெண்). கடந்த 4-,5 வருடங்களாக வாய் துர்நாற்றத்தால் மற்றவர்களுடன் பேசுவதற்கே தயக்கமாகவிருக்கிறது. சிலசமயங்களில் முரசிலிருந்து இரத்தம் வருகிறது. என்னுடன் பேசிக்கொண்டிருப்பவர் சகிக்க முடியாத நாற்றம் காரணமாக முகம் சுழித்து விலகிப் போகும் பொழுது இறந்து விடுவதே மேல் என்னும் ஓர் உணர்வு. தயவுசெய்து ஏதாவது வழி சொல்வீர்களா? (பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது)*

பதில்: வாய் நாற்றமடிப்பது பலருக்கு அவ்வப் பொழுது வந்து போவதாக இருந்தாலும், நிரந்தரமாகவும், மீண்டுவருவதாக இருப்பதுதான் மற்றவர்களுடன் பேசும் பொழுது அசௌகரியமான நிலையை ஏற்படுத்துகின்றது. வாய் நாற்றத்திற்கு பல காரணங்கள் இருக்கின்ற போதிலும், அவற்றை இலகுவாகவும் இயற்கையான முறையிலும் தீர்த்துவிடலாம்.

சுத்தமான வாய்க்குழியைப் பேணுவதே வாய் நாற்றத்தை தவிர்ப்பதற்கான முதற்படியாகும். வாய்க்குழியிலமைந்த பற்கள், ஈறுகள், நாக்கு ஆகியவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உணவின் சிறு துண்டுகள் தங்கும் பொழுது அதில் பற்றீரியா தாக்கமேற்பட்டு சிதைவடையும் பொழுது துர்நாற்றம் வரும் வாய்ப்புண்டு. தினமும் இரு வேளை நல்ல பல் துலக்கியினால் (Tooth brush) நன்றாக துலக்கி சுத்தம் செய்வதோடு, நாவையும் ( மென்மையான பல்துலக்கியினால்) வழித்துவிட வேண்டும். நாளுக்கு ஒரு தடவையாதல் நாவை வழித்து விடவேண்டம். ஒவ்வொரு உணவின் பின்பும் பல்துலக்குவது மிகவும் நன்மை பயக்கும். ஆனால் இது நடைமுறைச் சாத்தியம் குறைந்ததாகையால், வாய்நிறைய தண்ணீரை எடுத்து நன்றாக அலசி கொப்பளித்து விடலாம். பல்துலக்கியை இரு மாதங்களுக்கு ஒரு தடவை மாற்ற வேண்டும். செயற்கை பல் வரிசையை பயன்படுத்துபவராக இருந்தால், அவற்றை கிரமமாக, நன்றாக கழுவி சுத்தஞ் செய்யவேண்டும். carrot, apple, celery போன்றன பற்களில் ஏற்படக்கூடிய படிவுகளை (plaque) தடுக்கவல்லன.

வருடத்திற்கு இரு தடவையாதல் பல் வைத்தியரைக் கொண்டு பற்களை சுத்தம் செய்வதோடு, பற்களின் ஆரோக்கிய நிலையினையும் தெரிந்து கொள்ளவேண்டும். முரசிலிருந்து இரத்தம் வடிவதாக இருந்தால், அது வாய் நாற்றத்திற்கு காரணமாக இருப்பதோடு பற்சூத்தை, பற்களுக்கடியான கட்டி (abscesses) க்கும் காரணமாகிறது. சில உணவுகளும் வாய் நாற்றத்திற்கு காரணமாகலாம். உள்ளி, வெங்காயம், blue cheese , காரமான, வாசனைத் திரவியம் சேர்த்த (spicy) இறைச்சிக் கறிவகைகள், சில வகை மீன்கள், மதுபானங்கள், beer, wine, whiskey, கோப்பி போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில நோய் நிலைக்கான மருந்துகளும், சமிபாட்டுக்குழறுபடிகளும் வாய் நாற்றத்திற்கு காரணமாகலாம்.

### இந்நிலைக்கு பயன்படுத்தக்கூடிய சில :

Berberis plus - மூலிகைச் சேர்மானம் சமிபாட்டை ஊக்குவித்து, உணவுத் தொகுதி கழிவகற்றலை மேம்படுத்துகிறது.

Peppermint oil - 10 துளிகளை 100அட நீரில் கலந்து வாயை அலசி கொப்பளிக்கப் பயன்படுத்தலாம்.

Vm - 75 குறைநிரப்பி - வேண்டிய உயிர்ச்சத்துக்களைக் கொண்டிருப்பதனால் (vitb) நரம்புத் தொகுதிக்கு ஊக்கம் கொடுப்பதாக செயற்படுகிறது.

Bio quinine 10 - முரசை வலுப்படுத்துவதோடு, இரத்தக் கசிவையும் குறைக்க வல்லது.



HERBA NATURELLE

★ Hair Dye, அழகு சாதனப் பொருட்கள்

★ Vitamins & Minerals

★ உடற்பயிற்சிக்கான போசாக்கு வகைகள்

★ உடல் எடை குறைப்புக்கான மருந்துகள்

★ மூலிகை மருந்துகள்



வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

மருத்துவ ஆலோசனைகளுக்கு, மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE Natural Health Centre, 1410, London Road, Norbury SW17 4BZ

Tel: +44 (0) 20 8765 9015 / Email: sales@herbanaturelle.com / Web: www.herbanaturelle.com

# துலைக்கோ போறியள்?

நீண்டு வளைந்து திரும்பி பாம்பு மாதிரி செல்லுகின்ற அந்த மெயின் ரோட் பிரபல சந்தியில் முடிவடைகிறது. காலை ஏழு ஏழரை ஆனதும் பரபரப்பு அடையும். தெரு ஒன்பது மணியானதும் அடங்கி விடும். மீண்டும் இதே பரபரப்புடன் மாலை ஆனவுடன் தோற்றம் அளிக்கும். 200 யார் ஒரு இடை வெளிக்கு பஸ்தரிப்பிடம் என்றதுக்கான அறிவுப் பலகையோ அடையாளமோ இல்லை. அது தான் என்று வழக்கமாக்கி கொண்டார்கள். அங்கு கூட்டமாக நிற்கும் வெள்ளை உடை அணிந்த பள்ளி மாணவிகள் ஸ்கூல் பஸ்க்காக காத்திருப்பது ஒரு புறம், சந்தியில் சென்று டவுன் பஸ் பிடித்து அலுவலக வேலை செல்பவர் மறு புறம் சைக்கிளிலும் கால் நடையாகவும் அறக்க பறக்க சென்று கொண்டிருக்கிறார்கள். இந்நேரத்தில் இந்த றோட்டை பார்ப்பவர்களுக்கு வாழ்க்கை இவ்வளவு சுறு சுறுப்பாக இருக்கின்றதே, வேகமாக இருக்கின்றதே என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும். இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த தெரு மயானம், அமைதி அடைந்து விட சோம்பலுடன் பயணிக்கிற வாழ்க்கை மாதிரியும் ஒருவித ஏமாற்றம் கலந்த தனிமை பய உணர்வை தோற்றுவிக்கும்

இந்த நேரத்தில் இந்த பரபரப்புக்கு மத்தியில் தவறாமல் காணப்படுவார் தரகர் கந்தையா. காலையில் போய் மாலையில் இதே வேக பரபரப்புக்குள் திரும்பி வருவார். அறுபது தாண்டிய நிலையிலும் அவரது கட்டுமஸ்தான உடம்பும், வெள்ளையும் கறுப்பும் கலந்த அடத்தியான மயிருடனான தோற்றமும் அவருடைய நடையும் இளமை சுறு சுறுப்பை பறை சாற்றி கொண்டிருக் கொண்ருக்கும். வலது பக்கத்தில் புத்தக கடதாசி கட்டுகள் அடங்கிய பையும் இடது பக்க கமக்கட்டில் மான் மார்க் நீண்ட குடையும் எப்போதும் இருக்கும்.

அந்த குடை வேற தேவைகளுக்கு பயன் படுகிறதோ இல்லையோ என்னவோ, ஆனால் ஊர் கட்டாகாலி நாய்களின் தொல்லைகள் இருந்து இவரை தற்காக்க நன்கு பயன் படுகிறது. தரகரின் கபட குணங்களை மனிசர் கண்டு கொள்ள முடியா விட்டாலும் கண்டு கொண்டோம் நாங்கள் என்ற மாதிரி ஒன்று குரைக்க ஊரிலை உள்ளது எல்லாம் சேர்ந்து குரைத்து இவரை கண்டவுடன் தொல்லை கொடுக்கும். குடையைகடாயுதமாகபாவித்துஉதுகளோடை மல்யுத்தம் செய்து படாத பாடு படுவதை கண் கொள்ளா காட்சியாய் ரசிக்கவைக்கும் பார்க்கும் சில சிறுசுகளுக்கு.

உவர் வரும்படி வருகிற எந்த வேலையும் செய்ய தயாராய் இருப்பார். நீதி அநீதி பார்க்க கூடாது என்பது இவரது தாரக மந்திரம். இதை தனது தொழில் தர்மமாக வழுவாது கடைபிடிப்பவர். குடும்பத்தை பிரிச்சு வைப்பார் தேவை இல்லாத குடும்பத்தை சேர்த்து வைப்பார். கலியாண தரகு மட்டுமல்ல..காணி நில சம்பந்த மாண சட்ட நுணுக்களிலும் கை தேர்ந்தவராக இருந்தார். வாதி பிரதிவாதிகளின் இருவரிடம் காசு வேண்டி இரண்டு பேருக்கும் உபத்திரவம் செய்ய தயங்காதவர் தனது நலனுக்காக

காணி உறுதியை ஏன் தான் எல்லாராலும் வாசிக்க முடியாமால் இவரை போன்ற ஆசாட பூடபதிகளால் மட்டும் வாசிக்க கூடியது மாதிரி எழுதியிருக் கிறார்களோ தெரியலை. தமிழை கொன்று எழுத்தை விளங்க முடியாமால் படித்தவர்கள் கூட இவரை தேடி வருவார்கள் தோம்பு உறுதி போன்ற வற்றை வாசித்து விளங்குவதற்க்கு. இவரை போன்ற ஆட்களுக்கு எப்படி விளங்குகிறது என்பது ஆச்சரியமே. அல்லது அரை குறையுமாய் புரிந்து கொண்டு விளங்கினமாதிரி நடிக்கிறார்களோ என்னவோ.

வழமையாக இந்த கோர்ட்டு வாசலை அடையும் போது அவரின் வருகைக்கு பலர் காத்திருப்பர் வழக்காளி எதிராளி மட்டுமல்ல, அங்கு கறுத்து கோட்டு போட்டு அங்கு திரியும் அப்புக்காத்து மாரும் தான் . கறுப்பு கோட்டிற்குள் இருந்து கொண்டு கோட்டில் கொலை வழக்கில் றேப்பிங் வழக்கில் கை எப்படி வைச்சிருந்தனி கால்களை எப்படி வைச்சிருந்தனி என்று சாட்சிகளை மிரட்டும் விண்ணரும் உவை தான். வெளியிலை வந்து வெள்ளை வேட்டி கட்டி கொண்டு வீராப்பாக நடிச்சு தமிழருக்கு விடுதலை வேண்டி தாறன் என்று பூச்சாட்டி காட்டுகிற தன்மான தானை தமிழின தலைவர்களும் உவை தான்

தரகருக்கு வழமையாக கோர்ட்டுக்கு வருகிற உற்சாகம் இன்றில்லை. இவ்வளவு காலம் கோர்ட் வளாகத்தில் ஒரு அங்கீகரிக்க படாத தொடர்பாளராகவும் ஆலோசகராகவும் யாருடைய கழுத்தறுத்தவாவது தனது பலாபலன் களை தேடி ஓடி ஆடி திரிபவர் வரும்படியோடை திரும்புவேன் என்ற குதூகாலம் இருக்கும்.

இன்று கால்கள் நடை தளர்ந்திருந்தது கோர்ட்டு வாசலை அடையும் போது. அவரை தாண்டி இரண்டு விளக்கமறியல் கைதிகளை கை விலங்குகளால் பிணைத்தபடி ஜெயில் காட் நடத்தி செல்கிறான். வழக்கு களின் போது யாழ் சிறைச்சாலையில் இருந்து விலங்கிட்ட படி பஸ்ஸில் தான் சனத்தோட சனமாக வழமையாக கூட்டி வருகிறது வழக்கம்.

கோர்ட் வளாகத்தில் ஆங்காங்கே ஆட்கள் குழுமி இருக்கிறார்கள்... இதே கோர்ட் வளாகத்தில் ராசா மாதிரி ஓடி திரிந்த தான் தீர்ப்பை எதிர்பார்க்கும் குற்ற வாளியாக வருவேன் என கனவிலும் நினைத்திருக்கமாட்டார். எத்தனையோ மனங்களின் நெஞ்சை பொருமி வேதனை செய்ய வைத்தவரின் நெஞ்சு விம்பி வெடித்தது வேர்த்து கொட்டியது. மனம் அறிந்து செய்த குற்றங்கள் எவ்வளவோ இருக்க. மனம் அறியாமல் செய்த குற்றத்திற்க்காக மாட்டுப் பட்டு நிறபதை எண்ணி கலங்கினார். தான் நம்பின அப்புகாத்துமாரும் கை விட்டதானால். தீர்ப்பு வரும் முன் தீர்ப்பு கிடைத்தமாதிரி பதறினார்.கந்தி குளறணும் அழணும் போல அவருக்கு இருந்தது. கோர்ட் அறையில் இருப்பதை உணர்ந்தார். கோர்ட் முதலி இவரது பெயர் சொல்லி உரக்க கூப்பிட்டான். தீர்ப்பு கொஞ்சம் நேரத்தில் தெரிந்துவிடும்.

தீடிரென்று விழித்து கொண்டு சனங்கள் ஒன்றும் சேர்ந்த மாதிரி வழமையான மாலை நேரத்தில் பரபரப்பாகி விட்ட அந்த மெயின் ரோட். அந்த பரபரப்பில் வழமையாக எதிர்ப்பார்பில் காத்திருந்து அந்த ஒருவரை காணாமால் என்னவோ .தங்களுக்குள் குரைத்து அடிப்பட்டு அந்த தெரு இரைச்சலை அதிகமாக்கி கொண்டிருக்கின்றன.

அந்த தெருவை இரைச்சலை தாண்டி சென்ற பஸ்ஸில் மூவர் விலங்கு இடப்பட்டிருந்தனர்.

*- சின்னக்குட்டி*

## மீண்டும் சிவாஜி!!

'சிவாஜின்னு பேரு வச்சதே சிவாஜின்னா சிவாஜி கணேசன் அப்ப்டின்னு இருக்குற பெயரை மறந்து சிவாஜின்னா அது சிவாஜி ராவ்தான்னு மக்கள் சொல்லணும்கறதுக்காக ரஜினி செய்த சதிதான் இந்தப் பெயர் திணிப்பு', என்றவாதம் ஒருபுறமிருக்க,

இப்படித்தான் ஞானஒளி படத்துல இந்த பாட்டுவந்தபோது சிவாஜி அண்ணாச்சியோட சேட்டை தாங்காம (ஓ மை லார்ட்ன்னு 8600 டெசிபல்ல கத்துனா எந்த கர்த்தராலத்தான் தாங்க முடியும்?) கர்த்தர் எழுந்து ஓட, அவரைப் பிடிக்குறதுக்காக வேகமா நடந்துக்கிட்டே சிவாஜி அண்ணாச்சி தொரத்துவாரு பாருங்க. அதை நெனச்சாலும், பார்த்தாலும் அடக்க முடியலீங்க - சிரிப்பை.. அதுலயும் சுட்ட கோழி மாதிரி கையை விறைப்பா வச்சுக்கிட்டு அவர் பண்ற சேட்டை இருக்கே....ஓ மை லார்ட்!! நோ பீஸ் ஆஃப் மைண்ட் :-))) கர்த்தர் கழுத்துல கத்தியை வைக்குற மாதிரி ஒரு பாட்டு.

பாவம் கர்த்தர் என்ன செய்வார்?

கேள் தெருகிறேன் என்றதே நீரன்றோ?

(தர்ற மாதிரி ஏதாவது கேளேம்ல கேோட்டிக்காரர்)

நான் பலமுறை கேட்கிறேன் தரவில்லை

(நான் ஓவரா நடிக்கக் கூடாதுன்னு கேக்குற. அதையெல்லாம் எப்படிலே தர முடியும் என்னால்?)

பாடல் தரும் நீதி:

கர்த்தராவே இருந்தாலும் கஷ்டம்தாண்டே!!

*- ஆசிப் மீரான்*


# Kerala Ayurvedic Health Clinic (Near Wembley)



1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line



- ▲ Massage Therapies by experienced and highly skilled therapists
- ▲ Treatment is designed around your individual health needs
- ▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
- ▲ Only natural medicines are used
- ▲ No side effects at all
- ▲ Wide range of therapies

| | |
|---|---|
| ▲ Arthritis | ▲ Back Pain |
| ▲ Frozen Shoulder | ▲ Whiplash |
| ▲ High Blood Pressure | ▲ Obesity |
| ▲ Pulled Muscles | ▲ Joint Pain |
| ▲ High Cholesterol | ▲ Digestive Disorders |
| ▲ Trapped Nerve | ▲ Diabetes |
| ▲ Paralytic Conditions | ▲ Sleeplessness |
| ▲ Certain Skin Conditions | ▲ Stiffness |
| ▲ Stress and Strain | ▲ Migraine |

## FREE Consultation

Authentic and Effective Kerala Ayurvedic Treatments

Qualified and Registered Ayurvedic Physicians

Affordable Prices

*** Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,**

*** Male and Female therapists available**

*** Can speak in Hindi Tamil or English & Malayalam**

*** Free Parking**

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.........



**www.kahc.co.uk**

**20% Discount as Summer Special**

**Call 020 8902 1104 / 020 8902 1707**

சிறுகதை

# அக்கரைப் பச்சை



இருளரக்கனை விரட்டியடிப்பதற்கான கதிரவனின் இறுதிக் கட்டத் தாக்குதல் அரங்கேறிக் கொண்டிருக்கும் அதிகாலை நேரம். விடிந்தும் விடியாத அந்தப் பொழுதின் குளுமையை, அமைதியை, அழகை ஒரே நொடியில் அஸ்தமிக்கச் செய்த அந்தச் சத்தம் ஊரையே பரபரப்படையச் செய்கிறது. உயிர்ப்பலி எடுப்பதற்காய் யமதர்மன் 'பொம்மர்' உரு எடுத்து வந்து விட்டான்.

"தம்பி சத்தம் கேக்குது. எழும்பி பங்கருக்கை ஓடடா"

சொல்லிக் கொண்டே பங்கரை நோக்கி அம்மா ஓடிக்கொண்டிருக்கிறார். எனக்கு எரிச்சலாயிருக்கிறது.

"சீ.. இதென்ன வாழ்க்கை. உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு ஒவ்வொரு நாளும் ஓட்டமும் நடையுமா .. .. இதை விட இப்படியே கிடந்து செத்துப் போகலாம்."

விரக்தியின் எல்லையில் மனதிற்குள் எண்ணிக் கொண்டவனாய் அப்படியே கட்டிலில் கிடக்கிறேன்.

'டும்'

'பொம்மர்" தன் கைவரிசையைக் காட்டி விட்டது. குண்டு கன தூரந் தள்ளித் தான் விழுந்திருக்க வேண்டும். ஆனால் அந்த அதிர்ச்சியிலே எங்கள் கூரையிலிருந்து பெயர்ந்து வந்த ஓட்டுத் துண்டொன்று என் தலைமாட்டில் விழுகின்றது.

சில அனர்த்தங்கள் நடப்பதற்கு முன்பாக ஏதாவது 'சிக்னல்' தெரியுமாம். பாட்டி கதை கதையாகச் சொல்லுவார். அப்படியானால் அடுத்த குண்டு உன் தலையில் தான் என்று இயற்கை எச்சரிக்கின்றதோ?

மனத்திலிருந்த உறுதி எங்கோ சென்று ஒளித்துக் கொள்ள சட்டென்று எழுந்து பங்கரை நோக்கி ஓடுகிறேன். மரணபயம் யாரைத்தான் விட்டது?

நான்கு வீடுகளுக்குப் பொதுவான அந்தச் சிறிய பங்கர் ஏற்கனவே நிரம்பி வழிகின்றது. உள்ளே நின்ற இருபது உருப்படிகளுடன் இருபத்தொன்றாவதாக என்னையும் இணைத்துக் கொள்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது.

அப்பாடா! ஒரு காலை வைப்பதற்கு இடங் கிடைத்து விட்டது. பங்கருக்குள் 'சிதம்பர நடராஜர்' வடிவம் எடுக்கிறேன்.

இதற்குள் இரண்டு பெண்கள் தங்கள் குடும்பிச் சண்டையை ஆரம்பித்து விட்டார்கள்.

'ஆரப்பா இடிக்கிறது? கொஞ்சந் தள்ளி நில்லுங்கோ பாப்பம்.'

'இதுக்கிள்ளை எங்கை தள்ளி நிக்கிறது. நாங்களே இஞ்சை மூச்சு விட ஏலாமல் நிக்கிறம். நெரிபடாமல் நிக்க வேணுமெண்டால் வீட்டிலை தனி பங்கர் வெட்ட வேண்டியதுதானே?'

'நீ வந்து வெட்டித் தாவன்'

வார்த்தைகள் தடித்து ஒருமையில் வந்து நின்றன.

'மச்சான், 'ஓயாத அலைகள் 5' தொடங்கிட்டுது'

இளைஞன் ஒருவன் ஜோக்கடிக்க பங்கருக்குள் கொல்லென்ற சிரிப்பொலி.

சில அனர்த்தங்கள் நடப்பதற்கு முன்பாக ஏதாவது 'சிக்னல்' தெரியுமாம். பாட்டி கதை கதையாகச் சொல்லுவார்.

இத்தனை அவலத்திற்குள்ளும், மரண அரக்கன் தலைக்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலையிலும் இவர்களால் இப்படிச் சிரிக்க முடிகின்றதே என்று நினைத்த போது ஆச்சரியமாகவும் இருக்கிறது.

மற்றக் காலையும் நிலத்தில் வைக்க வேண்டும் என்ற என் நினைப்பை அந்தச் சண்டை அடியோடு கைவிட வைத்து விடுகிறது.

'பறவாயில்லை, காலையிலை கொஞ்சம் உடற்பயிற்சியாகவாவது இருக்கட்டும்'

இயலாமை சமாதானமாக மாறுகிறது. மனஞ் சமாதானஞ் சொல்லிக் கொண்டாலும் கால் கடுமையாக வலிக்கிறது.

'மூன்று குண்டுகளையும் போட்டிட்டாங்கள். வாங்கோ வெளியிலை போவம்'

முன்வீட்டுப் பென்சனியரின் அனுபவபூர்வமான வார்த்தை வயிற்றில் பால் வார்க்க வெளியே வந்து வேண்டா வெறுப்புடன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வைத்திய சாலைக்குச் செல்லத் தயாராகிறேன்.

'இந்தா தம்பி. .. இதைச் சாப்பிட்டிட்டுப் போ'

அம்மா இடியப்பத்தையும் கத்தரிக்காய்க் கறியையும் கொண்டு வந்து தருகின்றார்.

'இந்த வயதிலும் இப்படி சுறுசுறுப்பாக இருக்க உன்னால் எப்படியம்மா முடிகிறது? இத்தனை துன்பத்திற்குள்ளும் சிரித்தபடியே ஓடி ஓடி வேலைசெய்கின்ற வித்தையை எங்கேயம்மா கற்றுக் கொண்டாய்?'

மனதிற்குள் வியந்தவாறே மளமளவென்று சாப்பிட்டுவிட்டு சைக்கிளில் ஏறி மிதிக்கிறேன். அது கிறீச் கிறீச் என்ற சத்தத்தடன் மெள்ள நகருகிறது.

'என்னோடை படிச்சவங்கள் எல்லாம் கொழும்பிலை காரெண்டும் பங்களா எண்டும் வசதியா இருக்கிறாங்கள். நான் இஞ்சை இந்த ஓட்டைச் சைக்கிளோடை கிடந்து மாயுறன்.'

ஏக்கம் பெருமூச்சாக வெளிக்கிளம்புகிறது.

'ஐயா வாறார் .. ஐயா வாறார்..'

சந்தோசம் மேலிட கூடியிருந்த மக்களிடம் காணப்பட்ட சலசலப்பும் ஆரவாரமும் என்னை நிஜவுலகிற்குக் கொண்டு வருகிறது.

'கொஞ்சம் தள்ளி நில்லுங்கோ பாப்பம்.. .. மனிசர் போறதில்லையே?'

மனஉளைச்சலை அந்த அப்பாவிகளிடம் கொட்டியபடியே போய் ஆசனத்தில் அமர்கிறேன்.

நான் மேசையிலிருந்த தண்ணீரைக் குடித்து விட்டு வெறுங்கிளாசை வைக்கும் வரை பொறுமையாகப் பாாத்துக் கொண்டிருந்த சிற்றூழியன் கந்தசாமி

'ஒவ்வொருத்தரா வரிசையா வாங்கோ ..'

என்று குரல் கொடுக்கிறான்.

ஆட்களை அனுப்பச் சொல்லி நான் சொல்லவில்லை. ஒருநாளும் சொல்வதில்லைத் தான். கடமைக்கு வந்த முதல் நாள் நான் தண்ணீரைக் குடித்து விட்டு ஆட்களை அனுப்பச் சொன்னதிலிருந்து அதையே நேரசூசியாக்கி நான் அசனத்தில் அமர்ந்து தண்ணீரைக் குடித்து விட்டு வெறுங் கிளாசை வைத்ததும் தனது தொழிலை ஆரம்பித்து விடுவான்.

இங்கே கந்தசாமியைப் பற்றி கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும்.

கந்தசாமி சிற்றூழியன் என்றாலும் புத்திசாலி. குறிப்பறிந்து செயற்படுவதில் விண்ணன். ஆனால் என்னொடு அதிகம் கதைக்க மாட்டான். ஏதாவது கதைப்பது என்றாலும் நான்காக மடிந்து நாக்குழறச் சொல்லி முடிப்பான். கேட்டால் மரியாதை என்பான்.

'ஏன் கந்தசாமி உப்பிடிப் பயப்படுறாய்?... சும்மா சொல்லன்'

நானும் எத்தனையோ தடவை சொல்லி விட்டேன். அவன் மாறுவதாயில்லை.

'ஆச்சி கெதியா வாணை'

கந்தசாமி அவசரப்படுத்துகிறான்.

நடக்க முடியாமல் வந்து என்னருகே அமர்ந்த அந்த மூதாட்டியை உற்றுப் பார்க்கிறேன்.

உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆகக் குறைந்த தசைகளையும் இயக்கத்தையும் கொண்ட உருவம் அது. ஒட்டி உலர்ந்த உடல். குழிவிழுந்த கண்கள். தொய்ந்து தூங்கும் கன்னங்கள். கந்தல் உடை .. .

வறுமையின் முத்திரைகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

'தம்பி ராசா.. ஒரே கிறுதியாக் கிடக்குது. எழும்பி நடக்கவும் முடியேல்லை. நல்ல மருந்தாத் தா தம்பி. உனக்குப் புண்ணியுங் கிடைக்கும்..'

குரல் தளுதளுக்க என் இரு கைகளையும் ஆதரவுடன் பற்றிக் கொள்கிறாள்.

'முதலிலை கையை எடுங்கோ பாப்பம். அதுக்குள்ளை சொந்தங் கொண்டாடுறியள்.'

எனது அதட்டலில் பயந்து போய் தன்கைகளை விடுவித்துக் கொள்கிறாள்.

'உது வருத்தமில்லையெணை. .. . உடம்பு பலவீனமா இருக்குது. மூண்டு நேரமும் நல்ல சத்தாச் சாப்பிட்டால் உந்தக் கிறுதியெல்லாம் சரியாப் போயிடும் .. பொயிட்டு வாங்கோ.. ..'

உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆகக் குறைந்த தசைகளையும் இயக்கத்தையும் கொண்ட உருவம் அது.

சத்தாகச் சாப்பிடக்கூடிய பொருளாதார நிலை அவருக்கு இல்லை என்பது எனக்குப் புரியாமலில்லை. நானும் என்ன தான் செய்ய முடியும்? சத்துக்கான விட்டமின் குளுசைகளைக் குடுக்கலாம் என்றால் அவையும் தாண்டிக்குளம் தாண்டி வருவதில்லையே.

ஏமாற்றத்தோடு மூதாட்டி எழுந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஒவ்வொருவராகப் பார்த்து முடிப்பதற்குள் மூன்று மணியாகிவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளுகிறது.

'சாப்பாடுமில்லாமல் இந்தச் சனத்தோடை கிடந்து மாய வேண்டிக் கிடக்குது. எப்படியும் கொழும்புக்கு மாற்றம் எடுத்துக் கொண்டு போயிட வேணும்.'

மனதினுள் திடமாகக் குடிகொண்ட எண்ணத்தைச் செயலாக்க முனைகிறேன்.

எனது அதிஸ்டமோ அல்லது அந்த மக்களின் துரதிஸ்டமோ மாற்றல் உடனடியாகவே கிடைத்து விடுகிறது. சந்தோசத்துடன் கடிதத்தை அம்மாவிடம் காட்டுகிறேன்.

'உனக்கு விருப்பமெண்டால் பொயிட்டு வா தம்பி'

உயிர்ப்பில்லாமல் சொல்லுகிறார்.

அம்மா எப்போதும் இப்படித்தான். என்னுடைய எண்ணத்துக்கும் செயல்களுக்கும் ஒரு நாளும் குறுக்கே நிற்க மாட்டார். அவருடைய விருப்பங்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் தன்னுடைய மனதிற்குள் போட்டு மூடி விடுவார். எல்லாத் தாய்மாரும் இப்படித்தான் இருப்பார்களோ?

அம்மாவிற்கு என்னுடைய முடிவில் துளியும் விருப்பமில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அதை நான் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

இதைப் பற்றி நான் கிளற அவர் தன் மனந்திறந்து 'போக வேண்டாம்' என்று சொல்லி விட்டால் என்னுடைய தலைநகரக் கனவு என்னாவது?

(தொடர்ச்சி 43ம் பக்கத்தில்)

RADIUS SERVICES LIMITED

Contact our services for :
Shelving
Chillers, Freezers
Air Conditioning systems
Shop Fitting
Cold Rooms etc.



உங்களின் அனைத்து குளிர்சாதன
உபகரணங்களின் தேவை
மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு
நாடவேண்டிய ஒரே இடம்






Unit: 23 - 24 Resolution Way
London SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786

# சாய்ந்த கோபுரங்கள்...

## உலகமயமாக்கல்

**இளங்கோ**
*(ஒரு பேப்பருக்காக)*

உலகமயமாக்கல் எனும் இந்தச் சொற்பதத்தை பிரான்சில் கல்வி கற்கும் போதுதான் முதன் முதலாக அறிந்து கொண்டேன். உலகமயமாக்கல் என்பது உலகில் உள்ள நாடுகள் அனைத்தையும் முன்னேற்றும் வழி என்றுதான் மேலை நாட்டுக் கல்வி போதித்தது.

பின்நாளில் உலக மயமாக்கல் என்பதே உடல் நலத்துடன் உள்ள ஒரு விளையாட்டு வீரனுக்குப் போட்டியாக ஒரு ஊனமுற்றவனை ஓட வைக்க முயலும் அபத்தமானவழி என்பதுடன் உலகிலுள்ள தேசிய இன மக்களின் நலன்களையும் அவர்களின் மண் வளங்களை எந்த அளவிற்கு பாதிக்கின்றது என்பதையும் தெரிந்து கொண்டேன்.

உலகமயமாக்கல் என்றால் என்ன? உலகெங்கிலும் உள்ள வணிகம் மற்றும் சந்தைப் பொருளாதாரத்தை ஒன்றாக இணைத்து நாடுகளுக்கு இடையே உள்ள அரசியல், வணிக, பொருளாதார தடைகளை நீக்கி உலகத்தை ஒரு கிராமமாகச் சுருக்குவதே உலகமயமாக்கலின் நோக்கம். முதலாளியத்தின் புதிய வடிவமாக இதைக் கொள்ளலாம்.

உலகமயமாக்கல் என்பது எந்தளவிற்கு உலகில் பெரும்பான்மையாக உள்ள அடிமட்ட மக்களின் வாழ்க்கையை காவு கொண்டு வருகிறது என்பதை நம்மில் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை.

உலகமயமாக்கலின் பொதுமைப் பண்பே அதுதான். அதன் எல்லைகள் விரிவாகிக்கொண்டே போகும் ஆனால் சமத்துவம் இருக்காது. முதலாளிகளுக்கு கொள்ளை இலாபத்தை அது ஈட்டிக் கொடுக்கும். ஆனால் வறுமையை அது மேன் மேலும் அதிகரிக்க வைக்கும்.

உள்ளூர் விவசாயிகளும் சிறு தொழில் செய்து பிழைத்து வரும் மக்களும் பன்னாட்டு நிறுவனங்களின் படை எடுப்பால் தங்களின் உற்பத்திப் பொருளை சந்தைப் படுத்த முடியாமல் திணறுகின்றனர்.

இறையாண்மையைப் பற்றி வாய் கிழியப் பேசும் அரசாங்கங்களே தங்களின் மூலதனங்களையும் சொத்துக்களையும் தனியாருக்கு விற்று விடும் அளவிற்கு பெருமுதலாளிகளின் ஆதிக்கம் வலுப்பெற்று வருகிறது. இப்படி ஒரு வளர்ச்சியை கார்ல் மார்க்ஸ் கூட கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது.

இதன் விபரீத விளைவுகளை எண்ணிப் பார்க்கும் போது மார்க்ஸ் வரையறுத்த முதலாளித்துவத்தையும் தாண்டிய ஒன்றாகத்தான் இதைக் கருத முடிகிறது. முன்பு பிற நாடுகளின் மீது பொருளாதாரச் சுரண்டலை மேற் கொள்வதற்கு இராணுவத்தைப் பயன்படுத்திய ஏகாதிபத்திய அரசுகள் இன்று இராணுவத்திற்கு பதிலாகப் புதிய வழிகளை பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

ஆம் ஏகாதிபத்தியத்தின் இடக்கரடக்கல்கள்தாம் (euphemism)உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், தாரளமயமாக்கல் போன்றவைகள். ஆகையால் புதிய காலனியம் என்று இதை அழைக்கலாம் அல்லது பின் முதலாளித்துவம் (Post Capitalism) என்று ஏதாவது பெயரைக் போட்டுக் கொள்ளலாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் உலகமயமாக்கல் என்பது ஏகாதிபத்திய வெறியர்களின் சுரண்டல் மற்றும் அதற்கு அடிபணியும் உள்ளூர் கொள்ளையர்களின் ஆதிக்கம் என்பதுதான்.

இதிலிருந்து விடுபடுவதற்கு வழி இல்லையா என நினைக்கும் போது இரண்டு வழிகள் தோன்றுகின்றன

முதலாளித்துவத்தின் பிறப்பு வளர்ச்சி, வாழ்வு, சரிவு, அழிவு போன்றவற்றை விலாவாரியாக விளக்கி 'மூலதனம்' என்ற வரலாற்றுப் புகழ் மிக்க நூலை எழுதிய பேராசான் கார்ல் மார்க்ஸ், அந்த நூலில் முதலாளித்துவத்தின் அழிவில் சோசலிசம் மலரும் என்று குறிப்பிடுகிறார்.

இன்று மார்க்ஸ் கற்பனை செய்திருப்பதை விட பெருவளர்ச்சி கண்டிருக்கும் முதலாளித்துவச் சமூகத்திற்குள்ளே பல நூறு போட்டிகள் நிலவுவதைப் பார்க்கிறோம். நிலவுடைமைச் சமூகம் தகர்ந்து முதலாளித்துவச் சமூகம் பிறப்பெடுத்தது போல் இந்த போட்டிகள் முற்றி வெடித்து இன்றைய முதலாளித்துவச் சமூகம் தகர்ந்து சோசலிச சமூகம் பிறப்பெடுப்பதும் வரலாற்றின் கட்டாயமாக மாறலாம். மார்க்சின் விருப்பமும் இதுதான்.

அடுத்து, இன்றைய காலகட்டத்தில் மிகப் பெரிய இடத்தை பிடித்து விட்ட உலகமயமாக்கலை பின் நோக்கிச் செலுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இருப்பினும் அதனைக் கட்டுப் படுத்த முடியும். பல நாடுகளில் நடைபெற்று வரும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் இங்கு கவனம் கொள்ளத்தக்கது.

தேசியங்களுக்குள் ஏற்படும் சுயநிர்ணய உரிமையும் அதன் அடிப்படையில் விடுதலை பெற்ற அந்தந்த தேசிய இனங்களுக்குள் ஏற்படும் சமத்துவமான உறவும் உலகமயமாக்கலை கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றவை. ஏனெனில் நாடுகளுக்கிடையில் உள்ள வணிகத் தடைகள் அற்றுப் போன போதுதான் உலகமயமாக்கலின் வளர்ச்சி தீவிரம் அடைந்துள்ளது.

மக்களின் நலன் அடிப்படையில் போராடி வெற்றி பெறும் தேசிய இனங்கள் அதன் அடிப்படையில் தங்கள் அரசுகளை அமைத்துக் கொள்ள முன்வரும்போது தடைகள் அதிகமாகின்றன. தடைகள் அதிகமாகும்போது உலகமயமாக்கல் எனும் இந்த புதிய முதலாளியம் கட்டுப் படுத்தப் பட்டு பாதியில் நின்று போவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

இங்கு பலருக்கு முக்கியமான கேள்வி ஒன்று எழுவது தவிர்க முடியாதது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற சோசலிசப் புரட்சிகள் இறுதியில் தோல்வியை சந்தித்ததற்கு என்ன காரணம்? என்பதே அது.

சோசலிச சமூகத்தைக் கட்டி எழுப்ப முயன்ற அரசுகள் பின்னர் கொம்யுனிசத்தின் பேரால் சர்வாதிகார ஆட்சியை நடத்தின. அந்தந்த நாடுகளில் ஜனநாயகம் மறுக்கப் பட்டது. ஏகாதிபத்தியத்திற்கு போட்டியாக இராணுவ பலத்தைக் கட்டி எழுப்பியதில் காட்டிய தீவிரத்தை விவசாயம் அபிவிருத்தி போன்றவற்றில் காட்டாதது சோசலிச நாடுகளில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியது.

இந்த இடத்தில் ஒரு முக்கியமாக வரலாற்று உண்மையை சுட்டிக் காட்ட வேண்டும். முன்னாள் சோவியத் யுனியனில் சோசலிசம் விழ்ச்சியுற்றபோது பிரிந்து சென்ற நாடுகளின் நிலை முன்னரை விட மோசமாகவே தற்போது உள்ளது..

ஆம் சோசலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவை சோசலிசத்தின் வழியாகத்தான் சரி செய்து கொள்ள முடியுமே தவிர முதலாளித்துவம் அதற்கு ஒரு போதும் ஈடாகாது.

தேசிய இனங்களின் விடுதலையை புறக்கணித்து சகட்டு மேனிக்கு முதலாளிய எதிர்ப்புப் பேசும் கொம்யுனிஸ்டுகளின் போக்குகள் தேசிய இன விடுதலையாளர்கள் அவர்களோடு கைகோர்ப்பதற்கு தடையாக உள்ளன.

தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு தங்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளை சரிசெய்து கொண்டு சோசலிசவாதிகளும் தேசிய இன விடுதலையாளர்களும் ஒன்று சேர்ந்து முன்னேறுவார்களானால் சென்ற நூற்றாண்டில் நடந்த ஒக்டோபர் புரட்சி போல் இந்த நூற்றாண்டிலும் ஒரு சோசலிசப் புரட்சி ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்ட இந்தப் புதிய ஜனநாயக சோசலிசம் உலகெங்கும் பூத்துக் குலுங்குவதற்கும் வாய்ப்பு உள்ளது.

MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

**We also Specialise in....**

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்
- House / Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா?
அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் -37

சென்ற முறை மட்டக்களப்பு மாந்திரீகத்தைப் பற்றி எழுதினேன் அது பற்றிய விபரங்களைத் தொடர் கிறேன். எங்கள் ஊரில் கந்தசாமியென்று ஒரு பூசாரி இருந்தார். அவர் கடும் மந்திரவாதியென்று எல்லோருக்கும் தெரியும். உடலெங்கும் மூன்று கோடிட்ட திரிபுண்டரம் எனப்படும் திருநீற்றுப் பூச்சோடு வேட்டியும், மேலாடையில்லாமல் ஒரு துண்டும் போட்டுக்கொண்டு திரிவார்.

மிகவும் சாந்தமானவர். எப்போதும் சிரித்த முகத்தோடு தான் இருப்பார். அவர் ஒரு சேட்டையோ அல்லது பெனியனையோ போட்டு நான் பார்த்ததில்லை. பளிச்சென்ற வெள்ளை உடம்பு. கோயில் ஐயர்மார் போலத்தான் இருப்பார். மரக்கறிதான் சாப்பிடுவாராம் என்று சொல்வார்கள்.

எங்கள் வீட்டிற்கும் பலதடவைகள் வந்திருக்கிறார். கோயில் விடயங்கள் பற்றி அம்மாவுடன் கதைப்பார். அப்பாவுக்கும் ஊர்க் கோயிலுக்கும் சம்பந்தமில்லை- அது எங்கள் தாய்வழிக் குடிக்கோயில். கோயிலுக்கான செலவுகளை மட்டும் குடும்பத்தலைவர்களின் உழைப்பிலிருந்து அவர்களின் மனைவிமார் மூலமாகப் பெற்றுக்கொள்வார்கள்.

கந்தசாமி மாமாவைக் கண்டால் அவரைச்சுற்றிக் குழந்தைகள் கூடுவார்கள். மந்திரம் செய்து காட்டுங்கள் என்று கேட்பார்கள். அவர் சிரித்துக்கொண்டு போய் விடுவார். ஒரு நாள் மட்டும் திடீரென்று கீழேகுனிந்து மண்ணையள்ளி இந்தா பூசு என்று தந்தார். அது திருநீறாக இருந்தது. இதில் எந்த அளவு மந்திரம் எந்த அளவு தந்திரம் என்று எனக்குத் தெரியவில்லை. அந்தச் சிறுவயதில் பெரிய பிரமிப்பாக இருந்தது. அப்பாவிடம் இதுபற்றிச் சொன்னபோது அவர் சிரித்துக்கொண்டு போய்விட்டார்.

அவருக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லை. ஆனால் அம்மாவோ அவர் செய்தது மந்திரவேலைதான் என்று சொன்னா. அதன்பிறகு அவரைப்பிடித்து அவர் செய்யும் மாஜிக் வேலைகளை நானும் பழகிவிடலாமென்று அவரைக் காணும் போதேல்லாம் எனக்கும் மந்திரம் சொல்லித்தாருங்கள் என்று கேட்பேன்.

ஆனால் அவரோ நீ சின்னப்பிள்ளை உனக்கு எதற்கு இதெல்லாம் என்று தட்டிக்கழித்துக்கொண்டே வந்தார். ஒரு தடவை மறுக்க முடியாமல், மந்திரத்தைப் படித்தால் மட்டும்போதாது அதனை சொற்பிழையில்லாமல் உச்சரித்து உருப் போடவேண்டும், பிழையாக உச்சரித்தால் பலிக்காது சிலவேளை சொல்பவருக்கே ஆபத்தாக முடியும், உன்னால் அப்படியெல்லாம் முடியுமா என்று என்னை எச்சரித்தார்.

நானும் என்னால் முடியும் என்று அடம்பிடித்துச் சில மந்திரங்களை அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன். காட்டில் போகும்போது கரடி கடிக்கவந்தால், யானை குறுக்கிட்டால் அல்லது வேறு மிருகங்களை எப்படி உறுக்கி அதட்டுவது, நம்மிடம் வழிப்பறி செய்யவருபவரை எப்படி மந்திரத்தால் செயலிழக்க வைப்பது என்றெல்லாம் பலவற்றைச் சொல்லித்தந்த ஞாபகம். ஒன்றையும் வாழ்க்கையில் பாவித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஆனால் ஒரேயொரு மந்திரத்தை மட்டும் ஒருதடவை பாவிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. மந்திரவாதி கந்தசாமி மாமாவின் வீட்டில் ஒரு வடிவான சிவலைப் பெட்டை. அதற்கு என்னைக் கண்டால் ஒரு சாதிச் செருமலும் கனைப்பும்.

நான் அவர் வீட்டுக்குப் போகும்போதெல்லாம். கடைக்கண்ணால் அதைப்பார்க்கத் தவறுவதில்லை. ஆளெங்கே நிற்கிறது, வீட்டிலா அல்லது வெளியே எங்காவது போய்விட்டதா என்று நோட்டம் விட்டபடிதான் போவது வழக்கம். அன்றும் அப்படித்தான் போனேன்.

ஏந்த மூலையில் ஒளிந்து கொண்டு நின்றதோ தெரியாது. நான் பதுங்கியதைக் கண்டுவிட்டது.

அதற்கு அது பிடிக்கவில்லை. ஓடி வந்தது. மாமா ஏற்கனவே வசிய மந்திரம் சொல்லித் தந்திருந்தார். ஆனால் அந்த நேரத்தில் அது வாய்க்கு வரவில்லை. எனக்குக் கையோ ஓடவில்லை. கால் மட்டும்தான் ஓடியது தெரியும். குதிகால் பிடரியிலடிபடப் பறந்தேன் போதுமடா சாமி மந்திரம் படித்ததென்று. பெட்டை கலைத்து வந்து பிடித்து விட்டது.

பிடித்தது சாறனைத்தான். நல்லகாலம் உள்ளே லங்கோட் போட்டிருந்தேன். ஊரில் சஸ்பெண்டரை லங்கோட் என்று தான் சொல்வது வழக்கம். பெட்டை இழுத்த இழுவையில் சாறன் இடுப்பிலிருந்து கழன்று விட்டது.

அதற்குள் கந்தசாமி மாமா எங்களைத் துரத்திக்கொண்டு வந்துவிட்டார். போடி அங்கால என்று பெட்டைக்கு ஒரு உதைவிட்டார். அவருடைய கட்டளையை ஏற்றாலும் என்னைப் பார்த்து ஆவேசத்தோடு நின்றது. எனக்கு மாமா வந்துவிட்டார் என்றதும் தைரியம் வந்தது. மந்திரமும் ஞாபகத்துக்கு வந்தது.

ஓம்! அலறிய வாயா! முறுகிய பல்லா!

ஆதி நரசிங்கத்தின் மீதாணை

அலகு திறவாதே சீ! தூ!

என்று ஓதி உறுக்கினேன். ஆனால் நான் சொன்ன மந்திரம் ஆண் நாய்க்குத்தான் வேலை செய்யுமாம். என்னைக் கலைத்துக் கடித்ததோ பெட்டை. அதோடு நான் கந்தசாமி மாமா வீட்டுப்பக்கம் தலை வைத்துப் படுக்கவேயில்லை.

ஏதோ அவரிடம் படித்த ஒரு சில மந்திரங்களுடன் காலத்தையோட்டினேன்.பிறகு கொழும்புக்கு ஒரு தடவை வந்தபோது மகேந்திரநாத் மாயாஜால வித்தைகள் என்றவொரு புத்தகத்தை அனியாயக் காசு கொடுத்து வாங்கி அதிலுள்ள ஜாலவித்தைகளைச் செய்யும் முறைகளைப் படித்தபோது அது வெறும் பேய்க்காட்டல் என்று விளங்கியது. மந்திர தந்திரங்களைப் பழக வேண்டுமென்ற ஆசை அதன்பிறகு போயே போய் விட்டது. எனது தந்தையார் இந்த மந்திரங்களில் அடியோடு நம்பிக்கையில்லாதவர்.

ஒரு தடவை அவருடைய துணிவை நான் கண்டேன். அப்போது நாங்கள் ஒரு வீடுகட்ட அத்திவாரம் போட்டு சுவர்களையும் எழுப்பியிருந்தோம். ஆனால் சிலருக்கு ஏனோ அது தொடர்பாக எங்கள்மீது கோபம். ஒரு நாள் நான் என் தந்தையாருடன் நாங்கள் கட்டிக்கொண்டிருந்த வீட்டுப்பக்கம் போனபோது கட்டடத்தினுள் யாரோ செய்வினை சூனியம் செய்து வைத்திருந்தார்கள்.

ஒரு இளநீர்க் காயைச் சீவி திருநீறு பூசி, ஒருசீப்பு வாழைப்பழத்தையும் சில வெற்றிலைகளையும் பாக்கையும் ஒரு வாழையிலையில் வைத்திருந்தார்கள். எனது தந்தையார் அவற்றைப் பார்த்துவிட்டுச் சிரித்தார். வாழைப் பழங்களை எடுத்து நன்றாக ஏதாவது நச்சு ஊசி குத்தியிருக்கிறதா என்று பார்த்துவிட்டு அவற்றைத் தானும் தின்று எனக்கும் தந்தார்.

இளநீர்க்காயை, கொண்டுவந்த கத்தியால் வெட்டி நீரை ஊற்றி விட்டு தேங்காயைத் தோண்டி எடுத்துத் தின்றோம். நான்தான் தலைமைப் பிசாசடா எனக்கு யாரடா சூனியம் வைக்கிறவன்? என்று அப்பா சற்றுச் சத்தம்போட்டு அயலவர் கேட்கச் சொன்னதாக ஞாபகம். எங்களை அந்தச் செய்வினை எதுவும் செய்யவில்லை. அப்பா எண்பத்தாறு வயது வரை வாழ்ந்து மறைந்தார். நான் இன்னும் சாகவில்லை.

*தொடருவம்*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## சர்க்கரை நோய்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

இந்த நோய் உள்ளதாக நிருபணமானவுடன் சம்பந்தப்பட்டவர் முதலில் பயந்துவிடுவார், பின்னர் மனம் தளர்ந்து போவார். சிலர் கோபமடைவதும் உண்டு. ஆனால் நோய் பற்றிய அறிவும், மனக்கட்டுப்பாடும் இருப்பின் இந்நோயை மட்டுப்படுத்தலாம்.

கட்டுப்படுத்தப்படாத சர்க்கரை நோய் விரைவில் உயிர் கொல்லியாக மாறலாம். சிறந்த மருத்துவர் நல்ல மருந்துகள் போன்றன இருப்பினும் பாதிக்கப்பட்டவர் சுயகட்டுப்பாடுடன் நடந்து கொள்ளாவிடின் எவ்வித பலனையும் தராது. இங்கிலாந்தில் சுமார் 1.5 மில்லியன் சர்க்கரை நோயாளர் உள்ளனர். மேலும் சுமார் ஒரு மில்லியன் மக்கள் தங்களுக்கு இந்நோய் உள்ளது என தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சர்க்கரை நோய் Type 1, Type 2 என இரண்டு வகையாகும். 90% வீதமான சர்க்கரை நோயாளர் Type 2 வகையினால் பாதிக்கப்பட்டவர்களாகும். சர்க்கரை நோயாளரின் சிகிச்சைக்காக NHS சுமார் இரண்டு பில்லியன் பவுண்களை ஒரு வருடத்துக்கு செலவிடுகின்றது.

சர்க்கரை நோய் வருவதற்கு அடிப்படை காரணிகள் நாளமில் சுரப்பிகளாகும் Endocrine Glands. முக்கியமாக Adrenal Glands , Thyroid Glands, Parathyroid Glands, Thymus Glands, Pituitary Glands, Testes / Ovarian Secretions, Pancteatic Secretion போன்றனவின் தொழிற்பாடு நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்நோய் ஆரம்பிக்க காரணமாகின்றன.

முக்கியமாக Pancreas சதயம் என்னும் உறுப்பில் சுரக்கும் இயல்புடைய கலங்கள் Cells கூட்டம் கூட்டமாக காணப்படும் Islets of Langerhans. இவற்றில் மூன்று வகையான கலங்கள் காணப்படும். அவையாவன

1. Alpha Cells - இதன் சுரப்பு Glucagon எனப்படும். இது குருதியில் உள்ள குளுக்கோஸ் அளவை அதிகரிக்கும்.

2. Beta Cells - இவை சுரக்கும் Insulin குருதியில் உள்ள குளுக்கோஸ் அளவை கட்டுப்படுத்தும்.

3. Delta Cells - இவை சுரக்கும் Somatostatin என்னும் பொருள் Alpha மற்றும் Beta கலங்களின் தொழிற்பாட்டை நெறிப்படுத்தும்.

மேலும் Liver ஈரல் எனப்படும் உறுப்பு, குருதியிலுள்ள மேலதிக குளுக்கோஸ் இனை Glycogen எனும் பொருளாக மாற்றி ஈரல், தசை போன்ற உறுப்புகளில் சேமித்து வைக்கும். எனவே குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவினை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பணியினை ஈரலும், சதையமும் நடாத்துகின்றன. அடுத்ததாக நீரழிவு நோய் எப்படி தோன்றுகிறது என பார்ப்போம். சதயத்தில் உள்ள Beta Cells சுரக்கும் Insulin மிககுறைவாகவோ அல்லது இல்லாமலோ போனால் உண்டாகும் நீரழிவு நோய் Type 1 எனப்படும்.

அடுத்ததாக போதியளவு Insulin இருந்தும் அதனை முறையாக பயன்படுத்த முடியாத ஒரு நிலை உடலுக்கு ஏற்பட்டால் அதனை Type 2 வகை எனப்படும். சிலசமயம் Insulin சுரக்கும் அளவு சிறிது குறைவடைவதாலும் இந்நோய் ஏற்படும். கருத்தரித்து இருக்கும்போது சில பெண்களுக்கு தோன்றும் நீரழிவு நோய் GDM -- Gestational Diabetes Mellitus எனப்படும். இது குழந்தை பிறந்த பின் குணப்படும். குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவு கட்டுப்படுத்தப்படாமல் அதிகரிக்கும்போது Glucotoxicity எனப்படும். பாதிக்கப்பட்டவர் களைப்பு அடைவதுடன், தாகம் அதிகரிக்கும். மேலும் அதிகளவு சிறுநீர் கழிக்கப்படும். குளிர்காய்ச்சல் போன்ற குணங்கள் தோன்றும். வயிற்றுகுமட்டல், வாந்தி போன்றன காணப்படும். இந்நிலை தொடரும்போது குருதியில் Glucose அதிகரித்து DKA –Diabetic Ketoacidosis அல்லது HONK – Hyperglycaemic Hyperosmolar non ketofic coma எனப்படும் நிலை ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து உண்டாகும்.

நீரழிவு நோயை கட்டுப்படுத்தல் : இதில் முக்கியமான காரியம் குருதியில் உள்ள குளுக்கோஸ் அளவினை மிக அதிகரிக்காமலோ அல்லது மிக குறைவடையாமலோ பார்த்துக் கொள்ளவேண்டும். அதிகரிப்போ, குறைவோ மிகமோசமாக உடலைப் பாதிக்கும். பல சமயங்களில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தலாம். இதன் தொடர்ச்சி அடுத்த கட்டுரையில்



Sri ShivaShankar Astrological Centre

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட விஜயகுமார் சாஸ்திரி அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்ஷணம், ஜாதகம், பிறப்பியல், நாமநஷ்த்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாகக் கணித்து வழங்குவார்.

Pandit Vijaykumar Shastry

You will come to know about your past, present & future by hand prediction,horoscope intending persons may contact for job, family matters, husband &wife relationship,love, Education,business, martiege,sickness,promotions,children problems, going abroad, money & any personal problem & removing all black magic and bad evil things Doing lakshmi Poojas,prayers and protections from enemies. (Spoken languages Hindi, English & Tamil)



Contact Mob: 07947779918

Himaliya shoping centre, 1st floor unit 14, 65-67 the Broadway, Southhall UB1 1LD

Opening Hours;10.30am-7.30pm 7 Days a week. E-Mail: vijayvarma9909@yahoo.com



# மூக்கு கண்ணாடி

சிறு வயசுல பள்ளிக் கூடத்துல ஆறாங் கிளாஸ் படிக்கையில என்னோட வகுப்பில இருந்த நல்லா படிக்கிற புள்ளைங்க எல்லாரும் கண்ணாடி போட்டிருந்தாங்க. அதனாலயே நமக்கும் அது பேர்ல ஒரு காதல் வந்திட்டது. கண்ணாடி போட்டா நலலா படிப்பு வரும் அப்படினு எனக்கு ஒரு எண்ணம். என்ன போட்டாலும் எனக்கு படிப்பு வராதுங்கிறது அப்புறம் சில வருஷம் கழித்து புரிந்து கொண்டது வேற கதை.

வீட்ல போய் எனக்கு கண்ணாடி வாங்கித் தான்னு சொன்னா ஒண்ணும் எடுபடாதுன்னு எனக்குத் தெரியும். அதனால மெள்ள ஒரு மாஸ்டர் ப்ளான் போட்டேன். போர்டுல டீச்சர் எழுதறது எதுவும் சரியா தெரியலைனு மெல்ல மெல்ல பிட்டை போட்டு பில்டப் பண்ண ஆரமிச்சேன். அப்புறம் என் புடுங்கல் தாங்க மாட்டாம அப்பா என்னை ஒரு கண் டாக்டர் கிட்ட கூட்டிப் போனார். நமக்கு புதுசா இன்னொரு பயம வேற வந்திட்டது. ஒரு வேளை டாக்டருக்கு உண்மை தெரிஞ்சிட்டா என்னாகும் நம்ம நிலை அப்படினு ஒரு கவலை வேற. சரி இருந்தாலும் சமாளிப்போம்னு மனசுல ஒரு தைரியத்தை வரவழைச்சிகிட்டு போய் உக்காந்தேன். அங்க ஒரு நர்சம்மா என் கண்ணுல விளக்கெண்ணை மாதிரி ஒரு ஐட்டத்தைக் கொட்டிட்டு 2 மணி நேரம் கழிச்சு தான் கண்ணை டெஸ்ட் பண்ண முடியும். அதுவரை கண்ணை திறக்கக் கூடாதுனு உத்தரவு போட்டுட்டு போய்ட்டாங்க. நமக்கா உலக மகா எரிச்சல். அப்போதான் எனக்கு ஒண்ணுக்கு, ரெண்டுக்கு, பசி எல்லாம் ஒண்ணா சேர்ந்து வந்தது. ஒரு வழியா ரெண்டு மணி நேராம் போனப்புறம் டாக்டர் என்னைக் கூப்பிட்டு கண்ணை நல்ல கழுவிட்டு ஒரு போர்டில் உள்ள எழுத்துக்களை காமிச்சி படிக்கச் சொன்னார். எல்லாத்தையும் சரியா படிச்சா நம்ம குட்டு உடைஞ்சிடுமேன்னு சின்ன எழுத்தை எல்லாம் கொஞ்சம் கஷ்டப் பட்டு படிக்கிற மாதிரி என்னால முடிஞ்ச வரை ஆக்ட் குடுத்தேன். ஒரு வேளை தேவர் மகன் சிவாஜி மாதிரி நடிச்சிருந்தால் பிரச்சினை வந்திருக்காது ஆன ால் அப்ப தேவர் மகன் படம் ரிலீஸ் ஆகலையே! அதன ால வியட்நரம் வீடு பிரஸ்டஜ் பத்மநாபன் ரேஞ்சில நடிச்சித் தொலைச்சிட்டேன். அந்த டாக்டர் வேற வேற கண்ணாடியை எடுத்து என் ஃப்ரேமில் சொருகி இப்ப படி இப்ப படின்னு என் உயிரை வாங்கினார்.

எங்க தப்பு பண்ணினேன்னு எனக்குத் தெரியலை அந்த பாழாய் போன டாக்டருக்கு சந்தேகம் வந்திருச்சி. அப்புறம் கடைசியா ஒரு முறை ஃப்ரேமில் வேறு எதோ ஒரு கண்ணாடியை போட்டு இப்ப படின்னு சொன்ன போது ரொம்ப அற்புதமா எல்லாத்தையும் படிச்சித் தொலைச்சிட்டேன். அப்புறமாத்தான் ஃபிரேமில் விரலை விட்டுப் பார்த்தால் அதில் கண்ணாடியே இல்லை! ஆகா கவுத்துட்டாங்களே அப்படின்னு நினைச்சிகிட்டே எங்கப்பாவை பார்த்தா அவரும் பழைய ஈஸ்ட்மென் கலர் தமிழ் படத்தில் எம்.ஜி.யாரை முறைக்கிற நம்பியார் போல என்னை முறைச்சுப் பார்த்துகிட்டிருந்தார். சரிடி இன்னிக்கு உனக்கு டின்னு தான் போ அப்படின்னு நினைச்சிகிட்டே விட்டுக்குப் போய்..... ஹ்ம்ம் அந்தக் கதையெல்லாம் இங்கன சொன்னா மிச்சமிருக்கிற மானமும் போய்டும் மக்கா.

*- மதுசூதனன்*

## குழம்பில் புளி ஊற்றுவது எதுக்கு?

புளிப்பு சுவை என்ற வெளிப்படையான விடை ஒரு புறம் இருக்க, புளி சேர்ப்பதால் என்ன வேதியியல் மாற்றம் நடக்கிறது என்று பார்க்கலாம்.

தூய்மையான தண்ணீரில் அமிலத் தன்மையும் காரத்தன்மையும் சமநிலையில் இருக்கும். உயிரின ங்கள் வாழ்ந்து தழைக்க இந்த சமச் சூழல் தேவை. புளியில் அமிலத் தன்மை இருக்கிறது. புளி சேர்த்தக் குழம்பில் அமிலக் காரச் சமநிலை மாறி, அமிலத் தன்மை மிஞ்சி விடும். இதனால் உணவுப் பொருளில் வளர்ந்து பெருகி குழம்பைக் கெட்டுப் போக வைக்கக் கூடிய நுண்ணுயிரிகளின் செயல்பாடு குறைந்து குழம்பு அதிகமான நேரம் கெட்டுப் போகாமல் இருக்கும்.

குளிர் சாதனப் பெட்டிகள் இல்லாத காலங்களில் செய்த உணவை முடிந்த வரை கெட்டுப் போகாமல் காத்துக் கொள்ள இந்த புளி சேர்ப்பது பயன்பட்டது. சமைத்த மீதத்தை ஆறியதும் குளிரப் பெட்டியில் வைத்துக் கொள்ளும் வசதி இருக்கும் போது இந்தக் காரணம் அடிபட்டுப் போகிறது.

அடுத்த கேள்வி:

சாப்பிடும் போது குளிர்ந்த நீர் குடிக்கலாமா?

*- மா. சிவகுமார்*

# பிச்சைக்காரனிடம் பிச்சை

என் மனைவின் பிறந்த நாள் என்பதால் சிவன் கோவிலுக்கு அழைத்து வந்திருந்தேன். குறுகிய சந்தில் காரை நிறுத்தினேன். என் மனைவி காலை துலாவிக் கொண்டிருந்தாள்.

"என்ன பண்றே நீ" என்றேன்

செருப்பை வண்டியில் விட்டுட்டு வரேன். ஏன் தண்டத்துக்கு 50 காசு கொடுக்கனும்.

ஐயோ.. சரி எக்கேடு கெட்டாவது போ. சீக்கிரம் வா. மழையால ரோடு சகதியாக இருக்கு. கேட்டாத்தானே..

ஏங்க பொறந்த நாளைக்கும் என்னை திட்டறீங்க என்று சலித்துக் கொண்டாள்.

செருப்பை நான் செருப்பு ஸ்டாண்டில் விட்டு டோக்கன் வாங்கிக் கொண்டேன்.

சரி சரி வா என்று அவளை அழைத்தவாறே உள்ளே நுழைந்தோம். நல்ல தரிசனம், இலவச தரிசனம். கூட்டம் அதிகம் இல்லை. இறைவனை பார்க்க வரும் இடத்திலும் தொந்தரவு இல்லாமல் இருந்தது மனதிற்கு இதமாக இருந்தது.

மகிழ்ச்சியுடன் வெளியே வரும்போது எதிர்பட்டான் சோனி.அவனை பார்த்தும் கண்டுக் கொள்ளாமல் மேல் தொடர்ந்தேன் நடையை. அவன் நிறுத்தி கை நீட்டினான். இரண்டு ரூபாய் சில்லறையாக எடுத்து நீட்டினேன். இரண்டு ரூபா தானா ? இலவச தரிசனம் காசு மிச்சமாச்சுல்லே. போடு என்றான் மிகவும் உரிமையுடன்.

அடப்பாவி நாங்க இலவசம் தரிசனம் செய்த வரையில் நோட் பண்ணி வைத்திருக்கிறானே என்று சொல்லிக் கொண்டேன் மனதில்.

என் மனைவி பிச்சைகாரனிட மெல்லாம் சகவாசமா? என்பது போல் பார்த்தாள். சரியென்று 5 ரூபாய் எடுத்து நீட்டிவிட்டு விலகினேன். நில்லு என்ற ான். என்ன என்று கேட்டேன். அவன் பையிலிருந்து பத்து 50 காசுகளை எடுத்து நீட்டினான். எதுக்கு என்று கேட்டேன்.

உன் வீட்டுக்காரி 50 காசை மிச்சப்படுத்த செருப்பை காரில் விட்டுட்டு வந்துட்டாளே. இதை வச்சிகிட்டு அடுத்த பத்து தடவைக்காவது செருப்பு ஸ்டாண்டில் செருப்பை போட்டுட்டு போ. சுட்டெரிக்கும் பார்வையில் அவனை முறைத்தேன்.

முறைக்காதே. பிச்சைகாரனுக்கு இரண்டு ரூபாய் போடறே. அங்க ஸ்டாண்டு வச்சி பொழைப்பை பண்றவனுக்கு 50 காசு போட மாட்டேங்கறே.

பிச்சைகாரனிடம் பிச்சை வாங்கும் அளவிற்கு வைத்துவிட்டாளே என்று என் மனைவியை பார்வையால் நொறுக்கி தள்ளிக் கொண்டே அவசரமாக அங்கிருந்து அகன்றேன்.

*- லியோ மோகன்*




# குழந்தை நலக் குறிப்புகள்



### நோய்த்தடுப்பு

தற்போதைய காலகட்டத்தில் ஒரு குழந்தை பிறந்துவிட்டது என்றால் அவ்வீட்டில் ஒரு 'மினி மெடிக்கல் ஷாப்' உருவாகிவிடுகிறது என்றே கூறலாம். காய்ச்சல், சளி, வயிற்றுவலி ஆகியவைகளுக்கு மருந்து கொடுப்பது போன்றே ஒவ்வொரு காலகட்டத்திலும் பலவிதமான நோய்த் தடுப்பூசிகள் குழந்தைகளுக்குத் தருதலும் பெற்றோரின் இன்றியமையாத கடமையாகும். குழந்தை பிறந்தது முதல் மூன்று ஆண்டுகள் வரை நோயிலிருந்து பாதுகாத்து எடுப்பதே பெற்றோர்களுக்கு சிரமம் ஆகிவிடுகிறது. சற்று அசாதாரணமாக கவனிக்காமல் இருந்துவிட்டால் சில சமயங்களில் விளைவுகள் விபரீதமாகவும் நடந்துவிடுகிறது. குழந்தைகள் ஆரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு பல மருத்துவர்கள் தரும் ஆலோசனைகளை பெற்றோர் செயல்படுதல் மிகஅவசியம். குறிப்பாக குழந்தைகளுக்குத் தரப்படும் தடுப்பூசிகளில் கவனம் கொள்வது மிகவும் அவசியம்.

### காசநோய் மற்றும் போலியோ

குழந்தை பிறந்த இருவாரங்களுக்குள் காசநோய் தடுப்பு மருந்தைக் கொடுக்கவேண்டும். போலியோ சொட்டு மருந்தை பிறந்ததும் ஒருமுறை, ஆறு, பத்து மற்றும் பதினான்காவது வார இறுதியில் ஒவ்வொரு முறை, ஒன்றரை வயதில் ஒருமுறை, நான்கரை வயதில் ஒருமுறை என்றாக முறையே இந்தத் தடுப்பு மருந்தை அளிக்க வேண்டும். பெரியம்மை நோய்க்கு அடுத்ததாக உலகிலிருந்தே ஒழிக்கப்படவேண்டிய நோய் என்று உலக சுகாதார நிறுவனம் தேர்ந்தெடுத்திருப்பது போலியோவைத்தான்.

### முத்தடுப்பு ஊசி

டிப்தீரியா, கக்குவான் இருமல், டெடனஸ் ஆகிய மூன்று கடுமையான நோய்களைத் தடுக்கிறது. இதையும் ஐந்து முறை அளிக்கவேண்டும். 6, 10, 14 ஆவது வாரங்களின் இறுதியில் ஒவ்வொரு முறையும், 18 மாதம் முடியும்போது ஒரு முறையும் ஐந்து வயதை நிறைவு செய்யும்போது ஒருமுறையுமாக அளிக்கவேண்டும்.

### ஹெபடிடிஸ் 'பி'

எய்ட்ஸைவிட அதிகம் பேர் இறப்பது ஹெபடிடிஸ் 'பி' எனப்படும் மஞ்சள் காமாலை நோய்ப் பிரிவில்தானாம். நல்லவேளையாக இதற்கு தடுப்பூசி கண்டுபிடித்து விட்டார்கள். குழந்தைக்கு எவ்வளவு வயதாக இருந்தாலும் இந்தத் தடுப்பு மருந்தை அளிக்கலாம். முதல் டோஸ் அளிக்கப்பட்ட அடுத்த மாதத்தில் இரண்டாவது டோஸும், முதல் டோஸ் அளித்த ஆறாவது மாதம் மூன்றாம் டோஸையும் கொடுக்க வேண்டும். ஹெபடிடிஸ் 'ஏ' விற்கும் இப்போது தடுப்பு மருந்து வந்துவிட்டது. ஒரு வயதில் ஒருமுறையும், பிறகு ஒன்றரை வயதில் அடுத்த முறையும் இதற்கான தடுப்பு மருந்து அளிக்கலாம்.

### தட்டம்மை மற்றும் எம்.எம்.ஆர்

குழந்தைக்கு ஒன்பது மாதங்கள் ஆனபிறகு தட்டம்மைக்கான நோய்த்தடுப்பு மருந்தையும், ஒன்றே கால் வயதானபிறகு எம்.எம்.ஆர். எனும் தடுப்பு மருந்தையும் அளிக்கவேண்டும். இரு வருடங்களுக்குப் பிறகு டைபாய்டுக்கான தடுப்பு மருந்தையும் பத்து மற்றும் பதினாறு வருடங்களின் முடிவில் டி.டி. (டெடனஸ்) நோய்க்கெதிரான தடுப்பு மருந்தையும் அளிக்கலாம்.

### முன்னெச்சரிக்கை

தடுப்பு மருந்தை அளிப்பதற்கு முன் உங்கள் பரம்பரையில் யாருக்காவது வலிப்புநோய் வந்திருந்தால் அதை டாக்டரிடம் மறக்காமல் கூறுங்கள். அதே போல் வயிற்றுப்போக்கு, அதிக ஜுரம் போன்றவை குழந்தைக்கு அப்போது இருந்தால் அதையும் மறக்காமல் மருத்துவரிடம் தெரிவியுங்கள். அப்போது ஒருவேளை டாக்டர் இந்தத் தடுப்பு மருந்தை அளிப்பதை தள்ளிப்போடலாம். காரணம், சிலவகை தடுப்பு மருந்துகளுக்கு பக்கவிளைவுகள் உண்டு.

*குழந்தைகளின் சின்னச் சின்ன உடல் அசௌகரியங்களுக்கு வீட்டிலேயே சில நிவாரணிகள்.*

### தலைக்குள் நீர் கோர்த்துக் கொள்ளுதல்

நீலகிரி தைலம் எனப்படும் யூகலிப்டஸ் எண்ணெயின் ஆவி பயனளிக்கும். மிகவும் சிறிய குழந்தை என்றால் தலையணையைச் சுற்றி யூகலிப்டஸ் எண்ணெய் நனைக்கப்பட்ட துணி உருண்டைகளை வைக்கலாம்.

### காய்ச்சல்

க்ரோசின், ப்ரூஃபென் போன்ற மாத்திரைகளை நாடுவதற்குமுன் நீரினால் ஸ்பொஞ்ச் பாத் கொடுங்கள். நேரடியாக ஐஸ் தண்ணீரில் உடலை ஒத்தியெடுக்கக் கூடாது. குளிரால் நடுக்கம் வந்துவிடலாம். சாதாரணமான தண்ணீரில் ஈரத்துணியை நனைத்து உடலைத் துடைக்க வேண்டும். டர்க்கி டவலாக இருந்தால் மேலும் நல்லது. முக்கியமாகப் பெரிய ரத்தக்குழாய்கள் உள்ள அக்குள் மற்றும் தொடை இடுக்குப் பகுதிகளில் நன்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும். பதினைந்து முறையாவது இப்படிச் செய்ய வேண்டும்.

### தசைப்பிடிப்புகளும் சுளுக்கும்

விரல்களால் அந்தப் பகுதியை அழுத்தி நீவுவது, எண்ணெயைக் கொதிக்க வைத்து அந்தப் பகுதியில் ஒத்தடம் கொடுப்பது என்பதெல்லாம் விஷயத்தைச் சிக்கலாக்கிவிடும். ஐஸ் கட்டியை ஒரு துணியில் சுற்றி அந்தப் பகுதியில் ஒத்தி ஒத்தியெடுங்கள். பெரும்பாலும் சரியாகிவிடும். (ஐஸ் கட்டியை நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதியில் வைக்கவேண்டாம்).

### விஷப்பூச்சிக்கடி

டாக்டரிடம் குழந்தையை எடுத்துச் செல்லுங்கள். ஆனால் அதற்குமுன் கடிவாய்ப் பகுதியை பலமுறை சோப்புத் தண்ணீரால் நன்கு கழுவிவிடுங்கள். இது அவசியமான முதலுதவி.

### கீழே விழுந்து அடி

பஞ்சு மற்றும் பாண்டேஜ் துணி ஆகியவற்றால் மட்டும் அந்தப் பகுதியை அழுத்திக் கட்டினால்போதும். பெரிய காயம் என்றால் மருத்துவ உதவி தேவை. (மஞ்சள் பொடி, சர்க்கரை, காபி பொடி என்று அப்புவது வேண்டாம்.)

*- மாலிக் கான்*

# வேகமான சிந்தனை!



ஓய்வுக்காக காட்டுக்குச் சென்றபோது தனது செல்ல நாயையும் அழைத்துப் போனார் ஒரு அரசர். அவர் வேட்டையில் மும்முரமாக இருக்க, அங்குமிங்குமாக பாய்ந்துபாய்ந்து காட்டின் வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திக் கொண்டிருந்தது நாய். பல நிமிடங்களுக்குப் பிறகுதான் தான் வழியைத் தவறவிட்டுவிட்டதை உணர்ந்தது.

அப்போது சற்று தூரத்தில் புலி ஒன்று வருவதைக் கண்டது நாய். அது தன்னை வேட்டையாடத்தான் வருகிறது என்பதையும் உணர்ந்தது. தப்பிப்பது எப்படி என்று எண்ணியபோது எதிரில் சில எலும்புத் துண்டுகளைக் கண்டது. சட்டென ஒரு காரியம் செய்தது அந்த நாய் . புலிக்கு முதுகு காட்டியவண்ணம் எலும்புத் துண்டுகளின் முன் அமர்ந்தது.

புலி அருகில் வந்தவுடன் "ஆஹா... புலியின் மாமிசம் எவ்வளவு சுவை! இன்னும் ஒரு புலி கிடைத்தால் நன்றாக இருக்குமே" என்றது நாக்கைச் சுழற்றியபடியே அதனைக் கேட்ட புலிக்குக் கிலி பிடித்து, 'நல்ல வேளை இந்த மிருகத்திடமிருந்து தப்பினோம்' என்றெண்ணி மெதுவாகப் பதுங்கிப் பின் வாங்கியது.

இந்த சம்பவத்தை மரத்தின் மேலமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த குரங்கு ஒன்று, நாயைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் புலியிடமிருந்து தனக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்ளலாம் என்றெண்ணி, புலி சென்ற திசையை நோக்கி விரைந்தது. அதனைப் பார்த்த நாய் ஏதோ விவகாரம் எனப் புரிந்து கொண்டதோடு இனி புலியிடமிருந்து ஓடித் தப்பமுடியாது என்பதையும் உணர்ந்து கொண்டது.

குரங்கு புலியிடம் நாயின் தந்திரத்தைக் கூறியதும் கோபம் கொண்ட புலி, என்னுடன் வந்து அந்த நாய் என்ன பாடு படுகிறது என்பதைப் பார் என்று உறுமிவிட்டு குரங்கினைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு நாய் இருந்த இடம் நோக்கி விரைந்தது.

குரங்கும் புலியும் சேர்ந்து வருவதைக் கண்ட நாய், பழைய இடத்தில் அமர்ந்த படியே அவற்றைப் பார்க்காதது போல பாசாங்கு செய்து 'இன்னொரு புலியைக் கொண்டு வருவதாகச் சொன்ன குரங்கை இன்னும் காணோமே!' என்றது சத்தமாக... பின் என்ன நடந்திருக்கும் என்று சொல்லத் தேவை இல்லையே...

*-வேகமான சிந்தனை வாழ்க்கையில் எவ்வளவு முக்கியம் என்பதனை விளக்கும் 'குயிக் திங்கிங் ஆன் யுவர் ஃபீட்' என்ற புத்தகத்திலிருந்து.*

## கல்லூரிக் குரல்

அறிவை மேலும் மேலும் கூர்மையாக்கும் கருவி அரியர்.

"அரியர் வைத்தோர் அறிவுடையார் அறிவிலார்

ஆல் கிளியர் செய்பவர்"

"அரியர் வைத்து வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

வோக் - இங் சென்றே சாவார்"

*- படிப்பவரைக் கண்டால் வயிறெறிபவர் சங்கம் .*

"இதுக்கும் ஆரும் போய் காசு வாங்குவானா?"
(கேட்டாலும் தரவா போறியள்?)

இது முற்றிலும் இலவசமான சேவை

www.orudirectory.com

# புலம்பெயர்பவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

சாந்தி: ஏன்தான் இப்படி நீ ஒருவரின் சொல்லையும் கேட்கமால் திரிகின்றாயோ தெரியவில்லை. உனது சகோதரர்கள் எவ்வளவு காசு கட்டி உங்களை இங்கே எடுத்தவர்கள். அந்த நன்றிக் கடனுக்காக என்றாலும் நீ அவர்களை அனுசரித்துப் போக ஏலாதோ?

வதனி: ஓஓம் அவை என்னைக் காசு கட்டிக் கூப்பிட்டவை தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் கூப்பிட்டதோடு தங்கள் கடமை முடிந்து விட்டது என்று நினைத்து விட்டார்கள். அதுதான் அவர்கள் செய்த தவறு.

சாந்தி: இப்ப சொல்லுவாய். நீங்கள் இலங்கையில் இருக்கும்போது அவர்கள் தங்களுக்கு என்று எதையும் சேர்க்கமால் உங்களுக்காக தங்கள் சுக தூக்கங்களை மறந்து டபிள் வேலை செய்து எல்லோ கூப்பிட்டவை.

வதனி: சரி கூப்பிட்டவை தான். கூப்பிட்ட பின் என்ன செய்தார்கள்? ஒரு நாள் என்றாலும் பாசமாக கதைத்திருப்பார்களா? எதற்கு எடுத்தாலும் எரிந்து விழுவது தான். என்ன கேட்டாலும எதாவது ஒரு சாக்கு சொல்லி அதை மறுப்பது. இப்படி இவர்கள் செய்கையில் எனக்கு எப்படி இவர்களில் அன்பு வரும்?

புலம்பெயர்ந்து வாழும் அநேகமான இளம் சமுதாயம் இப்படியான உரையாடல்களைக் கேட்டுச் சலித்து இருப்பார்கள்.

பெற்றோரைப் பிரிந்து உடன்பிறந்தவரையோ அல்லது மாமா அன்ரி முறையானவர்களையோ நம்பி இங்கு வருகின்றார்கள். வந்தவுடன் கூப்பிட்டவரின் கடனைத் திருப்பி கொடுக்க வேண்டும். தாயகத்தில் இவர்களை நம்பி இருக்கும் உறவுகளுக்கு குடும்ப செலவிற்குப் பணம் அனுப்ப வேண்டும். அதற்குள் மொழி படிக்க வேண்டும். கோர்ட் கேஸ் என்று திரியவேணும். எல்லாவற்றையும் விட இங்கு உள்ள காலாசாரத்தையும் பழகவேண்டும்.

இப்படி அங்கும் இல்லாமால் இங்கும் இல்லாமால் இடையில் நின்று தத்தளிக்கும் பல பாவப்பட்ட உள்ளங்களை பற்றி கொஞ்சம் விரிவாக பார்ப்போம்.

இவர்களின் புலம்பெயர்வுக்கு காரணங்கள் உங்களிற்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 12 வயதுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகள் பெற்றோரை விட்டுப் பிரிந்திருப்பது அவ்வளவு சுலபமான காரியமில்லை. அவர்கள் வளர வளரத்தான் பெற்றோர்கள் குறிப்பாக தாயின் அரவணைப்பு கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

அப்படியிருந்தும் தங்களின் குடும்பம் முன்னேற வேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் துறந்து வெளிநாடு என்று புதிய சொர்க்கபுரி தேசத்திற்கு செல்வதற்கு ஆயத்தப்படுத்துகின்றார்கள். அந்த வெளிநாடு என்ற சொர்க்கபுரி எப்படிப்பட்டது என்பது அந்த அந்த நாட்டு விமானநிலையத்தில் காலடி எடுத்து வைத்தவுடன் தான் அவர்களுக்கு விளங்கின்றது.

இப்படி தனிமையில் வருகின்றவர்கள் கட்டாயம் வேறு ஒருவரின் தயவில்த்தான் தங்கி வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. அநேகமானோர் தாய் வழி சித்தி மாமா, அல்லது தந்தை வழி சித்தப்பா சித்தி என்று இரண்டாம் முறை உறவுகளை நம்பித்தான் வருகின்றார்கள்.

வந்து இறங்கியவுடன் இவர்களுக்காகவே ஒரு சொப்பிங் காத்திருக்கும். உடனே ஜக்கற் பான்ஸ் சோர்ட் சேர்ட்ஸ் என்று உடுப்பில் மாற்றங்கள் வந்து விடும். வெளிநாட்டுக்கு வந்தவுடன் இங்கு பாடசாலைக்கு உடனே போக முடியாது முதலில் லோயர்மார்களிடம்தான் அடிக்கடி போய் வரவேண்டும். பின்னார் அந்த வீட்டில் இருப்பவர்கள் வேலைக்கு போகத்தொடங்க சமையல் இவர்கள் தலையில் வந்து விழும்.

சிறிது காலத்தின் பின்னர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு கொண்டு போய் விட அல்லது கூட்டி வரப் பழக வேண்டும். அப்புறம் சின்ன சின்னதாக சொப்பிங் போய் வரவேண்டும். அப்படியே வீட்டு வேலைகள் எல்லாம் கைமாறிவிடும்.

**பெற்றோரை உறவினரை நண்பர்களை பிறந்த மண்ணைப் பிரிந்திருப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை.**

அதற்குள் உறவுகள் யாரவது வேலை செய்யும் இடங்களில் இவர்களுக்கு சிறு வேலை வாங்கிக் கொடுத்து விடுவார்கள். ஏனென்றால் கொடுத்த கடனை வாங்க வேணும் அல்லவா?.

இவ்வளவு விடயங்களும் நடைபெறும்போது அந்தக் குறிப்பிட்ட நபரை கேட்டோ அல்லது ஆராய்ந்தோ எவ்வித முடிவும் எடுக்கப்படுவதில்லை என்பது மிகவும் கவலைக்குரியவிடயம்.

பெற்றோரை சகோதரங்களை நெருங்கிப் பழகிய நண்பர்களை எல்லாவற்றிற்கும் மேலாக பிறந்த மண்ணணை விட்டுப் பிரிந்திருப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை.

இவ்வாறு அனைத்தையும் ஒரே நாளில் தொலைத்துவிட்டு வருபவர்களின் மன நிலையை வெளிநாட்டுக்கு அழைப்பவர்கள் புரிய வேண்டும். இங்கு இப்படித்தான் எல்லோருக்கும் இப்படியான வாழ்வு தான் என்று தமக்குத் தாமே ஆறுதல் சொல்வது போன்று மற்றவர்களுக்கும் சொல்வது முட்டாள்த்தனம்.

இப்படியான அன்பை இழந்த பணத்தை மட்டுமே குறியாகக் கொண்ட உறவுகளுடன் வாழ்பவர்களின் மனநிலை எப்படி இருக்கும். அவர்களை எதனை நோக்கி இட்டுச் செல்லும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இளைஞர்கள் மதுவிற்கும் போதைப் பழக்கத்திற்கும் அடிமையாவதற்கும் கூடாத நண்பர்களுடன் சேர்ந்து சீரழிந்து போவதற்கும் இதுவும் ஒர காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

மறுபக்கத்தில் புகலிட நாடுகளுக்கு அழைத்தவர்களால் மட்டுமல்ல, அழைக்கப் பட்டவர்களாலும் பிரச்சினைகள் அதிகம்.

ஒருவரை தாயகத்திலிருந்து வெளிநாடொன்றிற்க்கு பெற்றோர் அனுப்புவது குறிப்பிட்ட நபரை, அல்லது அழைப்பவர்களின் மீதான நம்பிக்கையிலே. இதனால் வருபவரை நற்பிரஜையாக்கும் கடமையும், பொறுப்பும் அவர்களுக்குரியதாகின்றது.

ஆரம்பத்தில் அவர்களின் வழிநடத்தலின் கீழ் ஒழுங்காக இருக்கும் சில இளைஞர் யுவதிகள் காலப் போக்கில் வெளியே சிலருடனான நட்புக்களால் அந்தக் கட்டுப்பாடுகளை மீறி தம்பாட்டில் நடக்க முற்படுவதால் அவர்களுக்கும் அழைத்தவர்களுக்குமிடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

ஆகவே இவ்விடையத்தில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதை விடுத்து, தத்தமது பிழைகளைத் தாமாகவே திருத்த முற்பட வேண்டும். தவறுகள் விடுவது மனித இயல்பு என்ற வகையில், தவறு செய்தவர்கள் தங்கள் பிழைகளை உணர்ந்து தங்களை தாங்களே திருத்திக் கொள்ள வேண்டும்.

- ரமா


உங்களுக்கு வீட்டு உரிமையாளருடன் அல்லது வீட்டுக் கடன் கொடுத்தவருடன் பிரச்சனையா?
அவர்களுக்கு எதிராக வழக்காடு மன்றம் செல்ல நினைக்கிறீர்களா?
அல்லது உங்களுக்கு எதரிராக தீர்ப்பு உள்ளதா?

AMEN SOLICITORS
4 Amen Corner, Tooting, London SW17 9JE Tel: 020 8682 7720



அவற்றைத் தீர்ப்பதற்கு விரைவான, தகுதியான் சேவையினை வழங்குகிறோம்
நியாயமான கட்டணம் | விரைவான பதில்
அனுபவமிக்க நட்பான பணியாளர்கள் | தனிப்பட்ட சந்திப்பு

புதன்கிழமைகளில் மாலை 3மணிக்கும் 5மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இலவச ஆலோசனை கொடுக்கப்படும் 020 8682 7720 என்னும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு முன்னொழுங்கு செய்து கொள்ளவும்....

Please call **Amen Solicitors** on **020 8682 7720** for appointment

Initial Consultation is free and free advice is also available on Wednesday between 3-5 by appointment

CIVIL LITIGATION & HOUSING MATTERS

Are you thinking of taking a civil action or has a civil action been taken against you?

Are you in a housing dispute with your landlord or lender?

*We can help you with*
Conveyancing | Debt Advice | Landlord and Tenant | Housing Benefit over payment | Nursing Home Charges | Contract Dispute | Service Charges Arrears | Rent Arrears | Defending Civil Claim | Bankruptcy Proceeding Charging Order Application | Magistrate Court Fines | County Court Action



*We also specialise in*
Employment
Licencing Applications
Negotiating claims to settle
Disrepair claims
Antisocial Behaviour
Breach of Tenancy Agreement
Noise Nuisance
Works in default claim appeal
Homeless Appeal
Injuctions
Commercial Dispute and Rent Arrears
Judicial Review

Amen housing and litigation team provides a highly structured and efficient approach to achieve a successful stress - free conclusion to your matters. Whether you are claiming or defending a claim which will be dealt with promptly and professionally by our experience team of lawyers

# சுஜாதா என்கிற சில்லறை...

வயசாகிவிட்டால் புத்தி மங்கிப் போய்விடும் என்று சொல்வார்கள். அது போன்று சொல்வது தவறு என்று சுஜாதா நிரூபிக்கிறார். வயசான பிற்பாடுதான் இவர் புத்தி மழுங்கி இப்படி எழுதுகிறார் என்று யாரேனும் எண்ணினால் அதை பொய்யென்று சொல்லி நாங்கெல்லாம் எழுதத் துவங்கிய காலத்தில் இருந்தே வக்கிரமாக எழுதி வருகிறோம் என்கிறார்.

அதுவும் குறிப்பாக வெகு சனங்களின் பொதுப் புத்தியில் இருக்கும் கசடுகளை ஊக்குவித்து வியாபாரம் செய்பவர்களில் இது போன்ற கழிசடைகள் வெகு திறமையானவர்களாக இருக்கிறார்கள்.

ஆணாதிக்கம் என்பது இயல்பாக ஒவ்வொரு நடவடிக்கைகளிலும், சொற்களிலும் வெளிப்படுகிறது. இன்றைக்கு பெண்களின் சம உரிமை குறித்து பேசும் யுகத்தில் இருக்கும் நாம் ஆணாதிக்க வக்கிரங்களை நமது நடைமுறையிலிருந்து நீக்குவதே சரியாக இருக்கும்.

அல்லது குறைந்த பட்சம் பொதுவில் நிலவுகின்ற ஆணாதிக்க வக்கிரங்களை ஊக்குவிப்பதோ அல்லது அது ' நியாயமானது, அதுதான் பொதுவாக நிலவும் பண்பாடு என்று சொல்வதோ போன்ற சீர்குலைவு நடவடிக்கைகளாவது நிறுத்திக் கொள்வதே சரி.

சுஜாதாவோ தமது கல்லாவை நிரப்பிக் கொள்வதற்கு பொதுப் புத்தியில் படிந்த இந்த பலவீனங்களை பயன்படுத்திக் கொள்கிறார். இவரின் கழிசடைத்தனம் கொஞ்சம் நாகரிகமான கழிசடைத்தனமாக இருப்பது இன்னும் வீரியமான சமூக விரோத சக்தியாக இவரை மாற்றி விடுகிறது.

## பார்ப்பனர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு நாம் சாதி ரீதியாக அணி திரள வேண்டும் என்று சாதி சங்க தலைவனைப் போலப் பேசியவர் எழுத்தாளர் சுஜாதா.

வாரமலர் கிசு கிசு போன்ற படித்த நடுத்தர வர்க்கம் அருவெறுப்போடு ஒதுக்கும் தரத்திலில்லாமல் கொஞ்சம் உயர்ந்த ப்ளேபாய் தரத்தில் எழுதுவதற்காக மட்டுமே இவர் போன்றவர்களுக்கு இலக்கிய வாசிப்பனுபவங்கள் உதவுகின்றன.

இது தவிர்த்து சிலமேட்டுக்குடித்தனங்களை நியாயப்படுத்தும் தர்க்கங்களையும் வெகு நைச்சியாக தமது எழுத்தின் ஊடாக வாசகனின் மூளைக்குள் செலுத்தும் திறமைக்காகவும் இவர்களின் இலக்கிய வாசிப்பனுபவம் கை கொடுக்கிறது.

இவர் பெண்களை இழிவுபடுத்தி எழுதுவதற்கு இவரது கணேஷ் வசந்த் கதாபாத்திரங்களே சாட்சி.

தண்ணீர் கொட்டிய சேலையுடன் கண்ணீர் சிந்தி விம்மி விம்மி விசனப்படும் அபலை பெண்ணை எப்படி ரசிப்பது என்று இவரது வசந்த் நமக்கு சொல்லித் தருகிறார். இது ஒரு சாம்பிள் மட்டுமே.

படிக்கும் வாசகனுக்குள் ஜேம்ஸ்பாண்டுகளும், ஆங்கிலப் பட டேம்செல் இன் டிஸ்டெரஸ் (Damsel in Distress) எபெக்டும் தமிழ் மொழியிலேயே கிடைத்து விடுகிறது. இழிவான சிந்தனைவயப்பட்டோமே என்ற குற்றவுணர்வுக்கு ஆட்படும் தேவையும் இல்லாமல் இவரது எழுத்து நடை செய்து விடுகிறது.

இவரது வக்கிரத்திற்க்கு கீழே இன்னொரு சான்று உள்ளது படித்து பாருங்கள்:

விக்ரம் படம் வெளிவருவதற்கு முன் அதைக் குமுதம் இதழில் தொடராக எழுதிவந்தார் சுஜாதா. அதில் கணேஷ் இன்னொரு பெண்ணிடம் பேசும் வசனம்.

'ஆணும் பெண்ணும் சமமெல்லாம் கிடையாது. நாங்களெல்லாம் நின்னுக்கிட்டே சுவரில் மூத்திரம் அடிப்போம்'

இந்த மூத்திர வசனத்திற்கு சுஜாதாவிற்கு எந்த இடத்தில் டைனமட் வைப்பது என்று பெண்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று கோபப்பட்டு எழுதுகிறார் சுகுணா திவாகர் என்ற எழுத்தாளர்.

இவரது அறிவுஜீவித்தனத்தின் இன்னொரு முக்கிய அம்சம் அடிக்கடி புரியாத ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்பு வார்த்தைகளை போட்டு எழுதும் இவரது பாணி.

இதில் மயங்கித்தான் நடுத்தர வர்க்க வாசகர்கள் இவரைப் போன்ற அரைகுறைகளின் வார்த்தைகளிலிருந்து தமது உலக அறிவை வளர்த்துக் கொள்ள முயல்கிறார்கள்.

இப்படி ஒரு பகுத்தறிவற்ற அறியாமையின் பாற்ப்பட்ட வாசகன் - எழுத்தாளன் உறவினுடைய ஆபத்தின் ஒரு அம்சம்தான் அவரது சமூக விரோத, ஆணாதிக்கம் உள்ளிட்ட பிற வக்கிரமான எழுத்துகள் வாசகனிடம் ஏற்படுத்தும் விளைவு.

சரி, சுஜாதா ஒரு இந்துத்துவ ஆதராவாளரா என்று கேள்வி எழுப்பினால் பதில் ஆம் என்றே கிடைக்கிறது. அது மட்டுமல்ல அவரது இந்துத்துவா ஆதரவிற்கு பின்னணியில் அவரது சொந்த சாதி பெருமை நிற்பதும் சாதாரண வாசகனால் சீரணிக்க இயலாத பேருண்மையாக நிற்க்கிறது.

இவர் பார்ப்பன சாதி சங்க மாநாட்டில் கலந்து கொண்டு பார்ப்பனர்கள் தமது உரிமைக்காக போராட வேண்டும் என்று ஆனந்த விகடன் பத்திரிக்கையிலேயே வெளிப்படையாக தனது சாதி வெறியை எழுதினார்.

பார்ப்பனர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு நாம் சாதி ரீதியாக அணி திரள வேண்டும் என்று சாதி சங்க தலைவனைப் போல பேசினார் இந்த எழுத்தாளர். இவர்தான் தமிழகத்து நடுத்தர வர்க்க வாசகர்களுக்கு ஆதர்சமான எழுத்தாளர்.

இவரது ஆணாதிக்கக் கண்ணோட்டத்துடன், நிற வெறியும், சாதி வெறியும் சேர்ந்தால் என்னவாக வெளிப்படும்?

சொந்த சாதிவெறிக் கொழுப்பெடுத்த சுஜாதா தனது இனவெறியை 'சிவாஜி' படத்தில் சாலமன் பாப்பையா எனும் பட்டிமன்ற வியாபாரி மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். கன்னங்கரேல் எனும் நிறம் பூசிய தனது இரண்டு பெண்களிடமும் ரஜினியை 'பழகிப்பாருங்கள்' எனச் சொல்லும் தந்தையாக வருகிறார் சாலமன் பாப்பையா.

இப்பெண்களின் கறுப்பைக் கண்டு ஓடிவிடுகிறார் ரஜினி. தமிழர்களின் இயல்பான நிறமான கறுப்பை நிற ரீதியில் இழிவுபடுத்தி இருக்கும் சுஜாதா இப்பெண்களுக்கு வைத்திருக்கும் பெயரோ அங்கவை, சங்கவை. பாரியின் மகளிர் பெயரைச் சூடிய இவரின் புத்திக்குள் இருப்பது என்ன? தமிழைப் பழி தீர்க்கும் புத்திதானே!

தமிழுக்கும், பெண் குலத்துக்கும் இவ்வாறு இலக்கியத் தொண்டு செய்து கொண்டிருக்கும் - இரண்டு முறை இதய வலிப்புக்கு ஆட்பட்டிருக்கும் சுஜாதா எனும் எழுத்தாளரை எல்லாரும் பாராட்டி விட வேண்டும் எனும் ஆர்வத்தில் நாம் உள்ளோம். செருப்போ விளக்குமாறோ அன்பர்களே அது உங்கள் சாய்ஸ்...

*நன்றி: www.poar-parai.blogspot.com*

# இங்கிலாந்துச் செய்திகள்

### தரம் உயர்ந்த கமாராக்களைத் தலையில் அணியும் பொலிசார்.

உள்நாட்டு அலுவலகம் மேலதிகமாக 3 மில்லியன் பவுண்களை, தரம் உயர்ந்த தலையில் அணியும் கமராக்களின் கொள்முதலுக்காகச் செலவிட உள்ளது. இத்தகைய ஒரு சாதனத்தை தலையில் அணிந்து பரிசோதனைக்காக நடாத்தப்பட்ட குற்றவியல் விசாரணைகளில் காணப்பட்ட அனுகூலங்கள் காரணமாக இப்புதிய ஒழுங்குமுறையை அமுல்படுத்த உள்ளார்கள்.

காவற்துறை அலுவலர் ஒருவர் கமரா அணிந்து குற்றவியல் விசாரணையை மேற்கொள்ளும்போது, அங்கு எல்லாமே பதிவுக்கு உள்ளாகிறது. இதனால் விசாரணை மேற்கொள்பவர் பணி இலகுவாகின்றது. அதே சமயம் குற்றம் புரிந்தவர் உண்மைத் தடயங்களைத் திரித்து நீதிமன்ற விசாரணையின்போது யூரிமாரை திசைதிருப்புதல் மிகவும் கடுமையான செயலாகிறது. விசாரணை நேரம் குறைகிறது. எழுத்து வேலை குறைகிறது. குற்றம் புரிந்தவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வீதமும் கூடுகிறது.

### சட்டப்படியான தகைமை நிச்சயப்படுத்தப்படல் அவசியம்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு சட்டவிரோதப் பணிக்கு எதிரான நடவடிக்கையை முன்னகர்த்தத் தொடங்கி விட்டது. ஒருவரை வேலைக்கு அமர்த்துபவர், அமர்த்தப்படுபவர் சட்டப்படி இங்கு வேலைசெய்ய தகுதியானவர் என்பதையும் அவருக்கு எவ்வித குடிவரவுக் கட்டுப்பாடும் இல்லை என்பதையும் நிச்சயப்படுத்தவேண்டும். இது சம்பந்தமான தகவல்களைத் தரக்கூடிய இணையத்தளம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவற் தளத்தில், புதிதாக வேலைக்கு அமர்த்தப்படுபவர்களை எவ்வாறு சரிபார்க்கவேண்டும், பணிபுரியும் தகைமைக்கு சட்டப்படியான தேவைகள் போன்றவற்றுடன் பொதுவாக வேலைக்கு அமர்த்துபவர் மனதில் எழக்கூடிய ஐம்பதுக்கும் மேற்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பிரத்தியேக 0845 010 6677 என்ற தொலைபேசி வசதிகூட ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சட்டவிரோத வேலைக்கெதிரான செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக அமையும் இப் புதிய நடவடிக்கைகள் அநேகமாக அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைமுறைக்கு வரும். புதிய நடவடிக்கைகளின் பிரகாரம், மோசடி நோக்குடன் வேலைவழங்குவோர் சிறைத் தண்டனை அல்லது வரையறையற்ற அபராதம் அல்லது இரண்டையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். வேலை ஆட்களின் விபரங்களை சரிபாரப்பதில் அலட்சியமாக இருக்கும் நிறுவனங்களுக்கு எதிராக குடியியல் அபராதமும் அறவிடப்படும்.

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

ஜூலை 21 சனி:

மாலை 5 மணி - இரவு 10 மணி வரை: ஹென்டன் தமிழ்ப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இடம்: Canons High School. Shaldon Road, Edgware, Middlesex HA8 6AN

ஜூலை 29 ஞாயிறு:

மாலை 4 மணிக்கு விருது வழங்கலும், குறும்பட இறுவெட்டு வெளியீடும். ஈழவர் திரைக்கலை மன்றத்தின் 2006, 2007ம் ஆண்டுகளிற்கான விருது வழங்கும் நிகழ்ச்சி. அனுமதி: இலவசம். இடம்: Brent Town Hall (Com. Rooms) Forty Lane, Wembley, Middx HA9 9HD

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர






## விழா விபரம்

**20.07.2007முதல் தினமும் காலை மாலை இந் நேரங்களின் படி கிரியைகள் நடைபெறும்.**

| காலை | |
|---|---|
| 8.30 | அபிஷேகம் |
| 10.15 | பூசை |
| 10.45 | ஸ்தம்பபூசை |
| 11.30 | வசந்த மண்டப பூசை |
| 1.00 | விபூதிப்பிரசாதம் வழங்கல் |

| மாலை | |
|---|---|
| 5.30 | பூசை |
| 6.00 | ஸ்தம்பபூசை |
| 6.30 | முதல் 7.15 பிரசங்கம் பஜனை |
| 7.15 | வசந்தமண்டப பூசை |
| 8.00 | சுவாமி எழுந்தருளல் |
| 9.25 | விபூதிப்பிரசாதம் வழங்கல் |
| 10.30 | விழாப்பூர்த்தி |

01ம் நாள் — 20.07.2007 (வெள்ளி) கொடியேற்றம் காட்சி
02ம் நாள் — 21.07.2007 (சனி) ராஜ ராஜேஸ்வரி அருட் காட்சி
03ம் நாள் — 22.07.2007 (ஞாயிறு) கனக தாரா லட்சுமி அருட் காட்சி
04ம் நாள் — 23.07.2007 (திங்கள்) நாகபூசணி அருட் காட்சி
05ம் நாள் — 24.07.2007 (செவ்வாய்) மீனாட்சிஅம்பாள் அருட் காட்சி
06ம் நாள் — 25.07.2007 (புதன்) சரஸ்வதி வித்யா அருட் காட்சி
07ம் நாள் — 26.07.2007 (வியாழன்) அந்த நரசிம்ம அருட் காட்சி
08ம் நாள் — 27.07.2007 (வெள்ளி) கைலாய தரிசன அருட் காட்சி
09ம் நாள் — 28.07.2007 (சனி) அன்ன பூரணாம்பிகை அருட் காட்சி
10ம் நாள் — 29.07.2007 (ஞாயிறு) அபிராமி தரிசனஅருட் காட்சி
11ம் நாள் — 30.07.2007 (திங்கள்) சொக்கநாதப்பெருமான் அருட் காட்சி
12ம் நாள் — 31.07.2007 (செவ்வாய்) காமாட்சி அருட் காட்சி
13ம் நாள் — 01.08.2007 (புதன்) அனந்த சயன அருட் காட்சி
14ம் நாள் — 02.08.2007 (வியாழன்) புஷ்பகவிமான அருட் காட்சி
15ம் நாள் — 03.08.2007 (வெள்ளி) கேதார கௌரி அம்பாள் அருட் காட்சி
16ம் நாள் — 04.08.2007 (சனி) வசந்தோற்சவ அருட் காட்சி
17ம் நாள் — 05.08.2007 (ஞாயிறு) பக்தானுக்கிரக அருட் காட்சி
18ம் நாள் — 06.08.2007 (திங்கள்) சந்தானலக்ஷ்மி அருட் காட்சி
19ம் நாள் — 07.08.2007 (செவ்வாய்) ஜோதி மண்டல அருட் காட்சி
20ம் நாள் — 08.08.2007 (புதன்) ஓம் கார ரூப தர்சன அருட் காட்சி
21ம் நாள் — 09.08.2007 (வியாழன்) மகாதுர்க்காதர்சன அருட் காட்சி
22ம் நாள் — 10.08.2007 (வெள்ளி) வேட்டைத் திருவிழா அருட் காட்சி
23ம் நாள் — 11.08.2007 (சனி) சகோரா தர்சன அருட் காட்சி (சப்பரம்)
24ம் நாள் — 12.08.2007 (ஞாயிறு) இரதோற்சவ விழா (தேர்)
25ம் நாள் — 13.08.2007 (திங்கள்) தீர்த்த வாரி அருட் காட்சி
26ம் நாள் — 14.08.2007 (செவ்வாய்) சங்காபிஷேகம் — சகஸ்திர (1008) பூர்ணாவாகத் திருவிழா.
27ம் நாள் — 15.08.2007 (புதன்) வைரவர் மடை.

*அம்பிகை அடியார்களே!*

*லண்டன் மாநகரில் ஈலிங்பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனக துர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான சர்வஜித்து வருடம் ஆடி மாதம் 04ம் நாள் (20.07.2007) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.*

*எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அகிலமெல்லாம் வாழும் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் தலமாக ஈலிங் பதியமர்ந்து மனம் பக்குவமடைவதற்கு சாதனமாக திகழ்கின்றாள்.*

*திருத்தலங்களில் நித்யம், நைமித்திகபூஜையாக இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவது மகோற்சவங்கள். அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்கு கொண்டு தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.*

*பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக.*

*அனைவரும் வருக!! அன்னையின் அருள் பெறுக!!*

*இங்ஙனம்*
*விழா உபயகாரர்களுடன்*
*திருவாகசபையினரும் அறங்காவலரும்.*

## கோயிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## ஸ்ரீ கனக துர்க்காவின் அறிவுச் சுடர் 2007

**உயர் கல்வித் திட்டம்**

இலங்கையின் வடக்கு கிழக்கு மலையகம் ஆகிய பகுதிகளில் ஆற்றலிருந்தும் உயர் கல்வி பெறும் வாய்ப்பு இன்றி அவதியுறும் மாணவர்களுக்கு உதவிக் கரம் கொடுக்கும் பணியில் அனைவரும் பங்கு கொள்ளுங்கள். அதற்கான ரிக்கற்றினை ஆலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**"அறிவுச் சுடர்" 2006** ஆண்டின் மூலம் 20,000 பவுண்கள் திரட்டப்பட்டு அதனூடாகக் கிட்டத் தட்ட 400 மாணவர்கள் பலன் பெறுகின்றனர்.

காக்கும் கரங்கள் திட்டத்திற்காக £97,000 தையல் பயிற்சி கணணிப் பயிற்சி நிலையங்கள், ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்காக £59,000 கடந்த ஓராண்டில் (2006 -2007) £176,000 தாயகத்தைச் சென்றடைந்துள்ளது.

• அறிவுச் சுடர் 2007 உங்கள் கரங்களில் அதன் பூரண வெற்றிக்கு நாம் ஒன்று சேர்ந்து உழைப்போம்.

• தேர்த் திருவிழா (12.08.2007) தினத்தன்று அர்ச்சனைச் தட்டுக்கள் மூலம் பெறப்படும் நிதி தாயகத்தின் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படவுள்ளது. உங்கள் ஆதரவு வேண்டப்படுகிறது.







ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அணைப்போம்!
அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!
அவர்களுக்கு படிப்பறிவித்து இருளகற்றுவோம்!
அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்!
அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்!

# ஊரின் வாசம் ஆடி அமாவாசை

ப.வை. ஜெயபாலன்
(ஒரு பேப்பருக்காக)

'தீர்த்தக் கரைமாதிரிச் சனம்' இது அந்தக் காலத்தில் தாயகத்தில் வழக்கத்தில் இருந்த ஒரு உவமை வாக்கியம். ஆடிஅமாவாசை இந்துக்களுக்கு ஒரு முக்கிய சமய நாள். இறந்த தாய் தந்தையர்க்கு பிதிர்க்கடன் செலுத்தும் நாள்.ஆண்டு தோறும் கீரிமலைக் கடற் கரையில் கூடும் கூட்டம் எண்ணில் அடங்காது.

அதிகாலை முதல் காலை வரை சனத்திரள் அலை அலையாகக் கூடும். மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய தீர்த்த உற்சவம் அன்றயதினம்கீரிமலைக் கடற்கரையில் நடப்பதுவும் இதன் இன்னொரு சிறப்பு.

இங்கு உள்ளது போல் அன்னயர் தினம் தந்தயர்தினம் அங்கு அன்றய காலக் கட்டத்தில் தேவைப் படவில்லை. உள்வீட்டில் எழும் பிரச்சனைகளை சமாளித்துக் கொண்டு பேரன், பேர்த்திகளை பராமரிக்க உதவியாக தாய் தந்தையர்கள் இறுதிக் காலம் வரை பிள்ளைகளோடு வாழ்வார்கள். வருகிற மருமகனிடம் முன் எச்சரிக்கையாக இருப்பதற்கு மருமகனுக்கு சீதனம் எழுதும் போது நிந்தம் காட்டி உறுதி எழுத யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம் இடம் தந்திருந்தது.

சீதனம் வழங்கிய பின்பு இறக்கம் வரை வீட்டில் இருக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தது அந்த நிந்தம் காட்டி உறுதி எழுதும் முறை. இவற்றிற்கும் மேலாக கைதடி வயோதிபர் மடத்தில் வயோதிபத்தை கழிக்க வேண்டிய பெற்றோரும் ஆங்காங்கு இருக்கத்தான் செய்தார்கள்.

ஆக மொத்தம் ஈமைக் கடனை சிறப்பாகச் செய்வதும் எட்டு, அந்தியேட்டி, மாளையம் ஆண்டுத்திவசம் என்று பெற்றோரின் ஆத்ம ஈடேற்றத்துக்காக செய்வதும் ஆண்டுக்கு ஆண்டு இறந்த திதிக்கு திவசம் செய்வதோடு ஆடி அமாவாசை அன்று தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தம் ஆடி எள்ளும் தண்ணீரும் இறைப்பதுவம் வழக்கத்தில் இன்றும் இருக்கின்றது.

புலம் பெயர் நாட்டிலும் ஆடி அமாவாசைத் திதிக்கு கோயில்களில் கூட்டம்கூடும். பிதிர்க்கடன் நடக்கும். அடுத்த சந்ததி ஆடிஅமாவாசை பற்றி இங்கு நினை க்குமா என்பது கேள்விக் குறிதான்.

தாயகத்தில் வடபுலத்தில் ஆடி அமாவாசையின் வருகைக்கு கட்டியம் கூறும் நிகழ்வு மாவிட்டபுரம் கந்தசாமியார் கோயில் கொடியேற்றம். வருடாந்த உற்சவத்தின் நிறைவு தீர்த்தத்தித் ஆடி அமாவாசை தினத்தில் அமையும். காங்கேசந்துறைக் கடற்கரை இராணுவ அக்கிரமிப்புக்கு உட்பட்ட 1990 ஆம் ஆண்டு வரை பிரசித்தி பெற்றதேர்த் திருவிழாக்களில் மாவைகந்தன் உற்சவம் முக்கியமானது.

கொடி ஏற்றம் வருமுன்பே மாவிட்டபுரத்தை ஒட்டிய வலிவடக்கு கிராமங்களில் எல்லாம் விரதக் களை சொட்ட ஆரம்பித்து விடும். வீடுகளை கழுவிச் சுத்தம் செய்து மச்சச்சட்டிகளை வீட்டுக்கோடிக்குள் கவிழ்த்து வைத்து முற்றத்துக்கு தினம் தினம் சாணகம் தெளித்து சுத்தம் பேணுவார்கள்.

வீட்டுக்குள் சாம்புறாணி மணம் கமழும். கோயிலுக்கு தோய்த்து உலர்ந்த உடை அணிய வேண்டும் என்பதால் அந்த விரத காலங்களில் தோய்த்து உலரவிட்ட வேட்டி, சேலை, பாவாடைகள் அடிக்கடி வெயிலில் உலரவிட்டு கிணற்றடிக் கொடியில் தொங்கும். மீன்காரனின் கோண் சத்தம் விரதகாலங்களில் வீதியில் ஒலிக்காது. கள்ளுக் கடைகளிலும் களவாக சாராயம் விற்கும் மூலைக்கடைகளிலும் கூட சனசந்தடி இருக்காது. அவ்வளவு பயபக்தி.

கொடிக் கம்பப் பூசை பார்க்க நடந்தும், சைக்கிலிலும்,பஸ்சிலும் கூட்டம் பக்தி மயமானது. வேட்டி சால்வையோடு மேற்சட்டை இடாத ஆண்கள்,சேலை, தாவணி எனப் பெண்கள்தீட்சை வைத்த திருநீற்றுக் கோலத்தோடு செல்வார்கள்.

தேர் தீர்த்தத் திருவிழாக்களுக்கு அயற் பாடசாலைகள் விடுமுறை வழங்குவது வழமை. வன்னி உட்பட அயற் பிரதேசங்களில் இருந்தும் விசேட பஸ் சேவைகள் மூலம் சனம் நாலாபக்கத்தாலும் மாவிட்டபுரத்தில் திரளும்.வீதிகளில் காவடி, பிரதிட்சை, என்பன ஊர்வலமாக தூர இடங்களில் இருந்தும் வரும். மாவைகந்தன் வெளி வீதியில் ஐந்து தோடகளில் சுவாமி உலாவரும்.

வெளிவீதிகள் எல்லாமே மணிக்கடைகள், மணிலாக் கடைகள்,பொம்மைக் கடைகள் நிரை நிரையாக அமைந்திருக்கும். வெளி வீதி மறு ஓரங்களில் பாயில் கால்நீட்டி அமர்ந்து கடலை கொறிக்கும் குடும்பங்கள், ஐஸ்பழவான்கள்,ஒலிபெருக்கியில் காணாமல் போண குழந்தைகள் பற்றிய அறிவிப்புக்கள், தும்புமிட்டாய் விற்பனையாளரின் மணிச்சத்தம், பொலீஸ், சாரணர்களின் நடமாட்டம், இந்த சந்தடிகளுக்குள் வீதியை வட்டமிடும் இளம் ஜோடி என்றவாறாக அன்றய தோதிருவிழா நடப்புக்கள்.

தேர்த்திருவிழா நிறைவில் பச்சை சாத்தி திருநடனத்தோடு பூமழை சொரிய தவில் நாதஸ்வர பஜனை ஒலிகளோடு சுவாமி இருப்பிடம் திரும்புவதும் பின் இரவோடு இரவாக தீர்த்தமாட கீரிமலைக்கு தச்சன் காட்டு வீதி வழியாகச் செல்வதும் வழமை.

அதிகாலையிலேயே கீரிமலைக் கடற்கரை பக்தர்களால் நிறையும். இரவு இரவாக கடற்கரையில் கலை நிகழ்ச்சிகள் நடப்பதுவும் உண்டு. சுவாமி தீர்த்தமாடும் நிகழ்வை அடுத்து பக்தர்கள் தீர்த்தமாட ஆரம்பிப்பார்கள்.

கடற் கரையில் ஆங்காங்கே புரோகிதம் பண்ணும் ஐயர்மார். அவர்களைச் சுற்றி எந்த நேரமும் எள்ளுந்தண்ணியும் இறைத்து பிதிர்க்கடன் தீர்க்கும் கூட்டம். தாலிக்கொடி அறுப்பு, உடைமைகள் களவுபோதல் என்பனவும் வழமை நிகழ்வுகள்.

கேணியடியில் இருந்து சிவன் கோயில் வரை சனத்திரள் போவதும் வருவதுவுமாக இருக்கும். பணங் குட்டான், மரக்கறி, கடலைக் கடைகள், பொம்மை, மணிக்கடைகள் தொடராக அமைந்திருக்கும். பிச்சைக் காரரும் நீள்வரிசையில் இருப்பார்கள்.

காத்தோடிக்காய் விற்பனை அமாவாசை தீர்த்தத்தில் ஒரு அம்சம். பிதிர்க்கடன் செய்த விரதகாரர் காத்தோடிக்காயும் சேர்த்து சமைத்து உண்பதென்பது காரணம் தெரியாத வழமை.

ஆடி அமாவாசைத்தீர்த்தம் மரபுவழி ஊறிவிட்ட ஒரு சம்பிரதாயம். சைவசமயத்தோர் வழிவழி தொடரும் ஒரு நம்பிக்கை. எல்லாவற்றுக்கும் மேலாக பெற்ற தந்தையரை நினைவு படுத்தி நன்றி கூறும் ஒரு மதச்சடங்கு. ஏனைய திருநாட்களைப் போல மறைந்த தந்தையர் தினமாக இது எம்மிடையே தொடர்வது நல்லதுதானே?

# பூமி சரியாக 365 நாட்கள் 6 மணி நேரத்தில் சூரியனைச் சுற்றுகிறதா?





பூமி முன்நூற்றி அறுபத்து ஐந்தேகால் நாட்களில் சூரியனைச் சுற்றுகிறது என்றும் இதனால் ஒரு கலண்டர் அல்லது அயன ஆண்டில் 365 நாட்கள் என்றும் மிகுதி கால் நாள் நான்கையும் ஒன்றாகக் கூட்டி நாலாண்டிற்கு ஒரு முறை 366 நாட்கள் கொண்ட லீப் ஆண்டு வருகிறதென்றும் காலம் காலமாக கணித்து வருகிறோம்.

அது எப்படி சரியாக முன்நூற்றி அறுபத்து ஐந்தேகால் நாட்களில், அதாவது சில விநாடிகள் என்றாலும் கூடியோ அல்லது குறைந்தோ போகாது துல்லியமாக எங்கள் கணக்குளை எளிமையாக்கும் வகையிற் புவி சுற்றுகிறது என்று எப்போதாவது சிந்தித்து இருக்கின்றோமா?

உண்மையிற் பூமி முன்நூற்றி அறுபத்து ஐந்தேகால் நாட்களுக்கு 674 வினாடிகள் அல்லது 11 நிமிடங்கள் 14 விநாடிகள் குறைவாக உள்ள காலத்திலேயே சூரியனைச் சுற்றுகிறது.

ஒரு ஆண்டில் 11 நிமிடங்களும் 14 விநாடிகளும் ஒரு தாக்கத்தை ஏற்ப டுத்த வல்ல காலம் இல்லைத்தான். இந்த 674 விநாடிகளை நாளாக மாற்று வோமானால் அதுகிட்டத்தட்ட .0075 நாளாகிறது. இது இவ்வளவு சிறு அளவா னாலும் நானூறு ஆண்டுகளில் (400 தர .0075) மூன்று நாட்கள் ஆகிறது.

ஆதனால் இதையும் ஒரு சீருக்குக் கொண்டு வந்துள்ளார்கள். 400 ஆண்டுகளில் லீப் ஆண்டாகக் கணிக்கவேண்டிய மூன்று ஆண்டுகளைச் சாதாரண ஆண்டுகளாக அறிவித்துள்ளார்கள். கடைசியாக இரு சைடர்களில் முடிந்த 2000மாம் ஆண்டு லீப் ஆண்டு. அடுத்து இரு சைபர்களில் முடியும் 2100, 2200, 2300, 2400 ஆகிய நான்கு ஆண்டுகளையும் அவதானிப்போமானால் அவை நான்குமே நான்கால் மிச்சமின்றிப் பிரிக்கப்படத் தக்கவை. ஆதனால் லீப் ஆண்டாகும் தகைமை பெற்றவை.

எமக்கு இங்கு கணக்கைச் சரி செய்ய மூன்று லீப் ஆண்டுகளை வெட்டவேண்டி உள்ளதே. அதனால் இந்த நான்கிலும் 2400க்கு மட்டும் லீப் தகைமையைக் கொடுத்து மற்றைய மூன்றையும் சாதாரண ஆண்டுகளாக அறிவித்துள்ளார்கள். ஆகையால் 2400ல் வாழ்பவர்தான் அடுத்த இரு சைபரில் முடியும் லீப் ஆண்டைக் காண முடியும்.

- மாசிலாமணி

## இது எப்படி இருக்கு?

மரணப் படுக்கையில் இருந்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல்

கணவன் : நான் செத்தால் நீ பக்கத்து வீட்டுக் கந்தசாமியைக் கலியாணம் முடிக்க வேணும்

மனைவி : அவன் தான் உங்கடை பரம எதிரியாச்சே.

கணவன் : அதாலை தான் சொல்லுறன். அவனைப் பழிவாங்க எனக்கு இதை விட வேறை வழி தெரியேல்லை

மனைவி : ???

BIRAVENAAS
South Indian & Sri Lankan Restaurant and Bar

Open Daily:
Monday-Thursday
12pm to 11.30pm

Friday to Sunday
12pm to 12pm

Free Delivery*

சிறிய வைபவங்களுக்கு ஏற்ற 40 இருக்கைகள் கொண்ட வசதிகளுடன் கூடிய உணவகம்.. குடும்பத்துடன் வந்து சுடச்சுட உணவுகளைச் சுவைத்து மகிழுங்கள்.....

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
Buffet on Saturday & Sunday for £5.50
10% Discount for all Take Away
25 பவுண்க்கு மேல் வாங்கினால் 1 Wine Bottle Free



Tel: 020 8695 8625
* Orders over £12 within 3 miles 6-10pm
1 Sandhurst Market, Sandhurst Road, Catford, London SE6 1DL

# KINGSTONS SOLICITORS

***நீங்கள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இங்கிலாந்தில் வசிப்பவராயின், குடிவரவு புதிய சட்ட ஏற்பாடுகளின் கீழ் விசா பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமா?***

**அப்படியாயின் தற்போதைய சூழ்நிலையில் சில வழி உண்டு.**
**உடன் தொடர்பு கொள்ளுங்கள்:**

- உங்கள் உறவினர் வெளிநாட்டிலோ அல்லது
- இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்கு கல்வி கற்பதற்க்கு வரவேண்டுமா?
- உங்களுக்கு இங்கிலாந்தில் Work Permit பெறவேண்டுமா? அல்லது
- உங்கள் குடும்பத்தினரை விடுமுறையில் அழைக்க வேண்டுமா? மற்றும்
- உங்களைத் தடுப்புக்காவலில் வைத்து இலங்கைக்கு அனுப்புவதற்க்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றதா? அல்லது
- அனுப்பப்படுவீர்களென அச்சப்படுகறீர்களா?

**சகலவற்றுக்கும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் 24 மணிநேர சேவை வழங்கப்படும்.**



Contact:
**Chrishanthi Vincent**
LLB (Hons) London.

251A HAYDONS ROAD
WIMBLEDON
LONDON SW19 8TY
Tel: **020 8540 0468**
Fax: **020 8540 7504**

**எங்கள் நேர்மையான நம்பிக்கையான சேவையை விரும்பிய வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பலர் இருக்கின்றனர்.**

# அக்கரைப் பச்சை

(33ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு நாட்களுக்குள் செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. ஊரே சோகத்தில் மூழ்கி விட்டது போலிருந்தது. மக்களெல்லாம் எங்கள் வீட்டிற்குப் படையெடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

'யுத்த சீரழிவுக்குள்ளையும் பசிபட்டினிக்குள்ளையும் நோய்நொடிக்குள்ளையும் கிடந்து சீரழியிற எங்களை நீங்கள் தான் கடவுள் மாதிரிக் காப்பாற்றினீங்கள். .. . . நீங்களும் எங்களைக் கைவிட்டிட்டுப் போனா நாங்கள் என்ன செய்வம்?...'

கெஞ்சியவர்களின் கண்களில் பனித்த கண்ணீர்த்துளிகளுக்கு நான் என்ன பதிலைத்தான் சொல்ல முடியும்?

'ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ? நான் போனால் இன்னொரு புது டொக்டர் வருவார்தானே?'

அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக இப்படிச் சொன்னாலும் என்னைப் போலவே பலரும் தென்னிலங்கையை நாடிச் செல்லும் நிலையில் புது வைத்தியர் வருவது முயற்கொம்பு என்பதும் நானறியாததல்ல.

ஆக மொத்தத்தில் என்னுடைய பயணம் ஊரில் ஒருவருக்குமே பிடிக்கவில்லை. என்னையும் ரவியையும் தவிர. அவன் பக்கத்துக் கிராமத்தில் வைத்தியராகப் பணிபுரிபவன். என்னைப் தொடர்ந்து தலைநகரம் வரக் காத்திருப்பவன் எனக்குச் 'சப்போர்ட்' பண்ணித் தானே ஆக வேண்டும்.

அப்பாடா! என்னுடைய ஆசைக்கனவுகளும் கற்பனைகளும் நனவாகும் அந்த நாளும் வந்துவிட்டது. என்னுடைய தலைநகரப் பயணம் ஆரம்பித்து விட்டது. அந்த நாட்களில் அப்பா வவுனியாவில் வேலை செய்து விட்டு காலையில் புறப்பட்டு பகல் சாப்பாட்டிற்கு வீட்டில் நிற்பார். ஆனால் நான் வவுனியா வந்தடைவதற்கு முழுதாக இரண்டு நாட்கள் பிடித்தன.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அடையாள அட்டை தன்னுடைய முக்கியத்துவத்தை நினைத்துப் பெருமைப் பட்டுக் கொள்கிறது.

தடை முகாமில் இரண்டு பக்கமும் முட்கம்பி அடைக்கப்பட்ட இடத்திற்கூடாக வரிசையாக நகர்த்தப்பட்டு ஒவ்வொருவராக அழைத்து விசாரணை நடக்கிறது. என்னுடைய முறை வந்து விட்டது. முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டே கேள்விக் கணைகள் தொடுக்கப்படுகின்றன. இவர்களுக்குப் பயிற்சியளிக்கும் போதே சிரிக்கக்கூடாது என்று சத்தியம் வாங்கிவிடுகிறார்களோ தெரியாது.

'பெயரென்ன' 'சங்கர்'

'தொழில்' 'டாக்டர்'

'புலிக்கு மருந்து குடுத்ததா?'

எனக்கு வந்த எரிச்சலில் நான் மிருக வைத்தியர் இல்லை என்று சொல்ல நினைத்தாலும் உயிரின் மீதான ஆசை என்னை மௌனியாக்கிவிடுகிறது.

அப்பாடா! ஒருவாறாக விசாரணைகளை முடித்துக் கொண்டு இரவு ரயிலேறி கொழும்புக்கு வந்து சேர்ந்தாயிற்று. தலைநகரின் பிரமாண்டமும் இரவைப் பகலாக்கும் மின்னொளியும் ஏசியின் குளுமையும் பட்ட கஸ்ரத்தையும் களைப்பையும் மறக்கச் செய்ய அப்படியே தூக்கம் அணைத்துக் கொள்கிறது.

**போலியான தலைநகர மக்களையும் உளமார அன்பு செய்த ஊர்மக்களையும் ஒப்பிட்டுப் பார்த்த போது இதயத்தின் ஓர் மூலையிலே மெல்லிய நெருடல் ஏற்படத்தான் செய்தது**

'மகத்தயா நகிடென்ன'. (ஐயா எழும்புங்கள்)

தேனீருடன் நின்ற விடுதிப் பையனின் குரலிலே விழித்தவனாய் மணிக்கூட்டைப் பார்க்கிறேன். ஏழு மணியாகி விட்டிருந்தது. மளமளவென்று குளித்துத் தயாராகி வைத்தியசாலையை அடைகிறேன்.

வைத்தியசாலை என்னைப் பிரமிக்க வைக்கிறது. நோயாளர்களின் நெரிசலிலும் வியர்வையிலும் நனைந்து பழகிய எனக்கு குளிரூட்டப்பட்ட வைத்தியசாலை புது அனுபவத்தைத் தருகிறது.

நோயாளர்கள் வரத் தொடங்கவே நான் தொழிலில் லயித்து விட்டேன். இயந்திர வேகத்துடன் வந்து ஒப்புக்காக உதட்டளவில் ஒரு 'தாங்யுவுடன்' திரும்பிச் செல்லும் இவர்களையும் உளமார அன்பு செய்து தம் இதயத்தில் என்னை வைத்திருந்த ஊர் மக்களையும் ஒப்பிட்டுப் பார்த்த போது இதயத்தின் ஓர் மூலையிலே மெல்லிய நெருடல் ஏற்படத்தான் செய்தது.

எப்போதும் சற்றுத் தூரத்தில் இருந்து பார்க்கும் போது தானே யதார்த்தங்கள் புரிகின்றன.

'தொஸ்தருக்கு வணக்கம்' தடித்த குரலிலான கொச்சைத் தமிழ் என்னை நிமிர்ந்து பார்க்க வைக்கிறது.

'பெகெத் தென்ன' (மருந்து தாருங்கள்)

ஏதோ தந்து வைத்த ஒரு பொருளைக் கேட்பதுபோல அவன் கேட்டது எரிச்சலைத் தந்தது. என்னைச் சீண்ட வேண்டும் என்பதற்காகவே வந்திருக்கிறான் என்பதும் விளங்கியது. என்னைச் சுதாகரித்துக் கொண்டு

'உள்ளுக்கு ஒருவரைப் பார்த்துக் கொண்டல்லவா இருக்கிறேன். போய் வரிசையிலே வாருங்கள்' என்று சிங்களத்தில் அமைதியாகவே சொல்லுகிறேன்.

'ஆ! எகெமத? அபெ பலாதத்தட அவில்லா அபடம உகண்ணணவா .. பற தெமலா. உம்பலாவ மறல தாண்ண ஓணே..' (ஆ! அப்படியா? எங்களது பகுதிக்கு வந்து எங்களுக்கே படிப்பிக்கிறாய். கெட்ட தமிழா? உன்னைக் கொல்லவேணும்)

ஏதோ பிரச்சினை எடுக்கப் போகிறான் என்று உள்ளுணர்வு எச்சரிக்க சிற்றூழியனை அழைத்து அவனை வெளியே அனுப்பும்படி சொல்கிறேன்

'மே மகத்தயாத்தெக்க றண்டுவென்ன மட்டபே. ஒயா கிஹ்ன் லொக்காட்ட கியன்ன' (இந்த ஐயாவுடன் சண்டை பிடிக்க என்னால் ஏலாது. நீங்கள் போய் பெரியவரிடம் சொல்லுங்கள்)

முகத்தில் அடித்ததுபோல் சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

ஆத்திரம் கொப்பளிக்க விறுக்கென்று எழுந்து மேலதிகாரியின் அறைக்குள் சென்று நடந்த சம்பவத்தை ஒப்புவிக்கிறேன்.

'சுட்டக் கலபல நத்துவ வாடிவென்ன' (கொஞ்சம் கலவரமில்லாமல் அமருங்கள்)

ஆசனத்ததைக் காட்டி விட்டு சிற்றூழியனை அழைத்து விசாரித்தவர் செருமலுடனே ஆரம்பிக்கிறார்.

**தன்மானத்தையும் தனித்துவத்தையும் மறந்த மனிதராக (பிராணியாக) வாழச் சம்மதம் என்றால் மட்டுமே தலைநகரச் சௌகரியங்களை அனுபவிக்கலாம்.**

'பதட்டப்பட வேண்டாம். வந்திருக்கிறது ஒரு அரசியல் புள்ளியின் கையாள். அவங்களை எதிர்த்து நான் ஒன்றும் செய்ய ஏலாது. மற்றது நீங்கள் ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறீர்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நாங்கள் உங்களுடைய பக்கத்துக்கு வர முடியாது. ஆனால் நீங்கள் நாடு முழுவதும் சுற்றுவீர்கள். அவர்கள் உங்களை இங்கே இருக்க விட்டிருப்பதற்காக நீங்கள் சந்தோசப்பட வேண்டும்.'

ஆங்கிலத்திலே சொல்லி முடிக்கிறார்.

இது வழமையான இனவாதப் பல்லவி தான். ஆனால் டொக்டர் பெர்னாண்டோ போன்ற ஒருவரிடமிருந்து இதனை நான் எதிர் பார்க்கவில்லை. எனது அமைதியைச் சாதகமாக்கிக் கொண்டு அவரே தொடர்கிறார்.

'சரி, சரி, வந்தவருக்கு மருந்தைக் குடுத்துவிட்டு வேலையைப் பாருங்கள்'

சொன்னவரை இடைமறித்து

'எனக்கேலாது சேர்! மானம் ரோசம் எல்லாம் எனக்கும் இருக்கிறது'

பொரிந்து தள்ளுகிறேன்.

'அப்படியெண்டால் லீவைப் போட்டிட்டுப் போங்க. இல்லாட்டி வீண் பிரச்சினை வரும். உங்களுக்குத் தான் கஸ்ரம்'

தொடர்ந்து பேச்சை வளர்க்க விரும்பவில்லை என்பதற்கு அடையாளமாக தொலைபேசியை எடுத்து யாருடனோ உரையாடலை ஆரம்பித்து விட்டார்.

லீவைப் போட்டுவிட்டு திரும்பி வந்துவிட்டேன்.

அறைக்கதவைப் 'படார்' என்று அடித்துச் சாத்திவிட்டு கட்டிலிலே விழுந்து விட்டேன்.

இங்கே எங்களது கோபத்தைச் சடப் பொருட்களிலே தானே காட்ட முடியும்.

கட்டிலிலே புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வருவதாக இல்லை. மனம் கொதித்துக் கொண்டிருக்கும் போது எப்படி நித்திரை வரும்?

கடவுளைப் போல மதித்து, தங்களில் ஒருவராக அன்பு காட்டிய அந்த மக்களைத் தவிக்க விட்டு விட்டு வந்து இப்படி அவமானப்பட வேண்டி இருக்கிறதே என்ற நினைப்பு கண்களைக் குளமாக்குகிறது.

குளுமை தந்து கொண்டிருந்த 'எயார்கொண்டிசனும்' மேசையில் கிடந்த புறியாணிப் பார்சலும் பஞ்சணை மெத்தையும் வெறுப்பேற்றின.

என்னை மதித்த மக்களிடமே மீண்டும் போய்விட வேண்டும் என்ற எண்ணத்தில் மாற்றல் கோரிக் கடிதம் எழுதிவிட்டு இன்னுமொரு கடிதம் எழுதுகிறேன். அது ரவிக்குரியது.

அன்பின் ரவிக்கு,

தலைநகரம் சொர்க்கபுரியாகத்தானிருக்கிறது. எல்லா வசதிகளும் குவிந்து கிடக்கின்றன. சுகபோக வாழ்க்கை வாழலாம். ஆனால் ஒரு விசயம். தன்மானத்தையும் தனித்துவத்தையும் மறந்த மனிதராக (பிராணியாக) வாழச் சம்மதம் என்றால் மட்டுமே இவற்றை அனுபவிக்கலாம். யோசித்து முடிவெடுக்கவும்.

சங்கர்.

மீண்டுமொருமுறை கடிதத்தை வாசித்துப் பார்த்தபோது மனம் இலேசாகி இருப்பதைப் போலிருந்தது.

*- காவியா*

## அது யார்?

சரியான நாற்றமுள்ள ஒரு மிருகத்தைக் கூண்டினுள் அடைத்துவிட்டு அதனுடன் யார் அதிகநேரம் இருக்கிறார்கள் என்பதே போட்டி.

முதலில் ஓர் ஆங்கிலேயர் உள்ளே போனார். 5 நிமிடங்களுக்குமேல் அவரால் அங்கே இருக்க முடியவில்லை. மூக்கைப் பொத்திக்கொண்டு வெளியே ஓடிவிட்டார்.

அடுத்து ஒரு யப்பானியர் சென்றார். சுமார் 1மணித்தியாலங்கள் உள்ளே இருந்தார். அதற்குமேல் அவரால் உள்ளே இருக்கமுடியவில்லை வெளியே வந்துவிட்டார்.

அடுத்து ஒருவர் உள்ளே சென்றார். அவர் சென்றதுதான் தாமதம் மிருகம் வெளியே ஓடிவந்துவிட்டதாம்.

அவர் இப்போது இந்தக் கதையை வாசித்துக் கொண்டிருக்கிறார்

*-ஊதாரி*

Home Office இல் ஒரே நாளில் Visa பெற்றுத்தரும் சேவை

வேலை அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருதல்

வர்த்தகத்திற்கான வீசாக்கள் பெற்றுத்தருதல்

ஐரோப்பிய நாடுகளுக்கான விண்ணப்பங்கள்

அகதி/குடியுரிமை விண்ணப்பங்கள்,

வீடு, வியாபார ஸ்தாபனம் வாங்குதல் / விற்பனை செய்தல்

வியாபாரப் பிணக்குகள்

Indra Sebastian Solicitors

Administrators of Oaths



Tel: 020 8427 3303 Fax: 020 8427 3313
144 Station Road, Harrow, Middlesex HA1 2RH
Website: issolicitors.co.uk | Email: info@issolicitors.co.uk

**Conveyancing** - Sale, Purchase & Lease of Commercial and Residential Properties and all other types including landlord & Tenant disputes

**Intellectual Property**
Protect your business and goodwill. Trademarks, Copyrights & Patents Litigation/Debt Collection/Business, Disputes

**Matrimonial** - Divorce & Ancillary, Proceedings
Employment

* Immigration
* Home Office Same Day Visa Service
* Work Permits, HSMP, SEGS
* Business Persons
* Doctors - Medical Training Initiatives
* Care Homes - Cares & Nurses
* Hospitality - F&B, Receptionist, Waiters etc.
* Skilled Workers & Domestic Servants
* Marriage & Certificate of Approval
* Asylum & Human Rights
* European Applications (EEC, WRS)
* Entry Clearance & Visa Refusals Appeal
* Students
* Nationality (UK & Sri Lanka)
* Long Term Residency in UK

“இன்ரர்நெட்டில் இருப்போர்க்கோர் இனிய செய்தி
ஓடிப்போய் பாருங்கோ.....”

**orudirectory.com**

oru directory

www.orudirectory.com

# ராமர் கட்டேல்லையாம்!



**மயூரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

தமிழகத்தையும் இலங்கையையும் இணைக்கும் கடலில் மூழ்கியிருக்கும் நிலத் திட்டுக்கள் இன்று ஒரு பாலம் வடிவில் காணப் படுவதால் இதை இராமர் கட்டிய பாலம் என்றும் சமுத்திரத் திட்டத்திற்காக கடலை ஆழப்படுத்தும் போது அதற்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது எனக்கூறிப் புதுப் பிரச்சனை யை தமிழ்நாடு நாடாழுமன்றம் உட்பட பல இடங்களிலும் உண்டு பண்ணியுள்ளனர். முதலில் இந்த நிலத்திட்டுக்கள் (இராமர் பாலம்) மனிதனால் உருவாக்கப்பட்டது தானா என்பதனை ஆராய வேண்டும். உண்மையில் புவியியல், பூகோளவியல் ஆகியவற்றை படித்தவர்கள் உலகில் உள்ள இது போன்ற பல நில்த் திட்டுக்கள் குறித்துப் படித்திருப்பார்கள். அதாவது இரண்டு கண்டங்களை அல்லது நிலப்பகுதிகளை இணைக்கும் மெல்லியதான நிலப்பகுதியை இஸ்மஸ் isthmus என்பார்கள். இந்நிலப்பகுதிகள் உலகில் ஏராளமாக உள்ளன அவை கடலில் மூழ்கியோ அல்லது கடலுக்குச் சற்று மேலே நிலத் திட்டுக்களாகவோ அல்லது ஒன்றிணைந்து கோர்வையான தீவுகளாகவோ காணப்படுகின்றன.

இதற்கு உதாரணங்களாக வட தென் அமெரிக்காக்களைப் பிரித்திருந்த நிலத்திட்டானது வெட்டப்பட்டு பனாமாக் கால்வாய் உருவாக்கப்பட்டது. இதன்மூலம் கப்பல்களின் பயணத்தூரமும் நேரமும் குறைக்கப்பட்டது. மேலும் மத்திய தரைக்கடலையும் செங்கடலை யும் இணைத்த மெல்லிய நிலத்திட்டு வெட்டப் பட்டதன் மூலம் சுயெஸ் கால்வாய் உருவானது.

அத்தோடு மட்டுமல்ல நியூஸிலாந்தின் வட பகுதியில் உள்ள ஆக்லாண்ட் தீவின் மேல் பகுதியை அதன் கீழ்ப்பகுதியில் உள்ள கிரேட்டர் ஆக்லாண்டுடன் இணைக்கும் பகுதியும் இராமர் பாலம் போன்று கடலில் மூழ்கியுள்ள ஒரு சின்ன நிலத்திட்டேயாகும். மேலும் கனடா நாட்டிற்கருகில் உள்ள நியூபவுண்ட்லாண்ட் எனப்படும் தீவுப்பகுதியை இணைப்பதும் இது போன்ற நிலத்திட்டே.

அடுத்து ஆர்ஜெண்டீனாவின் கடல் பகுதியில் உள்ள போல்க்லாண்ட் தீவின் கிழக்குப் பகுதியை மேற்குப்பகுதியுடன் இணைப்பதும் இவ்வகையான நிலத்திட்டேயாகும். அத்தோடு அவுஸ்திரேலியாவில் டாஸ்மானியா பகுதியை அண்டியுள்ள புருனித் தீவுகள் நீரால் மூடப்பட்ட ஒரு சிறு நிலத்திட்டுப் பகுதியாலேயே இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல உதாரணங்களைக் கூறிக்கொண்டே போகலாம். இதேபோல்தான் இராமேஸ்வரத்தையும். தலை மன்னாரையும் இணைக்கும் நிலத்திட்டொன்று உள்ளது. இதையே இராமர் பாலம் என்று பலர் கூறுவர். அது பாலம் அல்ல நிலத்திட்டேயாகும். அப்படியென்றால் இந்நிலத்திட்டு எவ்வாறு உருவானது என்பதனை நோக்கலாம். பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இன்று தனித்தனியாக இருக்கின்ற கண்டங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே நிலப்பகுதியாகவே இருந்தன. இதனை பாங்கியா அல்லது பஞ்சியா கண்டம் என அழைத்தனர். இதன் வட பகுதியை அங்காரா (Angara) என்றும். தென் பகுதியை அதாவது தென்னிந்திய, அவுஸ்திரேலிய அரேபிய மற்றும் ஆபிரிக்காவை உள்ளடக்கிய நிலப்பகுதியை கொண்டவானா (Gondwanaland) என்றும் அழைத்தனர். புவியின் மையப்பகுதியில் இறுகாமல் அதிக வெப்ப நிலையில் உள்ள பாறைக்குழம்பு இறுக ஆரம்பித்ததால் அதன் மேல்ப்பகுதி சுருங்கத்தெடங்கியது. இதன் காரணமாக புவியின் உட்பகுதியில் ஏற்பட்ட கிளர் மின்வீசல் மேற்காவுகை ஓட்டம் போன்ற வற்றினால் ஒன்றாய் இருந்த நிலப்பகுதி கண்டங்களாக பிளந்து நகர ஆரம்பித்தது. இதனைத்தான் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டநகர்வு என அழைத்தனர். உவெக்னரின் கண்டநகர்வுக் கொள்கையும் இது போன்றதே ஆகும்.

இவ்வாறு ஆபிரிக்க தென்னிந்திய நிலப் பகுதிகள் (கொண்டவானா) புவியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக, உதாரணமாக நில நடுக்கம் எரிமலை ஆகியவற்றினால் இக்கண்டங் களைத் தாங்கிநிற்கும் பெரும்பாறைகள் ஒன்றோடொன்று மோதியும் ஒன்றைவிட்டு ஒன்று விலகியும் செல்கின்றன. இதனால் தென்னிந்தியக் கண்டங்கள் மெல்ல மெல்ல நகரத் தொடங்கின. இதை லெமூரியா (Lemuria) என்றழைத்தனர். இவ்வாறு ஒன்றாக இருந்த நிலப்பகுதி தனித்தனியாக பிரிந்து விலகியபோது அப் பகுதிகளுக்கு இடையே உள்ள நிலப்பகுதிகள் கடலில் மூழ்கின. அப்படி மூழ்கிய பகுதிகளின் முனை கள்தான் இப்படி இரண்டு நிலப்பகுதிகளுக்கு இடையே தெரியும் நிலத் திட்டுக்களாகும். அப்படியானதொன்றே இராமர் பாலமும் ஆகும்.

அத்துடன் சேது சமுத்திர திட்டத்தில் கடலை ஆழப்படுத்தும் நிலத்திட்டின் தாய்ப்பாறைகளை விஞ்ஞானப் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய தொல்லியலாளர்கள், இப்பாறைகள் 17 இலட்சம் ஆண்டுகள் பழமை வாய்ந்தன என விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தியதோடு இதற்கு முன்னரே இலங்கை இந்தியாவில் இருந்து பிரிந்திருக்க வேண்டும் எனவும் கருதினர். அத்தோடு இரண்டு முக்கிய நீரோட்டங்கள் எதிரெதிர் திசைகளில் வந்து பாக்கு நீரிணையில் இராமேஸ்வரத்திலிருந்து தலை மன்னாருக்கான நேர்கோட்டில் ஒன்றை யொன்று எதிரெதிராகச் சந்திக்கின்றன. அதாவது இந்தோனேசியா மற்றும் யாவா சுமாத்திரா பகுதிகளில் இருந்து வரும் நீரோட்டமும் ஆபிரிக்கப் பகுதியில் இருந்து வரும் நீரோட்டமும் பாக்கு நீரிணையில் ஒன்றையொன்று நேரெதிர் மோதுகின்றன. இதனால் தான் 2004. டிசம்பர் 26ல் யாவா சுமாத்திராவில் ஏற்பட்ட புவி நடுக்கத்தால் இலங்கையில் சுனாமி ஏற்படக் காரணமாக இருந்தது. இந்நீரோட்டங்கள் காரணமாக கரையிலிருது அரித்துக் கொண்டு வரப்படும் மணல்கள். அடையல்கள் பாலம் வடிவில் அலைகளினால் குவிக்கப்படுகின்றன. இப் பாலம் வடிவில் காணப்படும் மணல்த்திட்டு இறுகிப் பாறையாகின்றது. இது கடல் மட்டத்திலிருந்து 1.2 மீற்றர் ஆழத்தில் 30 கி.மீ. நீளத்தில் காணப்படினும் சில இடங்களில் 10 மீற்றர் வரை ஆழமாகக் காணப்படுகிறது. எனவே இது இராமர் கட்டியதாக இருக்க முடியாது என்றனர்.

## பகுதி-ஒன்று

அத்தோடு மட்டுமல்ல புவியின் இயற்கையான தரைத்தோற்ற அமைவிடம் காரணமாக இந்தியாவை விட இலங்கை நான்கு அடி பதிந்து (ஆழமான பகுதியில்) காணப்படுகிறது. இதன்காரணமாக இந் நீரோட்டங்களால் அடித்து வரப்படும் மணல்கள், அடையல்கள் என்பன இலங்கைப் பக்கம் அதிகம் படிவதால் மன்னா ர் பகுதியில் ஆழம் குறைந்த கண்டமேடைகள் உருவாகின்றன. இதனால் கடலின் கீழ் இரண்டு பகுதிகளும் சம ஆழக்கோட்டு உயர வேறுபாடுகளால் வித்தியாசம் அடைகின்றன. உதாரணமாக இந்து கங்கைச் சமவெளிப் பிரதேசத்தில் உள்ள தாமோதார் பள்ளத் தாக்கில் காணப்படும் எண்ணெய்ப்படிவானது, மன்னார் பகுதியில் உள்ள எண்ணெய்ப் படிவுகளை தோண்டும் போது தீர்ந்து போகும் நிலையே உள்ளது. இதுவும் சம ஆழக்கோட்டின் வேறுபாட்டால் தான் நிகழ்கின்றது. எனவே இம்மணல் திட்டு (இராமர் பாலம்) ஒன்றாக இணையும் சந்தர்ப்பம் இல்லை. இது எப்போதுமே இணையமாட்டாது எனக்கூறினர். மாறாக இதை இராமர் கட்டினார் எனக் கூறுவது பொருத்தமாகாது என்றனர்.

அத்துடன் புவியில் ஏற்படும் மாற்ற ங்களால் கடல் கோள்கள் ஏற்பட்டு இந் நிலத் தட்டுக்கள் (இஸ்மஸ்) உருவாவதும் உண்டு. சுவாத்திய வேறு பாடுகள் காரணமாக குளிர் வலயங்களில் பனிப்படலங்கள் (Glacials) உறைகின்ற போது உஷ்ண வலயங்களில் கடும்மழை (Pluvials) பெய்வத னால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நிலப் பரப்புக்கள் நீருள் தாழ்ந்துவிட வாய்ப்புக்கள் உண்டு. அத்தோடு பனிப் படலங்கள் வெப்ப காலத்தில் உருகியோடுவதனாலும் இந்நிலை ஏற்படலாம். அத்துடன் தென்னிந்தியாவில் இருந்து இலங்கையானது முக்கிய ஐந்து கடலலைகளால் மேலும் பிரிந்தன என நிலநூல் வல்லுனர் ற. ஸ்கொட் எலியட் விபரித்துள்ளார்.

புவியில் முதலாவது வெள்ளப் பெருக்கு அட்லாண்டிக் கடல் இருந்த பகுதியில் ஒரு நிலப் பரப்பு இருந்ததாகவும் அது எரிமலை வெடிப்புக் காரணமாக அவை ஆட்டி அலைக் கப்பட்டு பனிக் கட்டிகள் சிதைவடைந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது இதனால் இந்தியப் பகுதிகள் சில (கொண்டவானா) நீரில் மூழ்கின எனவும் இதுவே இலங்கை இந்தியாவில் இருந்து பிரிந்ததன் ஆரம்பம், இது கற்கால கலாச்சாரம் (Stone Age) வளர்ந்த பின் பிரிந்திருக்கலாம் எனவும் நம்பினார். .

